குடும்பத்துடன் களிக்க...

# கல்கி

KALKI
21.8.2005
ரூ.7.00
96 பக்கங்கள்





தேர்தலுக்கு ரெடி!

'இனி படமெடுக்கக் கூடாது!'



# நடிகைகள் வரவேண்டாம்!




இதுவரை எவரும் தந்திராத
916 KDM தங்க நகைகளுக்கு

# 10% மட்டுமே

# சேதாரம்

கல்கத்தா, பாம்பே, ஹைதராபாத், கேரளா,
பெல்காம் டிசைன்களில்.

**ஜுவல்லரி சோழா**
32,வடக்கு மாட வீதி
மைலாப்பூர், சென்னை-4.
Ph : 2464 0199, 2461 5705



## உள்ளே...



| | |
|---|---|
| தலையங்கம் | - 13 |
| அருள்வாக்கு | - 18 |
| வெற்றி உங்கள் சாய்ஸ் | - 32 |
| அமரர் கல்கி | - 58 |
| ராசிபலன் | - 80 |
| தராசு | - 92 |

அம்மா தொகுதி ரெடியா?! 8





கல்கி 21.8.2005



அரசியலில் சம்பாதிக்கப் போட்டி போடும் அரசியல்வாதிகள் மத்தியில், அரசியலுக்காகச் செலவழிக்கும் வசந்தகுமார் எங்கள் மதிப்பில் உயர்ந்துவிட்டார்.
சென்னை, லலிதா செல்லப்பா



வாரம் ஒரு குடும்பம்! கலக்குங்க!
பெங்களூர், யமுனா பார்வதி

அன்றைக்கும், இன்றைக்கும் பொருந்துவது போல் இருந்தது அமரர் கல்கியின் 'சென்னை அகராதி.'
மதுரை, என்.பாலகிருஷ்ணன்

# புத்தம் புது உற்சாகம்!

காக்கும் கரங்களான காக்கிச் சட்டைகள், அப்பாவி மக்களைத் தாக்கும் அரக்கத்தனமான கொடுமை பற்றிக் குமுறியிருந்த தலையங்கம், சூப்பர்!
இனாம் மணியாச்சி, ச.ஆ.கேசவன்

மூன்று வெவ்வேறு தளங்களில் தொடங்கியுள்ள புதிய தொடர்கள், புத்தம் புது உற்சாகத்தை எங்களுக்குள் ஏற்படுத்துகின்றன.
பொன்மலை, ஆர்.பிரகாஷ்

ஆடித் தள்ளுபடியில் நம்மூர் பிரபலங்கள் வாங்க நினைப்பது எதுவாக இருக்கும் என்பதைப் படித்து முடித்து ஆடிப் போய்விட்டேன்.
ஈரோடு, வி.கே.சுப்ரமணியன்

பா. விஜய்யை பரமு கேட்ட பத்துக் கேள்வியும் போட்டுத்

நேதாஜியின் நினைவுகள் நெஞ்சை நெகிழ வைத்துவிட்டன.
கும்பகோணம், எல்.வெங்கட்ராமன்

'காலம் கடந்தும் நிற்கக்கூடியது கல்கியின் படைப்புகள். மூன்று மணி நேர சினிமா வந்து அதை ஒன்றும் செய்துவிட முடியாது' என்ற ராதாமோகனின் வரிகள் டச்சிங்.
லோயர் அணைக்கட்டு, பி.இராஜேந்திரன்

வாரம் ஒரு வாசகரின் தொடர்ச்சியாக இப்போது,



## வாரம் ஒரு வாசகர்!

'உள்ளம் துறந்தவன்' தொடர் மூலம் சுஜாதா செஞ்சுரி போட்டுவிட்டார்!
ஈரோடு, ராதாகிருஷ்ணன்

மஞ்சரியும், அழகேசனும் வாசகர்களின் நினைவலைகளில் என்றும் மிதந்துகொண்டே இருப்பார்கள்!
தேனி, அகிலா

வாசகர் உள்ளத்தைக் கவரும் வகையில் உள்ளம் துறந்தவனை வித்தியாசமான நடையில், விறுவிறுப்புடன் கொண்டு சென்று, மனதைத் தொடும் வகையில் முடித்திருந்தார் சுஜாதா.
அயன்புரம், சத்தியநாராயணன்



தாக்குதான்!

**கோவை, ரங்கநாயகி**

**பி**டிபட்டவன் கதையின் முடிவில் நீதிபதி மருதப்பனைக் கேட்ட கேள்வி அவனைத் தாக்கியதோ இல்லையோ, படித்த என்னைத் தாக்கிவிட்டது. முதல் பரிசுக்கு நல்ல தேர்வு.

**சென்னை, குவளை எழில்**

**ப**ல தயாரிப்பாளர்களின் பிரச்னைக்குத் தூங்காத வட்டியும், துரத்தும் அட்வான்ஸும் மட்டுமல்ல காரணம். பல கோடிகள் பார்க்கலாம் என்ற பேராசையும்தான்.

**திருச்சி, இ.முகம்மது உசேன்**

**எ**னது இயக்கத்தில் வெளியான 'பிப்ரவரி 14' திரைப்பட விமர்சனம் படித்து மனம் புண்பட்டேன். எந்தவித ஆபாசமும் இல்லாமல் குடும்பத்துடன் பார்க்கும்படியான ஒரு படத்துக்கு, இவ்வளவு கடுமையான விமர்சனம் கல்கியில் எழுதப்பட்டது ஏன் என்று புரியவில்லை. தனிநபரைச் சாடும்விதமாக என் பெயரைக் குறிப்பிட்டு எழுதியதும் மனம் புண்படச் செய்கிறது.

**எஸ்.பி.ஹோசிமின், இயக்குனர்**

'**உ**ள்ளம் துறந்தவன்' கடைசி வரிகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட வேண்டியவை.

**கோவை, கணேஷ்**

**ம**னித மனிதம் உணர்ச்சிகளுக்கு அடிமை யாவது இயற்கைதான் என்பதை நிரூபித்த தொடர், உள்ளம் துறந்தவன்!

**கோவை, வைதேகி கண்ணன்**




**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

# 'நியூ' விவகாரம்...

# "எஸ்.ஜே.சூர்யா இனி

'நியூ' படத்துக்கு சென்னை உயர்நீதி மன்றம் அண்மையில் தடைவிதித்திருக்கிறது. 'இப்படத்தில் வரும் காட்சிகள் சிறுவர்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக உள்ளது. இளைஞர்களிடம் சிற்றின்பத்தைத் தூண்டும் விதத்தில் படமாக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு ஆரோக்கியமான பொழுதுபோக்கை அளிப்பதாக இப்படம் இல்லை. இப்படம் ஒரே ஒரு செய்தியை மட்டுமே தருகிறது. அது என்னவென்றால், கொச்சைத்தனம். இப்படத்தைத் தடை செய்யவில்லை என்றால், தமிழக வரலாற்றில் கரும்புள்ளியை இடம்பெறச் செய்வதாக ஆகிவிடும்!' என்று நீளும் அத்தீர்ப்பு, கடும் விளைவுகளை பல மட்டத்திலும் ஏற்படுத்தியிருக்கிறது.



• சீமான்

இத்தகைய தீர்ப்பு வர முழு முதற் காரணமான வழக்கறிஞர் அருள்மொழி, "நியூ படத்துக்குச் சான்றிதழ் வழங்குவதில் ஏகப்பட்ட குளறுபடிகள் நடந்துள்ளன. அதன் உறுப்பினர்கள் பலர் இப்படத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், எப்படிச் சான்றிதழ் வழங்கினார்கள் என்றே புரியவில்லை. மும்பையிலிருந்து அனுபம்கெர் அனுமதிக்கச் சொன்னார் என்கிறார்கள். சென்சாரிலுள்ள ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த பெண்மணி பணம் வாங்கிக் கொண்டு படத்தை ரெகமண்ட் செய்தார் என்கிறார்கள். எது எப்படியோ, 'நியூ' படத்துக்கு சென்சார் அனுமதி வழங்கியது ஊழல் சார்ந்த செயல்பாடாகத்தான் தெரிகிறது" என்றவர், தொடர்ந்து, "இன்று தமிழ் சினிமா ஆபாச நோக்கமுள்ள வியாபாரிகள், கந்துவட்டிக்காரர்கள் கையில் சிக்கிக் கொண்டுள்ளது. படத்தையும் ஆபாசமாக எடுத்துவிட்டு, அதைத் தட்டிக் கேட்பவர்களை எஸ்.ஜே. சூர்யா சாடுவதும், தம் செயலுக்குத் தெனாவெட்டான விளக்கமளிப்பதும் அதைவிட அராஜகமாகத் தெரிகிறது. திருந்த முடியாத இடத்தில் அவர் இருக்கிறார். தம் மனக்கோளாறுகளை சினிமாவில் காண்பித்து, இளைஞர்களை அவர் கெடுக்க வேண்டாம். கெடுப்பதாக இருந்தால், இனி படமே எடுக்க வேண்டாம். இதுவரைக்கும் வந்த தமிழ்ப் படங்களில் ஆபாசத்தின் உச்சகட்டம் என்றால், அது 'நியூ'தான்" என்று கொந்தளித்தார்.



• கமிஷனர்

'நியூ'விலுள்ள ஆபாசக் காட்சிகளை நீக்க வேண்டும் என்று போராடியவர்களில் முக்கியமானவரான மாதர் சங்கத்தைச்

> "தன் மனக் கோளாறுகளை
> சினிமாவில் காண்பித்து
> இளைஞர்களை கெடுக்கிறார்
> எஸ்.ஜே. சூர்யா!"



• அருள்மொழி



• வாசுகி

## - வலுக்கும் எதிர்ப்பு

சேர்ந்த வாசுகி, தாம் 'பாய்ஸ்' படத்துக்கு எதிராகத் தொடுத்த வழக்கின் தீர்ப்பையும் விரைவில் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.


'நியூ'வுக்கு எதிரான இந்தத் தீர்ப்பு, திரையுலகிலேயே பலரிடம் பலமான ஆதரவைப் பெற்றிருக்கிறது. "உங்களிடம் மட்டுமல்ல, பொதுமேடையிலும் தைரியமாகச் சொல்வேன். 'நியூ'வுக்கு முன்பே 'பாய்ஸ்' படத்தைத் தடை செய்திருக்க வேண்டும்" என்று தடாலடியாக ஆரம்பித்தார் இயக்குநர் சீமான்.

"அவ்வப்பொழுது தமிழ்த் திரையுலகிற்குள் நுழைந்து தமிழ் மக்களின் உணர்வுகளைப் படமாகக் காட்டி, 'இப்படியும் படம் எடுக்கலாம்டா' என்று சொல்லிவிட்டுப் போகிறார் ஃபாசில் என்கிற மலையாள இயக்குனர். ஆனால் நம் இயக்குனர்களின் 'நியூ', '7ஜி ரெயின்போ காலனி' படங்களைப் பார்த்தால் யாராவது தமிழ்ப் படம் என்று சொல்வார்களா? 'காதல்' படம் பார்த்துவிட்டு, பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவே பயப்படுகிறார்கள் பெற்றோர்கள். பருவ உணர்ச்சிகளையும், வக்ர சிந்தனைகளையும் தூண்டும் 'நியூ' மாதிரியான படத்தை ஒருவர் எடுக்கத்தான் வேண்டுமா? ஹீரோயினுக்கு முத்தம் கொடுப்பது மாதிரி போஸ்டர் அடிப்பதுதான் ஒரு படைப்பாளிக்கு உகந்ததா? இங்கிலீஷ் படத்தை காப்பியடித்து தமிழ்ப் படம் பண்ணக்கூடாது.

# படமெடுக்கக் கூடாது!"







• ஆவேச ...

படைப்பாளிக்குக் கொஞ்சமாவது மான ரோஷம் வேண்டும். எவன் கேட்பான். நம்மை என்ன செய்து விடுவார்கள் என்கிற தான்தோன்றித்தனத்தின் வெளிப்பாடுதான் இது. சமூகக் குறைபாடுள்ள படம் என்று நீதிமன்றம் விமர்சிப்பதை விட, வேறென்ன அவமானம் இருக்க முடியும்? இதற்கு எஸ்.ஜே.சூர்யா வெட்கித் தலைகுனிய வேண்டும்'' என்றார் ஆக்ரோஷமாக.


“நியூ போன்ற படங்களை அளிக்கும் வியாபாரிகள், தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கு உடனடியாக கைநீட்டுவது இளைஞர்களான எங்களைத்தான். 'நீங்கள் ரசிப்பதால்தானே நாங்கள் எடுக்கிறோம்' என்று கூலாக நழுவி விடுகிறார்கள். உண்மையில் இது ஒரு சப்பைக்கட்டு. இவர்களாக சமூகத்தைக் கெடுக்கும் ஒரு படத்தை எடுத்துவிட்டு, பழியை எங்கள் மீது போடுவது என்ன நியாயம்? இந்த எஸ்.ஜே.சூர்யா, தம்பி மனைவியை ரசிக்கிற அண்ணன், இடுப்புப் பகுதியைப் பார்த்ததால் உருவான காதல், சின்னப் பையன் அப்பாவாவது என்று, முடிந்தளவு கீழ்த்தரமாகத்தான் படமெடுத்துக் கொண்டிருக்கிறார். ருசி கண்ட பூனை போல் அடுத்ததாக 'அ... ஆ' என்று தலைப்பு வைத்து, அதுக்குக் கீழ் BF என்று சப்டைட்டில் போடுகிறார். இதுமாதிரியான கெட்ட சிந்தனையுடைய இயக்குனர்களைப் படமெடுக்க விடாமல் அரசாங்கம் தடை செய்யணும். கோர்ட்டுல சொன்ன மாதிரி, ஆரோக்கியமான பொழுது போக்கை ரசிக்கறதுக்குத்தான் நாங்க சினிமாவுக்குப் போறோம். தான் பணம் சம்பாதிப்பதற்கு இளைஞர்களை பகடைக் காயாகப் பயன்படுத்துவதை எஸ்.ஜே.சூர்யா நிறுத்தணும்'' என்றனர் நம்மிடம் பேசிய இளைஞர்கள் ஆவேசமாக.



• பாபு ராமசாமி

• ... இளைஞர்கள்!





சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் நட்ராஜ் பெயரும் இத்தீர்ப்பில் அடிபட்டிருக்கிறது. 'எஸ்.ஜே.சூர்யா மீதான புகார்கள் குறித்து போலீஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை' என்று கூறியுள்ள நீதிமன்றம், வழக்குகள் புலன் விசாரணை செய்யப்படுவதை கமிஷனர் உறுதி செய்ய வேண்டுமெனவும் கூறியுள்ளது.

''சமீபத்திய சர்ச்சைகளுக்குப் பிறகு 'கமிட்டி' ஒன்றை நிறுவி, அத்துமீறல்களை இன்னும் தீவிரமாகக் கண்காணிக்க உள்ளோம். பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் என்ன மாதிரியான படங்களுக்குச் செல்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும்'' என்றார் கமிஷனர்.

'நியூ' படம் சென்சாரான போது மண்டல அதிகாரியாக இருந்தவர் ராஜு. தற்பொழுது இருப்பவர் பாபு ராமசாமி. ''நியூ படத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காட்சிகளை வெட்டிவிட்டுத்தான் சான்றிதழ் அளிக்கப்பட்டது. விதிமுறைகளை மீறுபவர்களை கண்காணிக்க ஒரு ஏஜென்ஸியை சென்சார் நியமித்துள்ளது. அவர்கள்தான் எஸ்.ஜே.சூர்யா செய்த விதிமீறல்களைக் கண்டுபிடித்தனர். இனியும் கடுமையாக இருப்போம்'' என்கிறார் ராமசாமி.

எதிர்ப்புகள் தொடர்ந்து வலுத்துக் கொண்டிருக்க, பதில் வேண்டி நாம் எஸ்.ஜே.சூர்யாவை அணுகியபோது, ''என் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் எனது அடுத்த படம் (அ... ஆ) பதிலளிக்கும்'' என்று சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

**- ச.ந. கண்ணன்**

படங்கள் : **ஸ்ரீஹரி, ராஜன்**

# ANNAMALAI UNIVERSITY

## DIRECTORATE OF DISTANCE EDUCATION

ANNAMALAI NAGAR - 608 002. Ph: 04144-238610 / 237160 Fax : 04144-238987 E-mail : audde-diroff@yahoo.co.in

## ADMISSION NOTIFICATION - ACADEMIC YEAR - 2005 - 2006

## Information Technology Courses Offered

**Post Graduate Programmes**

1. M.C.A. (Master of Computer Application) - 3 years
2. M.Sc. Information Technology
3. M.Sc. Software Engineering
4. M.Sc. Computer Science
5. M.Sc. Bio-Informatics (PCP only at Annamalai Nagar)
6. M.Com. Computer Application
7. P.G.Dip.in Computer Application - 1 year
8. P.G.Dip in Library Automation and Networking-1year

(Items 2–6: 2 years)

**Under Graduate Programmes : 3 years**
**(Regular / Open University System)**

1. B.C.A.
2. B.Sc. Computer Science
3. B.Sc. Information Technology
4. B.Sc. Visual Communication
5. B.Com. Computer Application
6. B.B.A. Computer Application
7. B.Sc. Maths with Computer Application
8. Dual Degree System - 2 degrees in 4 years (Regular Stream only)
9. Double Degree System - 1 year (Regular Stream only)

(Items 1–7: 3 years)

**Lateral Entry Scheme for the following courses for PGDCA, PGDIT, DOEACC & MBA System holders**

1. **M.Sc.** Computer Science
2. **M.Sc.** Software Engineering
3. **M.Sc.** Information Technology

(1 year)

**Lateral Entry Scheme for MCA**

1. M.B.A System holders can join 3rd year of MCA
2. PGDCA, PGDIT, DOEACC & BCA holders can join 2nd Year of MCA

**Lateral Entry options for PG / UG Programmes**

1. **M.C.A.**
2. **M.Sc.** Computer Science
3. **M.Sc.** Software Engineering
4. **M.Sc.** Information Technology
5. **B.C.A.**
6. **B.Sc.** Computer Science
7. **B.Sc.** Information Technology
8. **B.Sc.** Visual Communication

Eligibility : Students who have completed 1st/2nd year of the above courses from other Universities are also eligible to join 2nd/3rd year of the respective UG/PG Programmes. Similarly, the candidates who have completed 3 year Diploma after +2 are eligible to join 2nd year UG Programs.

**Annamalai University, DDE, Computer Training Centres will Conduct Compulsory PCP Classes and Computer Lab Training all over Tamilnadu & India**

## HMH EDUCATION CONSULTANTS (CHENNAI)

The National Co-ordinator, Annamalai Univeristy - IT Programmes

Ph : 91-44-28518241, 28518242 Fax : 28518240 E-mail :hmhec@vsnl.net Website : hmhec.in

### Annamalai University Computer Training Centres

Chennai : ✆ : **28261190** ; Chidambaram : ✆ : **238856** ; Coimbatore : ✆ : **2498557, 2492559** ; Erode : ✆ : **2269990** ; Hosur : ✆ : **242985** ; Kanchipuram : ✆ : **220333** ; Karaikudi : ✆ : **238081** ; Krishnagiri : ✆ : **238583** ; Madurai : ✆ : **5383003** ; Mayiladuthurai : ✆ : **243440** ; Nagercoil : ✆ : **228015** ; Namakkal : ✆ : **226141** ; Ooty : ✆ : **2445915** ; Pondicherry :✆ : **2205253** ; Salem : ✆ : **2253805** ; Tanjore : ✆ : **570140** ; Thiruvannamalai : ✆ : **227583** ; Thiruvarur : : 242972 ; Thirunelveli : ✆ : **2331523, 2336488** ; Tirupur : ✆ : **5324999, 2206244** ; Trichy : ✆ : **2705876, 2717344** Tuticorin : ✆ : **2376289** ; Vellore : ✆ : **2243564, 2242439** ; Villupuram : ✆ : **250605** ; Cochin : ✆ : **2382109** : Nileshwaram : ✆ : **2282764, 2280010** ; Kannur : ✆ : **2203355** ; Thiruvananthapuram : ✆ : **2574996** ; Thrissur : ✆ : **2826364, 2826365** ; Kottayam : ✆ : **2301932, 2564961** ; Calicut : ✆ : **2306678** ; Bangalore : ✆ : **26606645** ; Hyderabad : ✆ : **23205738, 23205739** ; Vishakapatnam : ✆ : **2760805** ; Vijayawada : ✆ : **5514911, 5524911** ; Guntur : ✆ : **5532180, 2237923** ; Mumbai : ✆ : **56052318** ; Jaipur : ✆ : **2701041, 2708039** ; Kota : ✆ : **2708039** ; New Delhi : ✆ : **51668165, 51668164** ; Kolkata : ✆ : **22178303, 22178305** ; Dhanbad : ✆ : **2223455** ; Ranchi : ✆ : **3096070** ; Andaman : ✆ : **237977** ; Guwhati : ✆ : **2457092**

### Annamalai University Study Centres

Annamalainagar : ✆ : **238610, 237160** ; Chennai-Egmore : ✆ : **28555010, 28554003** ; Chennai - Chrompet : ✆ : **22388035** ; Chennai-Ambattur :✆ : **26572169** ; Chennai - Thiruvanmiyur :✆ : **24490488** ; Chengalpattu : ✆ : **223878** ; Ariyalur :✆ : **220592** ; Coimbatore :✆ : **2234406** ; Coimbatore-Singanallur : ✆ : **2594245** ; Dharmapuri :✆ : **270234** ; Dindigul : ✆ : **2424211** ; Erode : ✆ : **2214787** ; Hosur : ✆ : **241254** ; Kancheepuram : ✆ : **235950** ; Kannur :✆ : **2703387** ; Karaikal :✆ : **221233** ; Karaikudi : ✆ : **226417** ; Karur : ✆ : **231567** ; Krishnagiri :✆ : **238373** ; Madurai : ✆ : **2628327** ; Mettur :✆ :**245777** ;Nagercoil : ✆ : **238561** ; Namakkal : ✆ : **233677** ; Ooty : ✆ : 2444414 ; Pondicherry :✆ : **2202000** ; Pudukottai : ✆ : **224824** ; Salem :✆ : **2451666** ; Salem - Five Road Junction :✆ : **2332094** ; Sivakasi : ✆ : **220050** ; Tanjore :✆ : **278986** ; Theni : ✆ : **265420** ; Thiruvannamalai :✆ : **222687** ; Thiruvarur : ✆ : **244221** ; Tirunelveli : ✆ : **2331288** ; Trichy : ✆ : **2741950** ; Tuticorin : ✆ : **2326668** ; Vellore : ✆ : **2227647** ; Villupuram : ✆ : **226550** ; Alleppey :✆ : **2230789** ; Bangalore : ✆ : **26564926** ; Calicut :✆ : **2744877** ; Chandigarh :✆ : **2612822** ; Cochin : ✆ : **2226436** ; Ernakulam : ✆ : **2376103** ; Hyderabad :✆ : **27661186** ; Jaipur :✆ : **2722484** ; Kolkata : ✆ : **24667215** ; Lucknow : ✆ : **2343230** ; Mumbai : ✆ : **55550339** ; New Delhi : ✆ :**29958082, 29957638** ; Quilon : ✆ : **2794105** ; Thiruvananthapuram : ✆ : **2325141** ; Tirupathi : ✆ : **2260374** ; Thrissur :✆ : **2321659** ; Vijayawada : ✆ : **2555755** ; Visakhapatnam : ✆ : **2540166**

---

**Dr.M.RATHINASABAPATHY, Registrar** | **Dr. S.B. NAGESWARA RAO, Director, DDE**



• சிறுதாவூர் பங்களா...

# அம்மா தொகுதி

திருப்போரூர் - இதுவரை தனித் தொகுதியாக இருந்தது. சமீபத்திய தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு பொதுத் தொகுதியாக மாறியிருக்கிறது. அது மட்டுமல்ல... தற்போது இந்தத் தொகுதிக்கு நட்சத்திரத் தொகுதி அந்தஸ்து வேறு கிடைத்துள்ளது. ஆம்... விரைவில் இத்தொகுதி அம்மாவின் செல்லத் தொகுதியாகப் போகிறது. தமிழகத்தில் எத்தனையோ தொகுதிகள் இருந்தும், இந்தத் திருப்போரூரை அம்மா தேர்ந்தெடுத்தது எதற்காம்... விஷயம் இல்லாமல் இல்லை.


முதல்வர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான பையனூர் மற்றும் சிறுதாவூர் பங்களாக்கள் இரண்டுமே இந்த தொகுதிக்குள்தான் வருகின்றன. கடந்த ஆறு மாதங்களாக இங்கு தங்கியிருந்துதான் கோட்டைக்குச் சென்று வருகிறார் முதல்வர். அப்படிப்பட்ட தொகுதி தன் வசம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று முதல்வர் நம்புவதாலேயே, இத் தொகுதியைத் தேர்ந்தெடுத்தார் என்கிறார்கள் இத் தொகுதி மக்களில் ஒரு பகுதியினர். அதேசமயம் சமீபத்தில் நடந்த காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லுமுன், திருப்போரூர் கோயிலில் குடிகொண்ட கந்தசுவாமியை வேண்டிச் சென்ற பின்னர் இரண்டிலும் வெற்றி கிட்டியதால், முதல்வரை இத்தொகுதி சென்டிமென்டலாக 'டச்' செய்துவிட்டதாகக் கூறுகின்றனர் சிலர்.

முதல்வர் வரும் சட்டமன்றத் தேர்தலின் போது, இங்கு இருந்துதான் போட்டியிடக் கூடும் என்ற செய்தி வரத்தொடங்கிய நிமிடம் தொட்டு, இந்தத் தொகுதியில் ஸ்பெஷல் கவனிப்புகள் நடப்பதாகவும், முடங்கிக் கிடந்த பணிகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருவதாகவும், பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதாகவும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. சரி... முதல் வருக்காக தொகுதி எப்படியெல்லாம் தயாராகிறது என்று ஒரு முறை பார்த்துவிட்டுத்தான் வருவோமே என்று திருப்போரூரை வலம் வந்தோம்.

• திருப்போரூர் முருகன் கோயில்



தற்போது இங்கு என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பது குறித்து





# ரெடியா?!

பா.ம.க நகரச் செயலாளர் சம்பத் நம்மிடம் பேசினார்:

"இந்தத் தொகுதி ஜெனரல் தொகுதியா ஆகணும்னு ரொம்ப நாளா எதிர்பார்த்தோம். இப்போ அது நடந்திருக்கறது தொகுதிக்குள்ள ரொம்பவே சந்தோஷத்தை ஏற்படுத்தியிருக்கு. அதோட முதல்வர் வேற இங்க போட்டியிடப் போறதா சொல்றாங்க. ஒருவேளை அவங்க போட்டியிட்டாலும் எங்களுக்கு சந்தோஷந்தான். ஏன்னா, அவங்க போட்டியிடறதுக்கு முன்னாலயே தொகுதியை நல்லா கவனிப்பாங்க. ஒருவேளை ஜெயிச்சுட்டாங்கன்னா, தொகுதி இன்னும் வேகமா டெவலப் ஆகும்னு நம்பறோம். அதுக்காகத்தான் முதல்வர் போட்டியிடறதை வரவேற்கிறோமே தவிர, மத்தபடி ராமன் ஆண்டா என்ன... ராவணன் ஆண்டா என்ன..." என்றவரிடம் "இப்பொழுதே தொகுதி வளர்ச்சிப் பணிகளை ஜரூராகத் துவங்கி விட்டனராமே" என்று போட்டு வாங்கினோம்.

"இந்தம்மா எங்க ஊருக்காக செஞ்சது, எங்க முருகன் கோயிலுக்கு இருபத்தஞ்சு லட்சத்துல தேர் தயார் பண்ண உத்தரவு போட்டதுதான். ஆனா செய்ய வேண்டியது நிறைய இருக்கு... குறிப்பா, எங்க தொகுதிக்குன்னு தனியா அரசாங்க ஆஸ்பத்திரி, தீயணைப்பு நிலையம், பேருந்து வசதி, சாலை வசதி... முக்கியமா எங்க ஊரை தாலுகாவாக்கணும். இதெல்லாம் சீக்கிரமா நடந்தா, ஒருவேளை இந்தம்மா இங்க நின்னு ஜெயிக்க வாய்ப்பிருக்கு" என்றபடி நகர்ந்தார்.

"ஏன் தம்பி... ஒரு பானை சோத்துக்கு ஒரு பருக்கையைப் பதம் பார்த்தா போதாதா...? அம்மா எங்க எம்.எல்.ஏவே கிடையாது. சும்மா இங்க வந்து தங்கறதுக்கே தேரு செய்ய உத்தரவு போட்டிருக்காங்கன்னா, இங்க ஜெயிச்சா எவ்வளோ நல்லது செய்வாங்கன்னு பார்த்துக்கங்க... அவங்க நின்னு ஜெயிச்ச பிறகு பாருங்க, இந்த திருப்போரூர் பூமியே பொன்னு வெளையற பூமியாகப் போகுது" என்று படபடவெனப் பேசிவிட்டு, நடையைக் கட்டினார் பாலன் என்கிற ஊர்ப் பெருசு... இவர் உள்ளூர் ரத்தத்தின் ரத்தமாம்.

"முன்னெல்லாம் அதிகாரிங்ககிட்டயோ, இல்ல கட்சிக்காரங்ககிட்டயோ போனா ரொம்பவே அலுத்துப்பாங்க... ஆனா இப்போ கொஞ்சநாளா தானாவே வந்து ஒவ்வொரு வார்டுலயும் என்னென்ன தேவைன்னு லிஸ்ட் எடுத்துட்டுப் போறாங்க... அப்பப்போ அதிகாரிங்க வந்து சர்வேல்லாம் எடுக்கறாங்க. எனக்கென்னமோ இந்தத் தொகுதிக்கு நல்ல காலம் வந்துடுச்சுன்னுதான் தோணுது" என்றார் முகம் காட்ட மறுத்த ஒரு பெரியவர்.

உள்ளூர் எம்.எல்.ஏ கனிதா சம்பத்திடம், தொகுதி வளர்ச்சிப் பணிகள் குறித்துப் பேசி

* சம்பத்



* பாலன்



* அஸ்கர் அலி



* ரமேஷ்





* கனிதா சம்பத்



* லட்சுமிபதி

னோம்.

"அம்மா ஆட்சியில நலத்திட்டங்கள் அதிகமா நிறைவேறின தொகுதிகள்ல நம்ம தொகுதியும் ஒண்ணு. முக்கியமா சொல்லணும்னா, ஒரு கோடியே பத்து லட்சம் செலவுல செம்பாக்கம் - திருப்போரூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஒரு கோடி செலவுல நந்திவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கடந்த பத்து வருஷமா போடப் படாம இருந்த சாலைகள் மீண்டும் போடப்பட ஒரு கோடி ஒதுக்கிடுன்னு நிறைய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கு... இது தவிர, விவசாயிகளுக்கு உதவும் விதமா ஏகப்பட்ட ஏரி, குளங்கள் தூர் வாரப்பட்டிருக்கு. பொதுமக்களுக்கு உபயோகமா, ஏகப்பட்ட தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கு... ரேஷன் கடை இல்லாத கிராமங்களுக்குச் சமீப காலமா நிறைய ரேஷன் கடைகள் ஏற்பாடு செய்திருக்கோம். இப்படி நிறைய செய்து தொகுதியை இழைச்சு வச்சிருக்கோம். அதனால எங்கம்மா இந்தத் தொகுதியில போட்டியிட்டா, ஏகபோகமா ஜெயிச்சு வருவாங்க. இதுல யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்ல..." என்றார் கனிதா சம்பத்.

ஆனால், "முதல்வர் இந்தத் தொகுதியில் நிற்பதற்கும் வாய்ப்பில்லை. ஒருவேளை நின்றாலும் ஜெயிப்பது குதிரைக்கொம்புதான்" என்கிறார் தொகுதி உடன்பிறப்பான அஸ்கர் அலி.

"இந்தத் தொகுதியில நின்னு ஜெயிக்கறது ஒண்ணும் அவ்வளவு கலபமில்லை. இதைக் கூட்டணி தைரியத்துல மட்டும் சொல்லல... எங்க ஊர் ஜனங்க பெரும்பாலும் படிப்பறிவு உள்ளவங்க. அதனால ஜெயலலிதாவுக்கு வோட்டுப் போட மாட்டாங்க.... அப்படியே வோட்டுப் போட்டு ஜெயிக்கறாங்கன்னே வைச்சுப் போம், ஆட்சியில நாங்க உட்கார்ந்துட்டா இந்தத் தொகுதியை இந்தம்மா திரும்பிக்கூட பார்க்க மாட்டாங்க. அதனால இந்த மாதிரி விஷப் பரீட்சையில எங்க ஜனங்க இறங்க மாட்டாங்க" என்று சொல்லும் அஸ்கர் அலி தி.மு.க நகரச் செயலாளரும்கூட.

காங்கிரசைச் சேர்ந்த ரமேஷின் கருத்து வேறு மாதிரியாக உள்ளது. "முதல்வர் போட்டியிட உள்ளதால், இங்கு அதிக அளவில் சலுகைகள் வழங்கப்படுவது உண்மை என்றால், இதுவரை ஒற்றையடிப் பாதையாகவே இருந்துவரும் திருக்கழுக்குன்றம் to திருப்போரூர், செங்கல்பட்டு to திருப்போரூர், கூடுவாஞ்சேரி to திருப்போரூர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், முதல்வர் சென்று வரும் பாதை மட்டும் நன்றாக உள்ளது. மற்ற சாலைகள் அப்படியே உள்ளன. ஆகவே முதல்வர் இங்கு போட்டியிடுவது சந்தேகமே" என்கிறார் இவர்.


உண்மையில் முதல்வர் போட்டியிடுவதை ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கிறார்கள் பொதுமக்கள். ஆண்டிப்பட்டி மக்கள் அனுபவித்து வரும் அத்தனையும் இனி தங்களுக்கும் கிடைக்கும், அதன் மூலம் நிச்சயம் இத்தொகுதியின் குறைகள் துடைத்தெறியப்படும் என்று நம்புகிறார்கள்.

இது குறித்து திருப்போரூர் ஒன்றியக் குழுத் தலைவர் லட்சுமிபதி (தி.மு.க.) என்ன சொல்கிறார்?

"வளர்ச்சிப் பணிகள் எல்லாமே வழக்கம் போலத்தான் நடைபெற்று வருகின்றன. முதல்வர் போட்டியிடுவார் என்ற தகவல் ஒரு யூகம்தான். ஒருவேளை அவர் நின்றாலும் அவருக்குத் தக்க பதிலடி கொடுக்கும் வகையில் நாங்களும் தயாராக உள்ளோம். ஏனென்றால் நாங்களும் அந்த அளவுக்கு நலத்திட்டங்கள் நிறைய செயல்படுத்தியுள்ளோம்" என்கிறார்.

தனித்தொகுதி, பொதுத்தொகுதியாக மாற்றப்பட்டதில், திருப்போரூர் தலித் மக்களுக்கு அதிருப்தி. எதிர்க்கட்சிகள் இதையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதால், முதல்வர் ஒருவேளை இங்கு போட்டியிட்டாலும் மிகுந்த சவாலான தொகுதியாகத்தான் இருக்கப் போகிறது திருப்போரூர்!

- இரா. முத்துக்குமார்



• நிஜம்...

• ... நிழல்!



# "நிஜம் அமிதாப்; நிழல் நான்!"

மறுபடியும் 'குரோர்பதி' நிகழ்ச்சியின் மூலமாக டீ.வி. ரசிகர்களை கட்டிப்போட வந்துவிட்டார் அமிதாப்பச்சன். தமிழ் மக்களுக்கு கூடுதல் மகிழ்ச்சியான விஷயம், குரோர்பதி நிகழ்ச்சி தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பாகிறது என்பது. அமிதாப்புக்கு தமிழில் குரல் கொடுத்திருப்பவர் நம்ம ஊர் நிழல்கள் ரவி.

"அதெப்படி ரவி, அமிதாப் குரலுக்கு உங்கள் வாய்ஸ் அச்சாகப் பொருந்துகிறது?" என்று கேட்டால், "இப்படித்தான் செல்லுமிடமெல்லாம் என்னைப் பாராட்டுகிறார்கள். கல்லூரி நாட்களில் ஓரளவு மிமிக்ரி செய்த அனுபவம் எனக்கு உண்டு. அமிதாப்புக்கு குரல் கொடுக்கிறபோது, ஒரு வடநாட்டுக்காரர் நன்றாகத் தமிழ் பேசினால் எப்படி இருக்குமோ அப்படி, சற்றே கரகரப்பான அமிதாப் ஸ்டைலில் பேச முடிவு செய்தேன். பொருத்தமாக அமைந்துவிட்டது" என்கிறார்.

**சரி, எப்படி உங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்?**

"ஒரு நாள் செவன்த் சேனல் நாராயணன் எனக்கு போன் செய்தார். 'ஒரு மிகப் பிரபலமான மனிதருக்கு குரல் கொடுக்க வேண்டும். உங்களால் முடியுமா? என்று கேட்டார். 'யாருக்கு?' என்றபோது, 'அது சஸ்பென்ஸ். நேரில் வாருங்கள்' என்றார். போனேன். டப்பிங் தியேட்டருக்குள் நுழைந்தால் திரையில் 'குரோர்பதி' ஹாட் சீட்டில் அமிதாப் காட்சி. எனக்கு இன்ப அதிர்ச்சி. சாம்பிளுக்கு மூன்று வரி பேசிக் காட்டினேன். 'பிரமாதம்! நீங்கள்தான் குரல் கொடுக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டார் நாராயணன்."

**டப்பிங் அனுபவம் எப்படி இருக்கிறது?**

"புதுப்புது அர்த்தங்கள் படத்தில் நடிகர் ரகுமானுக்குக் குரல் கொடுத்தேன். அப்புறம் 'லயன் கிங்' கார்ட்டூன் படத்தில் சிங்கராஜா சம்பாவுக்குக் குரல் கொடுத்தேன். இப்போது அமிதாப்புக்கு. நான் சினிமா, டீ.வி. சீரியல் என்று பிசியாக இருப்பதால், நாராயணன், பிரத்யேகமாக ஒரு டப்பிங் தியேட்டர் ரெடி பண்ணி, 'உங்களுக்கு எப்போது சௌகரியமோ அப்போது வாருங்கள். இருபத்து நாலு மணி நேரமும் நாங்க ரெடி' என்று சொல்லிவிட்டார்."

**உங்கள் குரலைக் கேட்டு அமிதாப்பின் ரியாக்ஷன் என்ன?**

"டப்பிங் செய்யப்பட்ட முதல் எபிசோடை போட்டுக் காட்டினபோது ஆச்சரியப்பட்டு, 'வாட் எ மெடாலிக் வாய்ஸ்! சூப்பர்' என்று பாராட்டி என்னைப் பற்றி விசாரித்தாராம். என்னைச் சந்திக்க வேண்டும் என்றுகூடச் சொன்னாராம். நிழலான நானும், நிஜமான அமிதாப்பும் அடுத்த மாதம் சந்திக்கப் போகிறோம்!"

- கௌதம்ராம்



# "பார்ட்டிக்குப் போகமாட்டேன்!"

'குட்டி நீலாம்பரி' என்றுதான் சேனல் வட்டாரத்தில் ஷில்பாவை அழைக்கிறார்கள்... ஏனாம்? அவரையே கொஞ்சம் பீட்டர்விடச் சொன்னோம்.

"எல்லாம் 'நிம்மதி' சீரியல்ல நான் பண்ற நந்தினிதேவி கேரக்டரோட மகிமைதான். அதுக்கு முன்னால நான் பண்ணின கேரக்டர்ஸ் எல்லாமே ரொம்ப சாஃப்டா இருக்கும். இல்லன்னா பாசிட்டிவா இருக்கும். அந்த டைம்ல இது மாதிரி நெகடிவ் கேரக்டர், நடிக்க ஸ்கோப் உள்ள கேரக்டர், அதுவும் ஏவி.எம். பேனர்ல இருந்து வரவே, டக்குன்னு ஓ.கே. சொல்லிட்டேன். பாருங்களேன்... இந்த நெகடிவ் கேரக்டர் இன்னிக்கு ஆடியன்ஸ்கிட்ட டபுள் பாசிட்டிவாயிடிச்சி."

"ஆனாலும் உங்களை யாருமே சினிமா பக்கம் சேர்க்கறதே இல்லையே... ஏன்?" என்று உஷ்ணமூட்டினால்,

"ஹலோ... நான் சேனல் பக்கம் வர்றதுக்கு முன்னாலயே சினிமால நடிச்சுட்டேன். பிரிய மானவளே, புதுமைப்பித்தன், சக்சஸ், ஃப்ரெண்ட்ஸ் (மலையாளம்)னு நிறைய பண்ணிட்டேன். அதிகமா சீரியல் கமிட் ஆனதால, திரும்ப சினிமா பக்கம் போக முடியல... மணிரத்னம், கே.எஸ். ரவிக்குமார் பேனர்ல இருந்து சான்சஸ் வந்தும் போக முடியாதது வருத்தம்தான்" என்கிறார்.

"ஒரு சீனுக்கு சுமாரா எத்தனை டேக் வாங்குவீங்க..." என்று நக்கலடிக்க,


"ஹோம் ஒர்க் பண்ணிட்டு ஸ்பாட்டுக்கு வர்ற ஆளில்ல நான். இருந்தாலும் ஒரே டேக்ல முடிச்சுடுவேன். எப்பவாவது கோ-ஆர்ட்டிஸ்டைப் பொறுத்து டேக் கூடலாம்" என்று கூலாக வருகிறது பதில்.

"ஷூட்டிங் ஸ்பாட்ல செம அரட்டை அடிப்பீங்களாமே..."

"அது உங்க வரைக்கும் தெரிஞ்சுடுச்சா! எல்லாம் செட்டு வரைக்கும்தான். அதுக்கு மேல அதிகமாக பழகறதில்ல. பார்ட்டிங்களுக்குக் கூட போக மாட்டேன். அந்த விஷயத்துல நான் ரொம்ப ஸ்டிரிக்ட்" என்று புன்னகை செய்யும் ஷில்பா, தற்போது 'நிம்மதி', 'கோலங்கள்', 'நிலவைப் பிடிப்போம்' என்று ஏக பிஸி. ஒரு தெலுங்கு சீரியலும் கமிட்டாகி இருக்கிறதாம்.

- கோகிலா

சேனல்




## உசுப்பப்படும் உணர்வுகள்!

இருபது வருடங்களுக்கு முன் நடந்த மிகப்பெரிய கலவரத்துக்கு, ஒரு மனிதரை பலிகடாவாக்க வேண்டும் என்று எதிர்கட்சிகள் துடியாய்த் துடிக்கின்றன. இந்திரா காந்தி கொலையைத் தொடர்ந்து நடந்த வன்முறைகளில் சீக்கியர்கள் பெருமளவில் மாண்டதற்கு, ஜகதீஷ் டைட்லர்தான் பொறுப்பேற்க வேண்டும் என்கின்றனர்!

இந்தக் கலவரங்களின் பின்னணியை ஆராய்ந்த நானாவதி கமிஷன் நியமிக்கப்பட்டதே 2000-ம் ஆண்டில் (தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சிக் காலத்தில்)தான். கமிஷன் அறிக்கையோ, ஜகதீஷ் டைட்லருக்கு இந்தக் கலவரங்களில் ஒரு பங்கு இருந்திருக்கக்கூடும் என்றுதான் சொல்கிறதேயொழிய, அவர்தான் அதற்கு முக்கியக் காரணம் என்று கூறவில்லை.

ஆனால், டைட்லர் மத்திய அரசின் அமைச்சரவையில் இடம் பெறும் காங்கிரஸ் கட்சி அமைச்சர். இதனால் அவரை வெளியேற்றச் சொல்லி அடம்பிடித்து, ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர முற்பட்டு, நாடாளுமன்றத்தை இரண்டுபடுத்தினர் எதிர்கட்சியினர்.

இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்து, கமிஷன் அறிக்கை வெளியானதுமே டைட்லர், அமைச்சரவையிலிருந்து




கல்கி



2005 ஆகஸ்ட் 21
பார்த்திப ஆவணி 5
மலர் : 64
இதழ் : 3


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ராஜினாமா செய்திருக்கலாம். ஆனால் அவரும் உடனே விலகவில்லை; கட்சித் தலைமையும் அவரை விலகச் சொல்லிக் கேட்கவில்லை. "நான் குற்றமற்றவன்; அரசியல் நோக்கில் வேண்டுமென்றே என் மீது சிலர் பழி சுமத்தியுள்ளனர்" என்று வாதாடிக் கொண்டிருந்தவர், நிலைமை ரொம்பத் தீவிரமான பிறகே ராஜினாமா செய்திருக்கிறார். பிரதமரும் நாடாளுமன்றத்தில் "நீதி கிடைக்கும்" என்று சீக்கிய சமுதாயத்துக்கு உறுதியளித்திருக்கிறார். சீக்கியரின் சீற்றமும், எதிர்கட்சிகளின் ஆர்ப்பாட்டமும் வெடிப்பதற்கு முன்பாகவே ஆட்சியில் உள்ள காங்கிரஸ், சரியான திசையில் சென்றிருந்தால் அவர்களுக்கு கௌரவமாக இருந்திருக்கும். ஆனால் இப்போது நிர்ப்பந்தத்துக்கு வளைந்து கொடுத்ததில் வெற்றி எதிர்கட்சிகளுடையதாகிவிட்டது.

இந்திரா காந்தி கொலையைத் தொடர்ந்து நடந்த கலவரங்கள், மன்னிக்க முடியாத குற்றமே. ஆனால், அவை எந்தச் சூழலில் நிகழ்ந்தன என்பதையும் சற்று யோசிக்க வேண்டும். கொலை செய்யப்பட்டவர் நாட்டின் பிரதமர். யாரும் எதிர்பாராத கணத்தில் நடந்த துர்ச்சம்பவம் நாட்டையும் அதன் நிர்வாகத்தையும் ஸ்தம்பிக்கச் செய்தது. 'அன்று கலவரங்களை அடக்க ராணுவத்தை உடனே அழைக்கவில்லை; காவல் துறை விரைந்து இயங்கவில்லை' என்று கூறுகிறது நானாவதி கமிஷன் அறிக்கை.

இந்திரா காந்தியின் மரணத்தால் விளைந்த வெற்றிடத்தை அதி விரைவில் நிரப்பி, பொறுப்போடு சட்டம் ஒழுங்கைக் கையிலெடுத்துச் சரிசெய்ய அன்று ஒருவரும் இல்லை. வர்க்கபேதத்தின் விளைவான வெறுப்பில்தான் கொலையே நடந்தது என்பதால், அந்த பேதமே வன்முறை பரவவும் காரணமாகி விட்டது. நடந்தது எதுவும் நியாயம் அல்ல என்றபோதிலும், அன்று நடந்தவற்றுக்காக இன்று நாடாளுமன்ற இயக்கத்தைத் தடைசெய்ய முற்பட்டதும் நியாயமல்ல.




நானாவதி கமிஷன் அறிக்கையின் பேரில் அரசு சரியாக நடவடிக்கை எடுக்க வில்லை; எடுக்கப்பட்ட நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்பதும் பா.ஜ.க. முதலான எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டு. கம்யூனிஸ்ட் கட்சியினர், 'இந்த நடவடிக்கை அறிக் கையானது எந்த நடவடிக்கையுமே எடுக்கப்படாததையே உணர்த்துகிறது' என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்குப் பதிலாக உள்துறை அமைச்சர் சிவராஜ் பாடீல் சொல்லியிருப்பதுதான் கிளைமாக்ஸ்! "நானாவதி கமிஷன் அறிக்கையுடைய சிபாரிசின்படி என்னவெல்லாம் நடவடிக்கை எடுக்க முடியுமோ, நிச்சயமாக அரசு எடுக்கும்; செயல்படுத்தும்" என்கிறார். அப்படியானால், இதுவரை எடுக்கப்பட்டதாக 'ஆக்ஷன் டேகன் ரிப்போர்ட்'டில் சொல் லப்பட்ட நடவடிக்கைகள்தான் என்ன!

மொத்தத்தில் பழைய விவகாரம் ஒன்றை, வெறும் வாயை மெல்வதற்குப் பதில் அவலாக்கிக் கடித்துத் தள்ளுகின்றன எதிர்கட்சிகள். ஆளும் கட்சி, நிலைமையைச் சமாளிக்கும் உறுதியும் நெஞ்சுரமும் இன்றித் தடுமாறுகிறது.

இத்தனைக்கும் இடையே சீக்கிய மக்களின் உணர்வுகள் உசுப்பப்பட்டிருப்பது தான் மிச்சம்! இருபது ஆண்டுகளுக்கு முன் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களை நினைவுகூர்ந்து, பட்டியலிட்டு, வயிறெரிந்து துக்கப்படுகிறார்கள் அவர்கள். தங்களுக்கு இன்றளவும் நீதி கிடைக்கவில்லை என்று புலம்புகிறார்கள். பழைய கொடுமைகளை மறந்து இன்று நல்லுறவுடன் புதிய சமுதாயம் படைப்பதற்குப் பதிலாக, பழையனவற்றை மீண்டும் மனத்தால் வாழ்ந்து பார்த்து, உணர்ச்சிகள் உசுப்பப்பட்டு அமைதி இழக்கிறார்கள்.

அரசியல் கட்சிகள் தங்களுடைய சுயநல விளையாட்டில், ஒரு சமூகத்தின் அமைதி யைக் குலைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. ○



• நீங்களும் கொஞ்சம் சாப்பிடுறீங்களா...

# சன்டே

அதிகாலையில் மலர்ந்த ரோஜாப் பூவைவிட கொஞ்சம் அதிகமாவே ஃப்ரெஷ்ஷாக இருக்கிறது உன்னி கிருஷ்ணனின் இல்லம்... வழக்கமாக ஷெர்வானியில் வந்து வரவேற்கும் உன்னி, அன்றைக்கு ஜீன்ஸ் - டீ ஷர்ட்டில் செம ஸ்மார்ட்டாக இருந்தார்.

வாசலுக்கே வந்து நம்மை வரவேற்றவர், 'ஞாயிறும் அதுவுமா புடிச்சுட்டீங்களே சார்' என்று செல்லமாக அலுத்துக் கொண்டார்.

"சன்டேவுக்கும் மத்த நாளுக்கும் எனக்கு பெருசா வித்தியாசமிருந்ததில்ல. ஆனா, இந்த சன்டே ரொம்ப ஸ்பெஷல். காரணம் கல்கி" என்று குஷியானவர், "மம்மி... அந்த ரெட் கலர்ல செய்வீங்களே... அது என்ன டிஷ்?", "ப்ரியா... சன்டே ஈவ்னிங் ஒண்ணு செய்வியே... அது பேரு என்ன?" என்று டவுட் கிளியர் செய்தபடியே கிச்சனுக்குள் நுழைந்தார். சரியாக இருபது நிமிடம்... இடையில் யாரையும் கிச்சனுக்குள் விடவில்லை. மறுபடி உன்னி கதவைத் திறந்தபோது வியர்த்து விறுவிறுத்துப் போயிருந்தார். கையில் ஒரு பாத்திரத்தில் சுடச்சுட ஆப்பம், தேங்காய்ப் பால்.

"அப்பப்பா, எப்படித்தான் சமைக்கிறாங்களோ... கொஞ்ச நேரத்துக்குள்ள நமக்கு கிர்ருன்னு ஆயிடுச்சு" என்று தலையை உதறினார். 'குற்றம் குறை இருந்தா பெருசு



படங்கள்: ராஜன்

## இது புதுசு!

## சமையல்!

பண்ணக் கூடாது' என்று கூறிக்கொண்டே டைனிங் டேபிளில் தமது குடும்பத்தினருக்குப் பரிமாற ஆரம்பித்தார். பரீட்சை எழுதி விட்டு ரிசல்ட்டுக்குக் காத்திருக்கும் மாணவன் போல் தவித்தவர், அவரின் அம்மா, "ரொம்ப நல்லாருக்குப்பா" என்று சிரித்துக்கொண்டே கூறிய பிறகுதான் நார்மலானார். அப்பா, 'ம்...ம்...பரவால்ல' என்றார். உன்னி, மனைவியைப் பார்க்க, ''உண்மையைச் சொல்லணுமா பொய் சொல்லணுமா?'' என்று அவர் கொக்கி போட, "நீ எதுவும் சொல்ல வேணாம். நானே சாப்பிட்டுப் பார்த்துக்கறேன்" என்று உன்னியே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்து விட்டார். முதல் வாய் உள்ளே போனதுதான் தாமதம், "ஆஹா! நல்லா இருக்கு! பேஷ் பேஷ்" என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டார். எல்லோரும் சிரித்து விட, குழந்தைகள் "அப்பா, எனக்கு எனக்கு" என்று அடம்பிடிக்க ஆரம்பித்துவிட்டன. உன்னி அவர்களுக்கும் ஒரு வாய் ஊட்டிவிட்டு, ''எப்படிடா அப்பா சமையல்?'' என்றார்.

''சூப்பர் டாட்'' என்றான் பையன். குட்டிப் பெண்ணுக்குப் பேசத் தெரியவில்லை. சிரித்தது.

''எனக்குச் சாப்பாடுன்னா ரொம்ப டேஸ்டியா இருக்கணும்... இல்லன்னா சாப்பிடுறதுக்கே மூடு வராது...'' என்று சொன்ன உன்னி, "இந்தாங்க, நீங்களும் ஒரு வாய் சாப்பிட்டுப் பாருங்க'' என்று ஆப்பத்துடன் நம்மை நெருங்க, 'ஐய்யய்யோ' என்று நாம் ஓடியே வந்துவிட்டோம்.

**- இரா. முத்துக்குமார்**



## சமைக்காமலே சாப்பிடுங்க!

### சமைக்காமலே சாப்பிட சமையற்கலைஞர் சாந்தி பல்ராமின் இந்த வார டிஷ்: ஸ்பைசி பனீர் ஸ்கொயர்ஸ்

• சாந்தி பல்ராம்



*தேவையான பொருள்கள்:*

பனீர் - 250 இராம்
கறுப்பு உப்பு - ½ தேக்கரண்டி
சாட்மசாலா - 1 தேக்கரண்டி

*செய்முறை:*

1. பனீரை சிறு சிறு சதுரங்களாக வெட்டி வைக்கவும்.

2. ஒரு பரிமாறும் தட்டில் அடுக்கி சாட் மசாலா தூள், கறுப்பு உப்பு இவற்றைத் தூவி பரிமாறவும்.



# அருள்வாக்கு

**வா**ஸ்தவத்தில் அத்தனை தொழிலும் சமூக க்ஷேமத்துக்காக உண்டானவைதான். ஒன்று உயர்வு, இன்னொன்று தாழ்வு என்றில்லை. எந்தத் தொழிலைச் செய்தாலும் ஆசை வாய்ப்படாமல் அதைச் சுத்தமாக(perfect)ப் பண்ணி ஈசுவரார்ப்பணம் செய்தால், அதைவிடச் சித்த சுத்திக்கு வேறு மருந்தில்லை. ஒன்று உயர்ந்தது, இன்னொன்று தாழ்ந்தது என்பது அடியோடு பிசகு.

நாம் பிரிந்து பிரிந்தே ஒற்றுமையாக இருந்து, நம் நாகரிகத்தைப் பெரிதாக வளர்த்திருக்கிறோம். மற்றவர்கள் பிரியாமல் இருப்பதாக நினைத்துக்கொண்டே, ஒற்றுமையில்லாமலிருந்துதான் அந்த நாகரிகங்கள் விழுந்து விட்டிருக்கின்றன. இங்கே காரியத்தில் மட்டும் பேதமிருந்து, உள்ளூர ஐக்கியம் இருந்ததால் நாகரிகம் வளர்ந்தது.

எல்லாவற்றையும் ஒன்றாகவும் பண்ணி, உயர்வாகவும் வைத்திருப்பது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை. எல்லாம் ஒரேயடியாகப் பிரிந்து பேதப்பட்டுக் கிடப்பதும் உதவாது. இரண்டுக்கும் மத்தியமாக, சமரஸமாக ஒரு வழியை தர்ம சாஸ்திரம் தந்திருக்கிறது. அதனால்தான் அனுஷ்டானத்தில் வேற்றுமையும் வேண்டும்; இருதயத்தில் ஒற்றுமையும் வேண்டும் என்கிறேன். இரண்டையும் குழப்ப வேண்டாம் என்கிறேன்.

வெளிக் காரியங்களில் எத்தனை வேற்றுமை இருந்தாலும், இருதயத்தில் அன்பு இருந்தால் தேசத்தில் பரம சாந்தமே இருக்கும். யுக யுகாந்தரமாக நம் தேசத்தில் அப்படித்தான் சமூகம் சாந்தமாக இருந்து வந்தது. அவரவரும் சுயநலனை மட்டும் எண்ணாமல், சகல ஜனங்களுக்காகவும் நாம் இந்தக் கர்மத்தைச் செய்கிறோம் என்ற மனோபாவத்துடன் செய்தால் ஏற்றத் தாழ்வே இல்லை. என்ன விபரீதம் ஏற்பட்டாலும் சாமானிய தர்மங்களை அனைவரும், விசேஷ தர்மங்களை அவரவரும் கூடிய வரையில் ரக்ஷித்து வந்தால் எந்த நாளும் நமக்குக் குறை வராது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



# வலி!

ஒரு பழைய வீட்டை வாங்கி, புதுப்பித்து அழகுபடுத்தி, கிரகப்பிரவேசம் பண்ணுகிறார் சுந்தரமைய்யர். நம்ப முடியாதபடிக்கு புத்தம் புதுசாகக் கட்டியது மாதிரி, ஊரார் கண்படுமளவுக்குப் பிரமாதமாக இருந்தது வீடு. அக்ரஹாரமே அல்லோலகல்லோலப்பட்டது! விழாக் கோலம்!

வரதனுக்கு ஒரு விஷயம் மட்டும் புரியாமல் குழப்பியது. உற்றார், உறவினர், நண்பர் வட்டாரம் என ஒருவர் விடாமல் அந்த நபரை அறிமுகம் செய்து வைத்துத் தன்னுடனே கூட்டிக்கொண்டு வளைய வந்தார் சுந்தரம். வரதன், சுந்தரத்துக்கு நெருங்கியவர். எனினும் அந்தப் புதிய நபர் யார் எனத் தெரியவில்லை. விழா பரபரப்பில் இதைக் கேட்கவும் முடியவில்லை. ஒருவாறாக பந்தி துவங்க, சுந்தரமைய்யரை நெருங்கினார் வரதன்.

''என்ன வரதா... சாப்பிடல?''

''இன்னும் இல்ல சுந்தரம்... நல்லா பேஷா பண்ணிட்டே... ஆமா... யார் இவர்...? என்னண்ட அறிமுகம் பண்ணலியே?''

''ஓ..! நம்ம சுப்ரமணியம்... நம்ம குடும்ப நண்பர்... உன்னைப்போல ஒருத்தர்...''

அந்த சுப்ரமணியம் பவ்யமாக வணங்கினார்.

''உங்கிட்ட கொஞ்சம் பேசணும் சுந்தரம்... இப்படி வாயேன்...''

தனியே வரவும், ''இவர் யாரு? திடீர் சிநேகிதம்னு என் மண்டையைப் போட்டுக் குழப்பற?''

''எல்லாம் ரொம்ப வேண்டப்பட்டவர்தான்! புதுமனை புகுவிழானு பண்றது எதுக்கு...? எல்லோரும் நிறைஞ்ச மனசோட வாழ்த்தத்தானே? இந்த சுப்ரமணியத்தோட வீடுதான் இது! பொண்ணுங்க கல்யாணத்துக்காக எங்கிட்ட வீட்டை வித்துட்டார். இங்கே உள்ள ஒவ்வொரு செங்கல்லும் அவர்கிட்ட பேசும்... ஒவ்வொரு அறையிலும் ஜீவன் இருக்கும்... அந்த வலி எனக்குத் தெரியும்... ஒண்ணோ, ரெண்டோ இல்ல... இருபத்தஞ்சு வருஷமா இந்த வீட்ல இருந்தவர். எங்கோ இருந்துண்டு 'வித்துட்டோமே'ங்கற வலியோட அவரால வாழ்த்த முடியாது. அதான் அதைப் புரிஞ்சுண்டு, அவரை விழாவுக்கு அழைச்சேன். எல்லாரோட வாழ்த்தை விடவும், அவர் வாழ்த்துதானே ரொம்ப முக்கியம்?''

வரதன் திகைத்து நின்றார். ○

**ப.கா.மணிமொழியன்**



# தேர்வில் தேர்வாகாத கலாம்!

"ரிஷிகேசத்தில் வசித்த சுவாமி சிவானந்தா மீது நமது ஜனாதிபதி கலாமுக்கு பெரும் மதிப்பு உண்டு. பல்வேறு சமயங்களில் சுவாமி சிவானந்தாவைப் பற்றி அவர் வெகு உயர்வாக பொது நிகழ்ச்சிகளில் பேசியதுண்டு. அதற்குக் காரணம், கலாமின் வாழ்க்கையில் நடந்த ஒரு அனுபவம்தான்" என்று கூறும் மதுரை சிவானந்த தபோவனத்தின் தலைவரான சுவாமி சுந்தரானந்தா, அண்மையில் ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்திருக்கிறார். தமது சுவையான அனுபவத்தை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"டேராடூனில், விமானப் படை தேர்வு வாரியத்தின் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட கலாம், தேர்வு செய்யப்படாத சூழ்நிலையில் மிகுந்த வேதனையடைந்தார். எதிர்காலம் குறித்த கேள்விக்குறியுடன், டேராடூனிலிருந்து ரிஷிகேசத்துக்குச் சென்றார். கங்கையில் நீராடிவிட்டு, அங்கிருந்த சுவாமி சிவானந்தரின் ஆஸ்ரமத்துக்குச் சென்றவுடன், வலுவான அதிர்வலைகளின் தாக்கத்தை உணர்ந்தார். அதன்பின் என்ன நடந்தது? கலாமே இப்படி விளக்குகிறார்...

'வெள்ளை வேட்டியும், மரப்பாதுகைகள் அணிந்து, புத்தரைப் போல காட்சியளித்த சுவாமி சிவானந்தரைச் சந்தித்தேன். அவரது பளபளக்கும் தேகம், ஊடுருவும் விழிகள், கருணை பொங்கும் முகம், கபடமற்ற புன்னகை... நான் அப்படியே சிலையாகிவிட்டேன். சுவாமியிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது, எனது முஸ்லிம் பெயர், அவரிடம் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. நான் வாய் திறப்பதற்கு முன்பே, என் துயரத்தைப் புரிந்து கொண்டு அவராகப் பேசினார்.

பறக்க வேண்டும் என்ற என் பல நாள் கனவு நிராசையாகிவிட்டதை - விமானப்





• ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு!

படையில் சேர முடியாமல் போனதை நான் வேதனையுடன் சொல்ல, பொறுமையாய்க் கேட்ட சுவாமி சிவானந்தர், புன்னகை செய்தார். அந்தப் புன்னகை என் துயரத்தையெல்லாம் அடித்துச் சென்றுவிட்டது.

அவர் மெல்லிய குரலில் அழுத்தமாகச் சொன்ன வார்த்தைகள், வாழ்க்கையை அதன் போக்கிலேயே ஏற்கும் மனப் பக்குவத்தை எனக்கு அளித்தன.

இப்படி சுவாமிஜியைப் பற்றி தமது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார் கலாம்.

எனவே, மதுரை மற்றும் சென்னையிலிருந்து பதினைந்து பேர் கொண்ட ஒரு குழு ரிஷிகேசத்துக்கு யாத்திரை செல்ல முடிவானதும், வழியில் டெல்லியில் ஜனாதிபதியைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துக் கடிதம் எழுதினோம். உடனடியாக எங்களுக்காக நேரம் ஒதுக்கியிருப்பதாகத் தகவல் வந்தது.

எங்கள் குழுவில் ஷேக் சின்ன மௌலானாவின் சகோதரி மகனும், சீடருமான ஷேக் மஸ்தான் மற்றும் சுப்ரமணி (இருவரும் நாதஸ்வரம்), பஞ்சாபகேசன் (தவில்) ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர். ஆனால் ராஷ்டிரபதி பவன் பாதுகாப்பு அதிகாரிகள், நாதஸ்வரம் மற்றும் தவிலை உள்ளே அனுமதிக்கவில்லை. நாங்கள் அனைவரும் உள்ளே சென்று ஜனாதிபதியைச் சந்தித்தோம். பழக்கூடை கொடுத்து எங்களை வரவேற்ற கலாம், அன்புடன் எங்களுடன் உரையாடினார்.

மெதுவாக "உங்கள் முன்னால் தவில் மற்றும் நாதஸ்வரம் வாசித்துக் காட்ட ஆர்வமாக இருந்தோம். பாதுகாப்புக் காரணங்களால் எங்கள் ஆசை நிறைவேறவில்லை" என்று அவரிடம் சொன்னேன். உடனே அதிகாரிகளைக் கூப்பிட்டு உத்தரவிட, சில நிமிடங்களில் தவிலும், நாதஸ்வரமும் வந்து சேர்ந்தன. 'எப்படித்தான் பாடினரோ...' என்ற சுத்தானந்த பாரதியின் பாடல் நாதஸ்வரத்தில் வாசிக்கப்பட்டது. மிகவும் ரசித்துக் கேட்டார் கலாம்.

நான் சுவாமி சிவானந்தாவின் படம் ஒன்றை நினைவுப் பரிசாக அளிக்க, அதனைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி, உடனே அந்தப் படத்தை அந்த ஹாலிலேயே மாட்டும்படி உத்தரவிட்டார். நான் கொண்டு போயிருந்த மதுரை மீனாட்சியின் சிறிய வெண்கலச் சிலையொன்றையும் நினைவுப் பரிசாக அளித்தேன்.

பிரதமர் மற்றும் கவர்னர்களுடனான அதிமுக்கிய நிகழ்ச்சிகளுக்கிடையே, எங்கள் குழுவினரைச் சந்திக்க ஜனாதிபதி நேரம் ஒதுக்கியதற்கு, அவர் சுவாமி சிவானந்தா மீது கொண்ட மதிப்புதான் காரணம்'' என்கிறார் சுவாமி சுந்தரானந்தா.

- எஸ்.சந்திரமௌலி

# கிழக்குக் கடற்கரை



**அழகு மிகுந்த கிழக்குக் கடற்கரைச் சாலை... கடந்த வாரத்தில் 'நடிகை த்ரிஷா இரவு நேரத்தில் நண்பர்களுடன் கும்மாளமிட்டார்' என்று கிளம்பிய செய்தியை அடுத்து, ஏரியாவே கொஞ்ச நாட்களுக்கு பரபரப்பாக இருந்தது. மெல்ல மெல்ல தன் இயல்பு நிலையான அமைதிக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில்தான் நாம் அங்கு சென்றோம். 'குற்றங்கள் மலிந்து கிடக்கும் இடமாக கிழக்குக் கடற்கரைச் சாலை உருமாறி வருகிறது' என்று மீடியாக்கள் அலறுவது உண்மைதானா என்றறிய களத்திலிறங்கினோம்.**

ஒரு காலத்தில் இந்தப் பகுதியின் முக்கிய அடையாளமாக இருந்தது வி.ஜி.பி. கோல்டன் பீச். கிழக்குக் கடற்கரைச் சாலையாக உருமாறிய பிறகு, கடற்கரையை ஒட்டிய பகுதிகள், பெரிய பெரிய பண்ணைத் தோட்டங்களாக வளர்ச்சியடைந்து வருகின்றன. குறைந்தது இரண்டு ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பல பண்ணை வீடுகளில், பாதுகாப்புக்கு நிற்கும் காவலரைத் தவிர, வேறு நடமாட்டமில்லை. மரங்கள் அடர்ந்த இந்தப் பண்ணைகளில் பறவைகளின் சத்தம் தவிர, எங்கும் நிசப்தம்.

ஈஞ்சம்பாக்கம் பபிள் பீச் தெருவில் கடற்கரையை ஒட்டிய ஒரு மரத்தடியில் ஹீரோ ஹோண்டா நிழலில் நிற்க, இளம் ஜோடி ஒன்று உச்சி வெயிலில் கடற்கரை மணலில் நெருக்கமாக நடந்து கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வேறு நடமாட்டமே இல்லை.

கொஞ்ச தூரம் நடந்திருப்போம்... குடைபோல் விரிந்திருந்த குட்டை கருவேல மரத்தடியில், நடுத்தர வயதினர் இருவர் ஒளிந்து கொண்டிருந்தனர். அவர்கள் எதிரே மது பாட்டில், வாட்டர் பாக்கெட், காராசேவு எல்லாம் பந்தி வைக்கப்பட்டிருந்தன. நம்மைப் பார்த்ததும் விழித்தவர்கள், வேறிடம் நோக்கி நகர்ந்தனர்.

ஒரு பண்ணை வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த வாட்ச்மேன் கிருஷ்ணனிடம் பேச்சுக் கொடுத்தோம்.

"எனக்குச் சொந்த ஊர் செய்யாறுங்க. ஒரு மாசத்துக்கு முன்னால, தூரத்துல இருக்குற புதருகிட்ட ஒரு துணி மூட்டை மாதிரி கிடந்துச்சு. என்னான்னு கிட்டப் போய்ப் பார்த்தா, பொணம்! அப்புறம் போலீஸ் வந்தது. வேற ஒரு இடத்துல கொலை பண்ணி, இங்க எடுத்துட்டு வந்து போட்டுருக்காங்க. பின்னாடி கொலை செஞ்சவங்களை போலீஸ் பிடிச்சுட்டுது. என்னையும் ஒரு சாட்சியா போட்டுருக்காங்க" என்றார், திகில் விலகாத முகத்துடன்.

சோழிங்கநல்லூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த டி.வி.எஸ். அவென்யூவில் ஏகப்பட்ட பண்ணை வீடுகள், கெஸ்ட் ஹவுஸ்கள். எல்லாமே வி.ஐ.பிகளுடையவை. ஒரு கெஸ்ட் ஹவுஸில் தோட்டக்காரராக இருக்கும் கபாலி,

"சனி, ஞாயிறுல நிறைய ஜோடிங்க டூ வீலருல இந்த பீச்சுக்கு வருவாங்க. அமைதியா வந்துட்டு, அமைதியாப் போனா பிரச்னையில்லீங்க. கும்பலா வருவாங்க. தண்ணி போட்டுட்டு டான்ஸ் பாட்டுன்னு, ஒரே ரகளைதான். கெட்ட கெட்ட காரியமெல்லாம் கூட நடக்குது. யாரு கேக்கறா? அமைதியா இருக்கத்தான் இந்தப் பக்கம் பலரும் வீடு வாங்கிட்டு வர்றாங்க. ஆனா இப்படி நாளுக்கு நாள் நிலைமை மோசமாயிட்டு வர்றதால, ஏன்டா வந்தோம்னு நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க" என்றார்.



• கபாலி

கானத்தூர் ஜீன்ஸ் பார்க் ரோட்டுக்குள் நுழைந்தோம். ஒரு பங்களாவில் திரைப்பட ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது.








• த்ரிஷா

அந்தப் பக்கம் சென்ற ஒரு இளைஞரை மடக்கி விசாரித்தோம்.

"இங்க இருக்குற பங்களாக்கள்ல அடிக்கடி ஷூட்டிங் நடக்குமுங்க. நடிகர் – நடிகைங்க எல்லாம் வருவாங்க. போன வாரத்துலகூட த்ரிஷா ஏதோ படத்துல நடுராத்திரில நடிச்சதுக்காக பிரச்னையாச்சுங்களே, உங்களுக்குத் தெரியாதுங்களா?" என்றார் அப்பாவியாக.

பங்களாவைத் தாண்டிச் சென்றால், பிரபல அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் தோட்டம் கண்ணில் பட்டது. அதைக் குத்தகைக்கு எடுத்து வேலை செய்யும் முருகேஸ்வரி,

"இந்தப் பக்கத்துல சமூக விரோதச் செயல்கள் நடக்குதான்னு எனக்குத் தெரியாதுங்க. நான் எதுனா சொல்லப் போயி, ஒன்னு கெடக்க ஒன்னு ஆகிப் போச்சுன்னா யாரு மாட்டிட்டு முழிக்கறதாம்" என்றார்.

தைரியமாகப் பேச முன்வந்த பெரியவர் ஒருவர்,

"இங்க ரௌடிங்க தொல்லை அதிகமுங்க. இந்தப் பக்கம் ஒதுங்க வர்ற ஜோடிங்ககிட்ட தகராறு பண்றதுல தொடங்கி, சொல்லக் கூசற பலதும் நடக்குறது நிஜம்தானுங்க. சில பங்களாக்கள்ல அந்த மாதிரி பிஸினஸ் கூட நடக்குதுங்க" என்றவர், நாம் புகைப்படத்திற்கு ஆயத்தமானதைக் கவனித்து, "தயவு செஞ்சு என் போட்டோ மட்டும் வேணாமுங்க. அப்புறம் போட்டோவாத்தேன் நான் சுவத்துல தொங்கணும்" என்று கையெடுத்துக் கும்பிட்டார். தொடர்ந்து அவரே,

"இப்ப கொஞ்ச நாளா நிலைமை சுமாரா இருக்கு. அதுக்குக் காரணம் அம்மாதான். இந்தப் பக்கம் சிறுதாவூருக்கு அவங்க அடிக்கடி வர்றதால, போலீஸ் கொஞ்சம் விழிப்போட இருக்கு" என்றார்.

• முருகேஸ்வரி



• கிருஷ்ணன்



**நா**ம் சந்தித்த பலரும் வாசித்த குற்றப் பட்டியலோடு நீலாங்கரை காவல் நிலையத்தை அணுகி, விஷயத்தைச் சொன்னோம். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட மஃப்டியில் இருந்த உதவி ஆய்வாளர்,

"குற்றங்கள் எதுவும் பெருசா எங்ககிட்ட பதிவாகல. இப்போ சிட்டி லிமிட்ல சேர்த்ததால, கூடுதலா எங்களுக்கு வாகன வசதி கிடைச்சிருக்கு. இதனால ரோந்து போறதை அதிகப்படுத்தியிருக்கோம். தவிர, ஆங்காங்கே இருக்குற பங்களா வாட்ச்மேன்களிடம் நல்ல தொடர்பில் இருக்கிறோம். எங்களுடைய தொந்தரவு தாங்காம, ஜோடிகள் எல்லாம் இப்ப மகாபலிபுரம் பக்கம் போயிடறாங்க. இதனால சமூக விரோதிகள் நடமாட்டமும் இல்ல" என்று ஒரேயடியாக மறுத்தார்.

• யாணன்

'என்னைக் காணும்
பல வழியில்
தன்னையறிதலும்
ஒன்றாகும்!'

\- ஸ்ரீகிருஷ்ணன்

# 3

சீனுவின் அந்தக் கோபப் பார்வை சாரு வரையில் மிகப் புதிது. இப்படி எல்லாம் அவர் கோபப் பார்வை பார்க்கவும் இதுநாள் வரையில் அவளுக்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய் விட்டது. இப்பொழுது ஒரு மரப்பாச்சி பொம்மை நிமித்தம் அவர் கனலாவது, அவள் வரையில் ஒரு அதிசயமாகக் கூடத் தோன்றியது.

ராஜத்தை சமீபத்தவர், "ராஜம்... இந்தா முதல்ல சன்னதில கொண்டு வை. நான் போய் காவிரில குளிச்சிட்டு வரேன். வந்து முதல்ல திருவாராதனை. அப்புறம் தான் மற்ற எல்லாம்..." என்றவர், கொடியில் இருந்த துண்டை எடுத்து விரித்து மார்பை மூடிக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

பார்த்துக்கொண்டிருந்த பத்மநாப அய்யங்காருக்கு, சீனுவின் அந்தக் கோபம் ஒன்றும் புதிதில்லை. மெல்ல சாருவை சமீபித்தவர், "அம்மாடி பட்டணத்துப் பொண்ணே. சீனு எதை வேணா தாங்கிப்பான். ஆனால் பெருமாள் விஷயத்துல ஒரு குற்றம் குறைன்னாலோ, அலட்சியம் ஆத்திரம்னாலோ தாங்கிக்கவே மாட்டான்" என்றார்.

சாருவுக்கு பத்மநாப அய்யங்கார் ஓவராகச் சுருதி சேர்ப்பது போலத் தோன்றியது.

"ஆமா எப்ப ஊர்ல இருந்து வந்தாலும் முதல் காரியமா காவிரியப் பாக்கத்தானே ஓடுவே சம்பா... இன்னிக்கு என்ன நின்னு பேசிண்டிருக்கே..."

"இதோ கிளம்பிண்டே இருக்கேன் மாமா" என்றவன், சற்றுத் தயங்கியவனாய் சாருவைப் பார்த்தான். பிறகு "என்ன பெரிய காவிரி... நாளைக்குப் போயிண்டா போச்சு. முதல்ல அம்மா கையால காபி..." என்றபடியே ராஜத்தைப் பார்க்க, உள் பக்கம் போக இருந்தவனை சாரு பார்வையாலேயே தடுக்க, பத்மநாப அய்யங்கார் இனி தமக்கு அங்கே வேலையில்லை என்பது போலக் கிளம்பிவிட்டார்.


"என்ன சாரு?"

"அவர் கேட்ட அதே கேள்விதான். காவிரிக்குக் கிளம்பலையா?"

"இல்ல சாரு... வேண்டாம். அந்தப் பைத்தியத்தைத் துரத்திண்டு ஓடினதுல டயர்டா வேற இருக்கு..."


"எவ்வளவு களைப்பா இருந்தாலும் காவிரில விழுந்தா பறந்துடும்னு சொல்ற நீங்களா இப்படிப் பேசறேள்...?" சாரு விடாமல் மடக்கவும், அவளைச் சற்று ஊன்றிப் பார்த்தவன் "சாரு... நான் எதனால போக மாட்டேங்கறேங்கறது உனக்கு இன்னுமா புரியலை...?" என்றான்.

"புரியறதாலதான் கேக்கறேன். அந்த நாடி ஜோசியன் சொன்ன மாதிரி முதல் விஷயம்





# எங்கே என் கண்ணன்?



நடந்துடுத்து. அடுத்ததும் நடந்துடும்ங்கற பயமா?"

அவள் தன் பேச்சில் முக்கியமான அந்த பாயிண்ட்டைத் தொட்டாள்.

"சாரு.."

"உஸ்ஸ்.... என் கேள்விக்கு பதில்."

"வேண்டாம் சாரு. இப்பத்தான் வந்துருக்கோம். மத்த விஷயத்தை ஆற அமரப் பேசுவோம்."

"இல்ல.. நீங்க இப்பவே காவிரிக்குக் கிளம்பறேன். நானும் கூட வரேன்."

"சாரு..."

"இந்த மரப்பாச்சி கண்ணனை ஒரு பைத்தியம் தூக்கிண்டு ஓடினது. ஒரு தற்செயலான விஷயம். நான் அப்படித்தான் நினைக்கறேன். மற்றபடி அந்த ஜோசியத்தை நீங்க நம்பறது மடத்தனம்.."

"சரி, எல்லாத்தையும் அப்பறமா பேசலாம். அம்மா காதுல விழுந்துடப் போறது.."

"அம்மா மனசைப் பாக்கறா மாதிரியே என் மனசையும் பாருங்கோ. உங்கப்பா என்னை ஒரு குற்றவாளி மாதிரி பார்த்துட்டுப் போயிருக்கார். அவர் வந்த பின்னால எப்படியும் அந்த நாடி ஜோசியன் பத்தி, அவன் எழுதிக் கொடுத்தது பத்தி

**இந்திரா சௌந்தர்ராஜன்**

பேசத்தான் போறேன். நீங்க இங்க வந்துருக்கறதே அதுக்குத்தான். அப்படிப் பேசும்போது அதெல்லாம் பொய்னு சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் வேணுமா, வேண்டாமா?"

- சாரு அழுத்தமாகக் கேட்டாள். இடையில் காபியின் வாசம் முன்னால் வர, ராஜம் காபி தம்ளருடன் வரவும், ஒரு தாற்காலிக அமைதி.

ராஜம் மௌனமாக காபித் தம்ளரை நீட்டினாள். பதவிசாக வாங்கிக் கொண்டாள்.

அப்படியே "அம்மா.. நானும் சாருவும் காவிரிக்குப் போய் குளிச்சுட்டு வந்துடறோம். சூடா சமையல் பண்ணி வை. வந்து ஒருபிடி பிடிக்கறேன்" என்று சற்று செயற்கையாக அவளிடம் வழிந்தான்.

"பார்த்துப் போயிட்டு வாடா. சாரு.. நீ கரைல நின்னே குளி. இவன் பாட்டுக்கு நீஞ்சறேன்னு மறுகரைக்குப் போகப் பார்ப்பான்... விடாதே..." என்று சகஜமாகப் பேசினாள்.

சாரு ஒரு சிரிப்புடன் கேட்டுக் கொண்டாள். அப்படியே தான் கொண்டு வந்த சூட்கேஸை நோக்கி நடந்தாள். அதனுள் தான் அவளது புடைவை, நைட்டி என்று எல்லா உடைகளும் அடங்கியிருந்தன.

சற்றே ஆசுவாசத்தோடு அதைத் திறந்தவள், சூட்கேஸின் உட்பக்க ஃபோல்டரில் அந்த நாற்பது பக்க நோட்டைப் பார்த்தாள்.

அது நாடி ஜோசியன் எழுதித் தந்த நோட்டு. மெல்ல எடுத்து விரித்தாள். கச்சிதமாய் ஒரு நாலு வரிக்குப் பக்கத்தில் போய் நின்றாள்.

'ஓடும் நீருக்குள்ளே ஒரு தலையாய்
நீ மூழ்க
கூடும் உன் உடம்பும் வட்டச் சூழல
தனில் சேரும்; அதனாலே
நீர்ச்சாடும் கரைவெளியும் கவனத்தால்
தப்பிடவே
பாடும் கிச்சலை மகனின் பாட்டி
லுண்டே பரிகாரம்!'

- பாடலைப் படித்து முடித்தவள் விரல்களால் அதை வருடிவிட்டு, நோட்டை மூடி திரும்பவும் சூட்கேஸ் உள்ளே ஃபோல்டரில் செருகினாள்.

மனதுக்குள் அந்த நாடி ஜோசியனிடம் நிகழ்த்திய தர்க்கம்.

"இந்தப் பரிகாரம் அது இது எல்லாம் நீங்க பணம் புடுங்கச் செய்யற தந்திரம். எங்களுக்குக் குழந்தை இருக்குன்னு சொல்லிட்டீங்க. அப்புறம் எதுக்குப் பரிகாரம், படிகாரம் எல்லாம்?

இன்னிக்கு மெடிகல் சைன்ஸ் எவ்வளவோ வளர்ந்துடிச்சு. எங்க உடம்புலயும் ஒரு குறையும் கிடையாது. ஆகையால, இன்னிக்கு இல்ல நாளைக்கு, நிச்சயம் ஒரு குழந்தை எனக்குப் பிறக்கும். எப்படிப் பெத்துக்கணும்னும் எனக்குத் தெரியும். நீங்க கிளம்புங்கோ" என்று அவனிடம் பேசியதும், சம்பத்குமார் விழித்ததும் ஒரு ஓட்டம் ஓடியது.

"அம்மா... இது நாங்க எழுதின பாட்டு இல்லை. முனிவருங்க எழுதினது. காவிரி ஆத்துல உங்களுக்குக் கண்டம் இருக்குன்னு வந்துருக்கிற எச்சரிக்கையை மதிச்சு நடந்துக்கறதுதான் உங்களுக்கு நல்லது" என்று அவனும் கூறியிருந்தான். எல்லாவற்றையும் அசைபோட்டபடி புறப்பட்டாள். சம்பத்தும் தயாராக இருந்தான்.

பின் இருவருமாக வீதியில் இறங்கினர்.

எதிரில் சீனு ஆற்றில் குளித்துவிட்டு விறுவிறுவென்று வந்தபடி இருந்தார். சம்பத்தும் கவனித்தான்.

அவரோ புருஷ சூக்தம் சொன்னபடியே அவர்களைக் கடந்து போனார். அவரது அந்த வேகம், பாராமுகம் எல்லாமே சம்பத்தை சற்றுக் கீறியது.

"ச்சே... வந்ததும் வராததுமா ஏதேதோ நடந்துடுத்து..." என்றான்.

"எதுவும் நடக்கலை. பேசாம நடங்கோ.."

## மெடிக்கல் மூலை!

நமக்கு ஏற்கெனவே தெரிந்த ஒரு சங்கதியை மிகப்பெரிய ஆராய்ச்சி முடிவாக வெளியிட்டிருக்கிறது அமெரிக்கன் ஹார்ட் அசோஸியேஷன். ஓட்டப்பயிற்சி, நீச்சல் பயிற்சி, தோட்ட வேலை இவை மூன்றும் (தனித்தனியாகச் செய்ய வேண்டும்) இருதய நோயை பெருமளவில் கட்டுப்படுத்துகிறதாம். சைக்கிள் மிதிப்பதுகூட சிறந்த பயிற்சி முறைதானாம். கம்ப்யூட்டர் முன்னால் கட்னே என்று நாள் முழுக்க அமர்ந்து வேலை

என்றான் சாரு. அதுவும் அழுத்தமான குரலோடும், ஒரு மாதிரி அபிநயத்தோடும்.

"சாரு... சில சமயம் நீ நடந்துக்கறது எனக்கே பிடிக்க மாட்டேங்கறது..." என்றான் நடந்தபடியே...

"ஒரு ஜெனரல் மேனேஜர் மாதிரி சிந்திச்சுப் பேசுங்கோ. இப்ப நீங்க பேசறதெல்லாம் அம்மாஞ்சித்தனமா இருக்கு..."

"இருக்கும்... இருக்கும்... ஆனாலும் உனக்கு தைரியம். ஆனா எனக்கோ பக்கு பக்குன்னு இருக்கு."

"அடுத்து என்ன நடக்கும்னு யாராலயும் சொல்ல முடியாது. ஒரு செயலுக்கு அதுக்கு முந்தின செயல்தான் அடிப்படை. அதை முதல்ல புரிஞ்சுக்கோங்கோ."

அவளது செரிவான பேச்சும் தன்னம்பிக்கையும் அவனைக் கொஞ்சம் கலவரவும் செய்தன.

அதேசமயம் எதிரில் ஆறும் தெரிந்தது. தண்ணீர் ஒன்றும் அவ்வளவாக இல்லை. மார்பளவு இருந்தால் அதிகம். படித்துறையின் முதல்படி வரை தண்ணீர் ஓடும். இறங்கினால் ஒரு பனை மரம் மூழ்கும். அப்படி ஓர் ஓட்டமாக இப்போது இல்லை.

கிழவி ஒருத்தி படித்துறைக் கல்லில் சன்லைட் சோப் போட்டு நுரை பெருக்கியபடி இருந்தாள். அவளிடம் பேசினான்.

சம்பத்தைப் பார்த்தவள் "யாரு அய்யர் மவனா... எப்படி இருக்கே ராசா?" என்று சௌஜன்யமானாள்.

"நல்லாருக்கேன் பாட்டி. நீ எப்படி இருக்கே?"

"எனக்கென்ன... இந்த காவிரி கணக்கா வருஷத்துல பெரும்பாதி நான் காச்சப்பாடு. அப்பப்ப ஓட்டம்..."

"என்ன, தண்ணி ஒண்ணும் ரொம்ப இருக்கற மாதிரி தெரியலையே..."

"மேட்டூர் டாம்ல திறந்த கதவுங்களை மூடிட்டாங்களாமே..." என்றாள்.

"திரும்பத் திறக்க எவ்வளவு நேரமாகப் போகுது?" என்று கேட்டவன், சற்று பயமின்றி சாருவைப் பார்த்தான்.


"சாரு.. நீயும் இறங்கு நீந்திக் குளிக்கலாம்..." என்றான் புதிய உற்சாகமுடன். அப்படியே தண்ணீரில் இறங்கினான். மீசை முளைத்த மீன் கூட்டம் ஒன்று அவன் கணுக்கால் அழுக்கை தங்களுக்கான விருந்தாக நினைத்துப் பாய்ந்து வந்து கடித்தன. அது ஒரு இன்பமான குறு குறுப்பு!

உச்சந்தலைவரை ஒரு விறுவிறுப்பு பரவ, அப்படியே டீ-ஷர்ட்டைக் கூட அவிழ்க்காமல் தண்ணீருக்குள் பாய்ந்தான்.

சாருவும் படிகளில் இறங்கி பவ்யமாக அமர்ந்துகொண்டு குளிக்க ஆரம்பித்தாள்.

அந்த நாடி ஜோசியப் பாட்டல் ஒரு வேளை இப்போது நடக்காமல் பிறகு நடக்கக்கூடுமோ... இல்லையென்றால் அது ஒரு புளுகாக இருக்குமோ என்று பலவித எண்ணங்கள் சம்பத்தை ஆக்ரமிக்க, நீரைக் குடித்து ஃபவுண்டன் போல உமிழ்ந்தபடியே நீராடியவன், அடி மணலைத் தேடி உள்புறமும் போனான். சாருவும் மெல்ல மெல்ல நடு ஆற்றுக்கு வந்து, காலடி மணல் அரிபட நின்றபடி இருக்க, வெகுதூரத்தில் ஒரு நீர்த்தாரை! தண்ணீரிடமும் ஓர் அதீத வேகம்...

(தொடரும்)



செய்பவர்களுக்கு 'வாக் பிரேக்' என்று ஒன்றை அறிமுகப் படுத்தலாமா என்று அமெரிக்காவில் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஹா! அப்படியானால் இது தான் சான்ஸ் என்று ஆபீஸுக்கு டாடா காட்டிவிட்டு, பொடி நடையாக வீட்டுக்குப் போய்விடலாமா?

# தொடரும் வரதட்சணைக் கொடுமை..!

**வரதட்சணை...** கோடீஸ்வரன் வீட்டுச் செல்ல மகளிலிருந்து, நடுத்தர வர்க்கத்து ஐந்தாவது பெண் வரை பலரையும் பந்தாடுவது இந்த ஒரு விஷயம்தான். முன்பெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வரதட்சணைக் கொடுமை, சமீபகாலமாக புற்றீசல்போல் பெருகிவிட்டது. அண்மையில் ஒரே தினத்தில் சென்னை நகரில் மட்டும் இக்கொடுமையால் நான்கு பெண்கள் தற்கொலை செய்து கொண்டனர். முடிவின்றித் தொடரும் இந்த அவலத்திற்குத் தீர்வுதான் என்ன...? எந்தச் சூழலில் பெண்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்? பிரச்னை முதலில் எங்கிருந்து தொடங்குகிறது...? என்று பல கோணங்களில் விவாதித்தனர் கல்கிக்கென சந்தித்துக்கொண்ட நான்கு பேர். மருமகள்களின் சார்பாக சுந்தரியும், மாமியார்களின் நிலையிலிருந்து சாந்திபாயும், கணவர்களின் கருத்துகளை எடுத்துரைப்பவராக சீனிவாசனும், மனநல மருத்துவர் கௌதம் தாஸுடன் விவாதித்ததிலிருந்து...

சுந்தரி : ஏகப்பட்ட கனவுகளோட ஒரு பெண் புகுந்தவீட்டுக்கு வர்றா. பூவா நுழைஞ்சவளை சருகின சாம்பலா திருப்பி அனுப்புற சமுதாயத்துலதான் நாம இன்னும் வாழ்ந்திட்டிருக்கோம்.

சாந்தி பாய் : என்னம்மா, இப்படி ஒரேயடியா மாமியார் வீட்டைக் குத்தம் சொல்ற? முதல்ல தப்பு எங்கிருந்து ஆரம்பிக்குது? விரலுக்கேத்த வீக்கம் வேணும் இல்லையா? அதில்லாம பெண்ணோட அப்பா தன் சக்திக்கு மீறி கடனை வாங்கியும், பொய் சொல்லியும் கல்யாணம் பண்றதாலதான் இத்தனை தற்கொலைகளும் நேருது. 'இப்போ 30 பவுன் போடறோம். அப்புறமா மீதி போடறோம்'னு ஏன் சொல்லணும்?

சுந்தரி : இருக்குற வசதிக்குத்தான் மாப்பிள்ளை தேடணும்னா, அப்புறம் எந்தப் பொண்ணுக்கும் கல்யாணமே நடக்காது. 'நாங்க அப்படிப் படிக்க வைச்சிருக்கோம், இப்படி வேலை பார்க்கிறான்'னு பெண் வீட்ல டிமாண்ட் பண்ணாத பையன் வீட்டார் ரொம்பக் குறைச்சல்தான்.

டாக்டர் : முதல்ல வரதட்சணைன்னா என்ன? வரனுக்குத் தரப்படும் தட்சணை. அதாவது தன் பெண்ணை இனி இவன் கட்டி ஆளப் போகிறானே என்கிற எண்ணத்தில், பையனுக்குத் தானாக தரப்படும் தட்சணை; வெகுமதி. அதையே நாளடைவுல பையன் வீட்டார் தங்கள் இஷ்டத்துக்கு மாத்திக்கிட்டாங்க. இரு உறவுகளும், மனங்களும் சங்கமிக்கும் அற்புதமான நிகழ்வு திருமணம். இதையும் இன்றைக்கு வியாபாரமாக



மாற்றிக்கொண்டது வேதனையான விஷயம்.

**சுந்தரி** : 'எனக்கு என் மேலே நம்பிக்கை இருக்கு. சொந்தமா என்னால மனைவியைக் காப்பாத்த முடியும்'னு






எந்தப் பையனும் சொல்றதில்லையே!

**ஸ்ரீனிவாசன்** : பெரியவர்கள் ஒன்று கூடி முடிவெடுக்கும் இந்த விஷயத்துல, ஆண்களால எதுவுமே செய்ய முடியாது. பெண் தனக்கு ஏற்ற மாதிரி இருப்பாளான்னு மட்டும்தான் ஒரு ஆண் மகனால முடிவெடுக்க முடியுது.

**சாந்திபாய்** : பையன் வீட்டுல ஏற்கெனவே அவனோட தங்கச்சியையோ, இல்ல அக்காவையோ நிறைய சவரன் போட்டு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருப்பாங்க. இதுல உண்டான கடனை அடுத்த பையன் மூலமாத்தானே திருப்பியெடுக்க முடியும்? எந்த சம்பந்தம் அதிகமா நகையும் ரொக்கமும் தர்றாங்களோ, அதையே பையனுக்குப் பேசி முடிச்சிடறாங்க.

**டாக்டர்** : ஏன் பொண்ணுக்குக் கடன் வாங்கி செலவழிக்கிறீங்க? வரதட்சணை வாங்காத மாப்பிள்ளையைப் பாருங்க. ஆனா இதுல சோகம் என்னன்னா, ஒருத்தன் வரதட்சணை வாங்காம கல்யாணம் பண்ணிக்க முன் வந்தா, அவனை சந்தேகப்பட்டே சாகடிக்கிறதுதான் நமக்குப் பழக்கம். இந்த நிலை மொதல்ல மாறணும். வரதட்சணை கொடுக்காமயும், வாங்காமயும் இருக்கப் பழகணும். பதிலுக்கு உடல் தகுதி சான்றிதழ்களை பரிமாறிக்கலாம். அப்ப சந்தேகமும் இருக்காது பாருங்க.

**ஸ்ரீனிவாசன்** : இந்த மாதிரியான காரணங்களாலதான் பெரும்பாலான ஆண்கள் திருமணத்தின்போது வாயே திறக்கறதில்ல. வரதட்சணை வேணாம்னு எதுக்கு சொல்லணும், நாமே ஏன் பிரச்சனையை உண்டாக்கணும்னு நினைக்கிறாங்க. இது

ப்னஸ் பாயிண்டா அமையறதால பெத்தவங்க ஏக குஷியா வரதட்சணையை டிமாண்ட் பண்றாங்க. இவனால ஒண்ணுமே பேச முடியறதில்ல.



• சுந்தரி




• சாந்தி

**சுந்தரி** : திருமணத்துக்கு முன்னாடி மூடற வாயை ஆண்கள் திருமணத்துக்கு அப்புறமும் தொடர்றது ஆபத்தானது. தன்னை மட்டுமே நம்பி வர்ற ஒரு பெண்ணோட பிரச்சனைகளை இவங்க முழுசாப் புரிஞ்சுக்கறதேயில்லை. அம்மா முந்தானையைப் பிடிச்சிட்டுத்தான் காலா காலத்துக்கும் பக்குவமில்லாம நடந்துக்குறாங்க. 'எந்தக் கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கம்மா'ன்னு கண்ணீர் வடிக்கிற பெற்றோர், பிரச்னையைக் கண்டுகொள்ளாத கணவன், முகம் கொடுத்துப் பேசாத மாமியார், பணம், நகை நச்சரிப்பு இந்தக் கொடுமைகளையெல்லாம் தாங்கிக்க முடியாத பக்குவம், இனிமேலும் வாழ்க்கை இப்படித்தான் இருக்குமோ என்கிற பயம்... எல்லாம் சேர்ந்து தற்கொலைதான் முடிவுங்கிற பரிதாப நிலைமைக்குப் பெண் தள்ளப்படுகிறாள்.



• ஸ்ரீனிவாசன்



• கௌதம்தாஸ்

**டாக்டர்** : இதுக்கெல்லாம் ஒரே காரணம், மனிதர்களின் பக்குவமின்மையும், வாழ்க்கையை எப்படி சரியா வாழறது என்பது தெரியாததும்தான். நம் கல்வி முறை மனப்பாட சக்தியை பரிசோதனை செய்கிறதே தவிர, எப்படி வாழ்க்கையை முறையாக வாழ வேண்டும் என்று கற்றுத் தருவதேயில்லை. சம்பாதிக்கத் தொடங்கும் ஆண் மகனையும், வயதுக்கு வந்த பெண்ணையும் அவசரகதியில் மண வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துகிறார்கள். மற்றபடி இல்லற வாழ்க்கையைப் பற்றி எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. ஏனென்றால் அவர்களுக்கே அது பற்றி எதுவும் தெரியாததுதான் இந்திய வாழ்க்கை முறையின் சாபக்கேடு. அதனால்தான் இத்தனை வரதட்சணைக் கொடுமைகள்... தற்கொலைகள்...

**ஸ்ரீனிவாசன்** : (இடைமறித்து) சில சமயம் பெண்களே தமக்குத் தாமே தீங்கு இழைச்சுக்குறாங்க. 'அக்காவுக்கு மட்டும் 50 பவுன் போட்டியே, எனக்கும் அப்படியே போடு'ன்னு பெற்றோர்கிட்ட மல்லுக்கு நிற்கிற பெண்களும் இன்னைக்கு இருக்காங்க. அதேபோல தனக்கு அப்புறம் தன் மகனுக்கு சமைச்சுப் போடற வேலைக்காரியா தன் மருமகளை மாமியார் நினைக்கக் கூடாது.


**சாந்தி பாய்** : மருமகள்களும் மாமியாரை அந்நியமா பார்த்து, மகனை அவங்ககிட்டருந்து பிரிச்சுப் பார்க்கக் கூடாது. யார் என்ன சொன்னாலும் ஆராய்ஞ்சு முடிவு எடுக்கணுமே ஒழிய, கண்மூடித்தனமா செயல்படக்கூடாது. தன்னோட அம்மா மாதிரி நினைச்சுப் பழகணும். ஏதோ சில சிக்கல்கள் உருவானா கூட பேசித் தீர்த்துக்கணும். புகுந்த வீட்டு குடும்ப உறுப்பினர்களை மதிக்கணும். தவறு இருந்தா தாராளமா திருத்தலாம்.

**டாக்டர்** : கூடவே இரு தரப்பு பெற்றோரும் தங்களோட பொறுப்பையும், வாழ்க்கையோட அர்த்தத்தையும் முதல்ல புரிஞ்சுக்கணும். பிரச்னைன்னா தலையிட்டுத் தீர்க்கணுமே ஒழிய, ஊதிப் பெருசாக்கக் கூடாது. பிரச்னையோட தீவிரத்தை இனிமேலாவது நாம உணர ஆரம்பிக்கணும். அடுத்த தலைமுறையையாவது வரதட்சணை பேய் பிடிக்காம இருக்க உடனே ஆவன செஞ்சாகணும். அரசு பாடத் திட்டங்கள் மூலம் இளைய தலைமுறையைப் பக்குவப்படுத்தணும். அது மட்டுமில்லாம, கடுமையான சட்டங்கள் மூலமாவும் வரதட்சணையை முடிவுக்குக் கொண்டு வரணும்.

- நீலாவள்ளி

படங்கள் : ராஜன்

குறைந்த படிகளே அச்சாகின்றன - முன்பதிவுக்கு முந்துங்கள்



பண்டித வித்துவான் தி.வே. கோபாலையரின்

**25 ஆண்டு கால பேருழைப்பால்**


தமிழகம் இதுவரை கண்டிராத வகையில்

# தமிழ் இலக்கணப் பேரகராதி

**17 தொகுதிகளாக வருகிறது**



- இளம்பூரணர் உரைதொட்டு ஆறுமுகநாவலர் உரைகளுடனும், அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப் பொருள் மூன்றனையும் உள்ளடக்கிய கோட்பாடுகளை விரித்துரைக்கும் நூல்கள்
- நூல் மரபும், மொழி மரபும், தொகை மரபும் சுட்டும் செய்திகளும், தமிழ்மொழி – வடமொழி இலக்கணங்களை ஒப்பிட்டு தமிழுக்கு ஏற்புடைய செய்திகளும் தாங்கி வரும் நூல்கள்.
- சொல்லுக்கு விளக்கமும், மேற்கோளும் காட்டி தமிழ் இலக்கணப் பெரும்பரப்பை விரித்துரைக்கும் கருவி நூல்கள்
- மொழி ஆய்வாளர்களுக்கும், இலக்கண அறிஞர்களுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காய் வெளிவரும் நூல்கள்
- தமிழ் இலக்கண அகராதி வரலாற்றில் புதுவரவாய், பொலிவோடும், மிகச் சிறந்த கட்டமைப்போடும் வருகிறது



| | |
|---|---|
| நூல்களின் மொத்த விலை | உரு. 3915.00 |
| சிறப்பு விலை (15.09.2005க்குள்) | உரு. 2800.00 |

வெளிநாட்டினருக்கு $300 அமெரிக்க டாலர்



*'தமிழ்மண் பதிப்பகம், சென்னை' என்ற பெயரில் நூல்களுக்கான தொகையினை வரைவோலையாக / பணவிடையாகக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.*

**தமிழ்மண் பதிப்பகம்**

*2 சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்.*


*சென்னை - 600 017. தொ.பே: 2433 9030*

திறமையைக் காசாக்குவது மட்டுமே வாழ்க்கை இல்லையென்று சொன்னேன் 'இல்லையா... ஆனால் அதைத்தான் இன்று பலரும் செய்து கொண்டிருக்கிறோம். வாழ்க்கை என்பது அவ்வளவுதானா?

காட்டில் புலி, சிங்கம், சிறுத்தை, மான், பாம்பு என்று பல்வேறு விலங்குகள் வாழ்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான தனித்தன்மை உள்ளது. ஒவ்வொரு மிருகத்தின் வாழ்க்கையும், மற்றவற்றிலிருந்து மாறுபட்டு இருந்தபோதிலும், அந்தந்த மிருகங்கள், தமக்கென வரையறுக்கப்பட்ட வாழ்க்கை வரைமுறைகளை மீற முயற்சி செய்வதில்லை.

ஆனால், மனிதன் மட்டும்தான் வாழ்க்கையில் வெற்றி என்ற ஒன்றை நிர்ணயம் செய்து கொள்கிறான். அதை அடைவதற்காகத் தனது திறமை, உழைப்பு, நேரம் என்று அனைத்தையும் வரையறைகளைக் கடந்து செலவழிக்கிறான். அப்போது அவனுக்கு ஏகபட்ட சவால்களை, பிரச்னைகளைச் சந்திக்கும்படி ஆகிறது. துணிச்சலுடனும், திறமையுடனும் அவற்றை எதிர்கொள்கிறான். அப்படியும் முயற்சியில் தோல்வியைச் சந்திக்க நேரிட்டால், சிலர் துவண்டு போகிறார்கள். மற்றவர்கள் மறுபடியும் மேலும் தீவிரமாக முயற்சி செய்கிறார்கள். புது உத்திகளைக் கையாளுகிறார்கள். இறுதியில் வெற்றிக் கனியை தட்டிப் பறிக்கிறார்கள். தாங்கள் வெற்றி பெற்று விட்டதாக சந்தோஷப்படுகிறார்கள். மக்களும் அவர்களைச் சாதனையாளர்கள் என்றும், வெற்றி பெற்ற மனிதர்கள் என்றும் வியந்து, பாராட்டுகிறார்கள்; அங்கீகரிக்கிறார்கள்.

இத்தனை கால முயற்சி, உழைப்பு, போராட்டம் எலலாம் சுபமாய் முடிந்து, வெற்றி பெற்ற சந்தோஷம், மனதில் அமைதியையும் திருப்தியையும் ஏற்படுத்த வேண்டுமல்லவா? ஆனால், நிஜத்தில் 'வெற்றி' ஒருவரது வாழ்க்கையில் மன அமைதியையும், திருப்தியையும் தருகிறதா? ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாகப் பணம் சேர்ப்பதில் திறமை பெற்றிருக்கிறாரோ, வெற்றி பெறுவதில்




# நிம்மதியைத் தொலைக்காதீர்கள்!

சுனந்தாஜி

கவனம் செலுத்துகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவரது திருப்தியும், மன அமைதியும் குறைகிறதே!

அது மட்டுமா? வெற்றி இதுதான் என்று அவர் முன்னதாக நிர்ணயம் செய்த இலக்கை அடைந்தவுடன் திருப்தி அடைவதற்குப் பதிலாக, வேறு ஒன்றைப் புதிய இலக்காக அமைத்து, 'அதை அடைந்தால்தான் வெற்றி; அந்த வெற்றிதான் சந்தோஷத்தை, திருப்தியைத் தரும்' என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதைச் சாதித்தாலும் திருப்தி அடையாமல், இன்னொரு இலக்கை நோக்கி, நிற்க நேரமின்றி ஓடுகிறான் மனிதன்.



இப்படியாக நிம்மதியைத் தொலைத்துவிட்டு, வெற்றியை மட்டும் தொடர்ந்து துரத்திக்கொண்டே செல்லும் பந்தயம் ஆகிவிட்டது மனித வாழ்க்கை!

வாழ்க்கை என்பது வாழ்வதற்காகத் தானேயொழிய, மகிழ்ச்சியை, மன அமைதியை, திருப்தியைத் தொலைப்பதற்கானது இல்லை.

**வெற்றியைத் துரத்தும் பந்தயமாகிவிட்டது மனித வாழ்க்கை!**

இரண்டு மனிதர்கள் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் மட்டுமே அமர்ந்து சௌகரியமாய்ப் பயணம் செய்யும் படியான முதல் வகுப்புப் பெட்டி அது.

இரண்டு பயணிகளில் ஒருவர் பெரும் பணக்காரர். அவரது செல்வச் செழிப்பு, அவரது தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரியும். இன்னொருவர், சாதாரணமான தோற்றம் கொண்ட மனிதர். ஆனால், உண்மையில் அவர் சாதாரணமான மனிதர் கிடையாது, ஒரு பக்காத் திருடன்!

திருட்டுப் பேர்வழிக்கு, பணக்காரர் இந்த ரயிலில் இலட்ச ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு பயணம் செய்யப் போகிறார் என்ற விஷயம் எப்படியோ தெரிந்து விட்டது. அதனால்தான், பெரும் முயற்சி செய்து, அவர் பயணம் செய்ய டிக்கெட் வாங்கி இருக்கும் அதே முதல் வகுப்பு கூப்பே பெட்டியில்,

தனக்கும் ஒரு டிக்கெட் வாங்கியிருந்தான்.

ரயில் புறப்பட வேண்டிய நேரத்துக்குப் புறப்பட்டது. நம் கதையில் வரும் இரண்டு பேரும் பொதுவாக ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொண்டனர்.

தனது உள்நோக்கம் துளியும் வெளிப்பட்டுவிடாமல் பாதுகாப்புடன் பழகினான் திருடன்.

ஆனால், பணக்கார மனிதர், திடீரென்று இப்படி ஒரு காரியம் செய்வார் என்பதை அந்தத் திருடன் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை. அப்படி என்ன செய்துவிட்டார் அந்தப் பணக்காரர் என்று கேட்கிறீர்களா? தன் பெட்டியைத் திறந்து பணக்கட்டுகளை எடுத்து வெளியில் வைத்து எண்ண ஆரம்பித்து விட்டார். திருட வந்தவனின் கண்ணெதிரிலேயே பணத்தை எடுத்து வைத்து எண்ண ஆரம்பித்தால், எப்படி இருக்கும்? ரொம்பவே டென்ஷனாகிவிட்டான் திருடன்!

"ஐயா! ஒரு பத்து நிமிஷம்! நான் கழிப்பறைக்குச் சென்றுவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

திருடன் கழிப்பறையிலிருந்து திரும்பி வந்தபோது, பணக்காரர் பணத்தை எண்ணி முடித்து, எடுத்து பத்திரப்படுத்தி வைத்துவிட்டு, ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

'பணத்தை எங்கே ஒளித்து வைத்திருப்பார்?' என்ற கேள்வி, திருடன் மனத்தைப் போட்டுக் குடைந்தெடுத்தாலும், அவன் அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

அடுத்து, பணக்காரர் கழிப்பறைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றார். அவர் கழிப்பறைக்குள் சென்று உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு,



வேகமாய் தனது கூப்பேவுக்கு வந்த திருடன், பரபரப்புடன் பணக்காரரது பெட்டி, பைகளைத் திறந்து பணத்தைத் தேட ஆரம்பித்தான். என்ன தேடியும் பணத்தை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பணக்காரர், கழிப்பறைக்குச் செல்கிற போது, தன்னுடன் ரூபாய்க் கட்டுகளை எடுத்துக் கொண்டு போகவில்லை என்று உறுதியாகத் திருடன் நம்பினான். இரவானது.

பணக்காரர் நிம்மதியாகத் தூங்கினார். திருடனுக்கோ தூக்கம் வரவில்லை! பணம் எப்படி மாயமாய் மறைந்து போனது? எங்கே ஒளித்து வைத்து விட்டார்? என்ற கேள்விகள் மண்டையைக் குடைந்தன.

நடு இரவில் எழுந்து, மறுபடி ஒரு தடவை பணக்காரரது பெட்டி, பைகளில் தேடிப் பார்த்தும் பணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்தப் பணம் எங்கே போனது?

(வெற்றி தொடரும்)


# ஆகாயத்தில் ஒரு அந்நியன்!

இவர் பெயர் 2003 UB 313. இவர் குட்டையா நெட்டையா? கறுப்பா சிவப்பா? ஒல்லியா குண்டா? நல்லவரா கெட்டவரா? போன்ற விவரங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இருப்பதிலேயே குட்டியூண்டு கிரகமான ப்ளூட்டோவை விட, இவர் சுற்றளவில் பெரியவர். நமக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தை விட 97 மடங்கு தூரத்தில், எந்தவிதக் கவலையுமின்றி சீராகச் சுற்றிக் கொண்டிருக்கிறார் இவர்.

இவரை எப்படிக் கண்டுபிடித்தார்கள்? அக்டோபர் 2003ல் கலிஃபோர்னியாவில் உள்ள ஒரு வான்வெளி ஆராய்ச்சிச் சாலையிலிருந்து ஆகாயத்தை நோட்டம் விட்டபொழுது, வழக்கத்திற்கு மாறான ஒரு புதிய உருவத்தைச் சந்தித்திருக்கிறார்கள். முதலில் யாரும் அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் ஏதோ வித்தியாசமாகப் படவே, அந்த அந்நியனை தொடர்ந்து கண்காணித்திருக்கிறார்கள். ஜனவரி 2005ல், இவரது செயல்பாடுகள் ஆராய்ச்சியாளர்களைக் கவரத் தொடங்கின. இவர் வலம் வரும் பாதையை ஆவலுடன் வேவு பார்க்கத் தொடங்கினர். புதிய டெலஸ்கோப் மூலம் இவரது அசைவுகளைப் பதிவு செய்து கொண்டனர். ஸ்பெயினிலும் இந்த அதிசய அந்நியனை கவனித்திருக்கிறார்கள். இவர் வித்தியாசமானவர், கவனிக்கப்பட வேண்டியவர் என்று அவர்களும் முடிவு செய்தனர். மொத்தத்தில் இந்த அந்நியன் அனைவரையும் தன் பக்கம் கவர்ந்துவிட்டான்.

'அற்புதம்! அற்புதம்! பத்தாவது இரகத்தைக் கண்டுபிடித்துவிட்டோம்' என்று துள்ளிக் குதிக்கிறார்கள் சிலர். 'கொஞ்சம் கல், கொஞ்சம் ஐஸ், இரண்டும் சேர்ந்த உருண்டைதான் இந்த அந்நியன். பத்தாவது ப்ளானட்னு சொல்றதெல்லாம் டுமச்' என்கிறார்கள் வேறு சிலர். இதற்கிடையில் இவரைக் கிண்டலடிப்பதற்காகவே ஒரு கூட்டம் இருக்கிறது. 'என்னது ப்ளானட்டா? நோ நோ! சோலார் சிஸ்டத்தை சுத்திக்கிட்டிருக்கிற குட்டி ஐஸ் குப்பை இது. தட்ஸ் ஆல்' என்று அவர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'யார் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள், என் பணி சுற்றிக் கொண்டிருப்பதே' என்று, எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் ஒரு ஜென் துறவியைப் போல் சூரியனை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார் இந்த அதிசய அந்நியன். அவ்வளவு பெரிய தோற்றத்திற்கு ஒரு சிறு கோபமாவது வரவேண்டுமே! அதுதான் இல்லை. எதற்கு வீண் வம்பு என்று ப்ளூட்டோ உட்பட அனைத்து சூரிய குடும்பத்தினரிடமிருந்தும் ரொம்பவே விலகிப் போயிருக்கிறார். ஒரு வேளை பற்றற்ற நிலையை அடைந்து விட்



# உலகம் இவ்வளவுதான்!

டாரோ என்னவோ?

இந்த ஜென் துறவியை நன்றாக அறிந்த ஒரே நபர், ப்ளூட்டோவாகத்தான் இருக்க முடியும். காரணம்? 1930ல் ப்ளூட்டோ கண்டு பிடிக்கப்பட்ட பொழுது இதே போன்ற பிரச்னைகள் எழுந்தன. 'இத்தனூண்டு இருக்கு. இதைப் போய் கிரகம்னு சொல்றீங்களே, நோ வே' என்று ப்ளூட்டோவிற்கு எதிராகப் பலர் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் ப்ளூட்டோவின் ஆதரவாளர்கள் சிரமப்பட்டுப் போராடி, 'கிரகம்' எனும் பதவியை ப்ளூட்டோவிற்கு வழங்கி கௌரவித்தனர்.

'ப்ளூட்டோவை விடப் பெரிதாக இருக்கும் இந்த ஜென் துறவியையும் ஏன் கௌரவப்படுத்தக் கூடாது?' என்று பலர் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். எதிரணியினர் சட்டையை மடித்துக் கொண்டு உதார் விடுகின்றனர். 'ஹலோ, இவரை மட்டும் கிரகமா மாத்தினீங்க, அப்புறம் இவரை மாதிரியே நாங்க 24 பேரை கூட்டிக்கிட்டு வருவோம். அவங்களுக்கும் இதே பட்டத்தைத் தரணும். இல்லேன்னா அவ்ளோதான்!' என்று முறைக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, 'நான்தான் இவரை முதலில் பார்த்தேன்', 'இல்லை இல்லை நான்தான்' என்று ஆராய்ச்சியாளர்களுக்குள்ளே சண்டை வேறு வலுத்துக்கொண்டிருக்கிறது. இந்த அற்ப மானிடப் பதர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே, அடி மேல் அடி வைத்து நகர்ந்து கொண்டிருகிறார் அந்நியன் கம் ஜென் துறவி 2003 UB 313

- மருதன்




# புத்தகக்

## தங்கம்மாள் பாரதி படைப்புகள்

"காதல் மணம்தான் சிறந்தது. நான் என் பெண்ணை யாரையும் கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்த மாட்டேன்" என்று அடம்பிடித்து, தங்கம்மாவை ஒரு புதுமைப் பெண்ணாக வளர்க்க ஆசைப்பட்டார் பாரதி. பாரதியின் கனவு வீண் போகவில்லை. அவர் வயதுடைய பெண்கள் அனைவரும் காந்தியின் அறிவுரையை ஏற்று நூல் நூற்றுக்கொண்டிருந்த சமயம், தங்கம்மாள் மட்டும் அனாயாசமாக நூல் படைத்துக் கொண்டிருந்தார். இந்த கெட்டி அட்டைத் தொகுப்பில் தங்கம்மாவைப் பற்றியும், பாரதியைப் பற்றியும் அவரது நண்பர்கள் பற்றியும் பல கெட்டியான செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன.

**அமுதசுரபி வெளியீடு, ஏ-7, இரண்டாம் அவென்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை - 600 102. பக்கம் 472, விலை ரூ.200.00**

## நிமிர வைக்கும் நெல்லை
### - வழக்கறிஞர் கே.எஸ். இராதாகிருஷ்ணன்

திருநெல்வேலிக்குள் இத்தனை கதைகளா? அதுவும் எப்பேர்ப்பட்ட கதைகள்! வரலாறு, இலக்கியம், அரசியல், சமயம், சுதந்திரப் போராட்டம் என நீண்டுகொண்டே செல்கிறது பட்டியல். நெல்லையுடன் தொடர்பு கொண்ட எந்தவொரு துறையையும், எந்தவொரு முக்கிய வரலாற்றுத் தகவலையும் விட்டுவிடாமல் இழுத்துப் பிடித்து வந்து, கதைபோல சொல்லியிருக்கிறார் ஆசிரியர். மிக எளிமையான நடை. 'வரலாறா? ஆளை வுடு சாமி' என்று அலறுபவர்கள் கூட, 'அட புதுசா இருக்கே' என்று ஒரே மூச்சில் படித்துவிடத் தூண்டும் படைப்பு. ஒவ்வொரு பக்கத்தின் ஓரத்திலும் சிறிதளவு நெல்லை மண் ஒட்டிக் கொண்டிருக்கிறது.


**பொதிகை - பொருநை - கரிசல் கட்டளை, 4/359, ஸ்ரீசைதன்ய அவென்யூ, பாலவாக்கம், சென்னை - 600041. பக்கம் 200, விலை ரூ.75.00**

## நாலு மூலை -
### ரா.கி. ரங்கராஜன்

ரா.கி. ரங்கராஜன், அண்ணா நகர் டைம்ஸில் எழுதிய பத்திகளின் தொகுப்பு. பல சுவாரஸ்யமான 'லைட் ரீடிங்' விஷயங்களை, நாலு மூலைகளிலிருந்தும் நாலு கால் பாய்ச்சலில் தாவி சேகரித்திருக்கிறார். அவற்றை மேலும் 'லைட்டாக்கி' நகைச்சுவை கலந்து படைத்திருக்கிறார். ஒரு மாலைப் பொழுதில் பக்கத்து வீட்டு நண்பருடன் புத்தகம், இசை, சினிமா என்று சாவகாசமாக உரையாடுவதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது.

**கிழக்கு பதிப்பகம், எண்.16, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை - 600 004. பக்கம் 208. விலை ரூ.80.00**

- புஜ்ஜா



உ

# ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
# ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
## ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.
## ✆ : 04364 273900

**த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லட்சார்ச்சனை,**
**ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா**
**மற்றும் திருக்கல்யாண உற்சவம்**
**8.9.2005 முதல் 11.9.2005 வரை நான்கு நாட்கள்**

அன்புடையீர்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா குருவருள் இறையருள் துணை கொண்டு பல நற்பணிகளை ஆற்றி வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக நிகழும் பார்த்திப வருடம் ஆவணி மாதம் 23-ஆம் தேதி வியாழன் துவங்கி 26-ஆம் தேதி ஞாயிறு முடிய (8.9.2005 - 11.9.2005) **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வர பெருமான் திருக்கோயிலில் ஆவணி கடை ஞாயிறுப் பெருவிழா நான்கு நாட்கள் நடைபெற இருக்கிறது.** இதனை முன்னிட்டு உலக நலன் கருதி பல விசேஷ ஹோமங்கள், த்ரிதின ஸ்ரீ ருத்ர த்ரிசதீ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ லக்ஷார்ச்சனை, ஸ்ரீ ருத்ராபிஷேகம், கடை ஞாயிறு தீர்த்தவாரி, திருக்கல்யாண உற்சவம் முதலியன நடைபெறுகின்றன. அத்துடன் தினமும் கோ பூஜை, ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் மற்றும் மஹாபிஷேகமும் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகள் தினம் காலை 7 மணிக்கு துவங்கி இரவு 8 மணி வரை நடைபெறும். ஞாயிறு அன்று திருக்குளத்தில் காலை 7 மணிக்கு தீர்த்தவாரி, மாலை 4 மணிக்கு திருக்கல்யாண உற்சவம். இரவு 8 மணிக்கு ஸ்வாமி, அம்பாள் வீதி உலா. 4 தினங்களும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு இன்னிசை / சொற்பொழிவு நிகழ்ச்சிகள் உண்டு. நான்கு நாட்களிலும் நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் இறையன்பர்கள் அனைவரும் வழக்கம்போல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

*என்றும் இறைபணியில்*

*Dr. V.* ***கிருஷ்ணமூர்த்தி***
*பரம்பரை அறங்காவலர்*

**ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா** (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**

*ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கும்பகோணம், காசிராமன் தெரு, வேதவிநாயகர் கோயிலிலிருந்து வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஞாயிறு (11.09.2005) விடியற்காலை மணி 5.00 - 5.30க்குள் புறப்படுகின்றன. புனித நீராட விரும்புபவர்கள் கீழ்கண்ட முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடை அனுப்ப விரும்பும் அன்பர்களும் கீழ்கண்ட முகவரியாளர்களையே தொடர்பு கொள்ளலாம்.*

## சிறப்பு வழிபாட்டு விவரங்களும் அவற்றுக்கான கட்டணங்களும்:

1) சிறப்பு சூர்ணாபிஷேகம் (மஞ்சள்பொடி) ரூ.100/-
2) ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்ரஹ ஹோமம் முதலியவற்றிற்கு ரூ. 200/-
3) சிறப்பு அபிஷேகம் ரூ. 200/-
4) லட்சார்ச்சனை ரூ.200/-
5) வஸ்த்ரதானம் (ஒரு ரித்விக்கிற்கு) (20) ரூ. 400/-
6) அன்னதானம் (ஒரு வேளை) ரூ.500/-
7) புஷ்ப கைங்கர்யம் (ஒரு வேளை) ரூ:500/-
8) தம்பதி பூஜை (ஒரு தம்பதிக்கு) ரூ. 1000/-
9) ஸ்ரீருத்ர ஜப, ஹோம ஸங்கல்பம் ரூ.1000/-
10) ஸ்வாமி, அம்பாளுக்கு வேஷ்டி(9x5) புடவை (9கஜம்) ரூ.1000/-
11) ஸந்தர்ப்பணை (ஒரு நாள்) ரூ.2500/-
12) திருக்கல்யாண உற்சவம் ரூ.2500/-

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றுக்கான துகையை **"ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா"** என்ற பெயருக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக் காசோலை (D.D) மூலமோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பக் கோருகிறோம்.

**G. குஞ்சிதபாதம், FCA.,** G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு, கும்பகோணம்-612 001 போன்: 0435 2420047, **G. கண்ணன்,** D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை -78. போன்: 044-24836495 **V.L. நாராயண சாஸ்திரிகள்,** 25/1 சுப்பாரெட்டித் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 044-24897125 **R. வைத்தியநாதன்,** மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361 **K.R. முரளி, BBA ACA,** Rama Gowri Financial Services (P) Ltd. D.V. Road, Coimbatore, Cell: 9843265404 **S. கணேசன்,** 10/108, 2nd Main Road, West End, Vijaya Nagar, Velacherry, Chennai - 600 042. Ph: 044-55875431



'இத்தனை வயதாகியும் இந்த மனிதர் இந்தப் போடு போடுகிறாரே!' என்று கலைஞரைப் பார்த்து பலரும் வியப்பதுண்டு. இரண்டு விஷயங்களை நாள்தோறும் அவர் தவறாமல் கடைப்பிடிப்பதுதான் அதற்குக் காரணம் என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். ஒன்று, உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதுவது. மற்றொன்று உடல்நலத்துக்கு யோகா செய்வது.

யோகா கலைஞருக்கு எப்படி அறிமுகமானதாம்? மகள் கனிமொழி, கிருஷ்ணமாச்சார்யா யோக மந்திரத்துக்கு வந்து யோகா கற்க, அதனால் ஏற்பட்ட பலன்களை தந்தையிடம் சொல்லியிருக்கிறார். ஒருநாள் கலைஞரிடமிருந்து யோகா மையத்தை நடத்தி வரும் டி.கே.வி. தேசிகாச்சாருக்கு போன். "எனக்கு யோகா கற்றுத்தர முடியுமா?" என்று கலைஞர் கேட்க, சந்தோஷமாய் தலையாட்டிய தேசிகாச்சார், கலைஞரின் எண்பது வயதை உத்தேசித்து, யோகா அடிப்படையில் சில பிரத்யேக உடற்பயிற்சிகளை வடிவமைத்திருக்கிறார். கூடவே யோகா பயிற்சியாளரான ஸ்ரீதரனை சொல்லிக் கொடுக்கப் பணித்திருக்கிறார்.

"அவரைப் போல ஒரு சின்சியர் மாணவரைப் பார்க்க முடியாது. சொல்லித் தருகிறபோது கவனமுடன் கேட்டுக்கொண்டு, பின் தாமே செய்து காட்டி, 'நான் சரியான முறையில் செய்கிறேனா? தவறு இருந்தால் திருத்துங்கள்' என்று கூறுவார்'' என கலைஞருக்கு சர்ட்டிபிகேட் தருகிறார் ஸ்ரீதரன்.

# கலைஞர் ரெடி!



“அதிகாலையில் எழுந்து விடுவது, காலையில் வாக்கிங் போவது, இவற்றுடன் யோகா பயிற்சி செய்வது என்பது, கலைஞர் உடல் நலத்தின் மீது கொண்டிருக்கும் அக்கறையின் வெளிப்பாடு. தம் உடன்பிறப்புக்களுக்கு எழுதும் கடிதத்தில்கூட, அதிகாலையில் எழுந்திருப்பதும், நடை போவதும் எவ்வளவு நல்லது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். யோகா பற்றிய தமது அனுபவங்களையும், உடன்பிறப்புக்களுடன் அவர் பகிர்ந்து கொண்டது உண்டு. யோகா பயிற்சியை அடுத்து, பிராணயாமம் என்கிற மூச்சுப் பயிற்சியையும் கலைஞருக்குக் கற்றுக் கொடுத்தேன். அதையும் கற்றுக் கொண்டு செய்து வந்த சமயத்தில், தியானம் பற்றியும் எடுத்துச் சொன்னோம்” என்கிறார் ஸ்ரீதரன்.

"பகுத்தறிவுக்கு தியானம் எப்படிச் சரிப்பட்டு வரும்?" என்று நாம் எதிர்க் கேள்வி எழுப்ப, "கலைஞரின் கொள்கை பற்றித் தெரியுமாகையால், அதற்கேற்ப தியானம் சொல்லிக் கொடுத்தோம். ஒருவர், தன் கவனம் முழுவதையும் ஒரே இடத்தில் பதிய வைப்பதுதானே தியானம்? எனவே கலைஞரிடம், 'ஒரு புள்ளியை வைத்துக் கொண்டு, அதைக் கடவுள் என்று நினைத்துக் கொள்ளலாம். இல்லையெனில் உங்களுடைய தாய் அல்லது தந்தை என்று நினைத்துக் கொள்ளலாம். அல்லது வேறு எதையும் நினைத்துக் கொள்ளலாம். அதையே உற்றுக் கவனித்து அங்கே உங்கள் சிந்தனையைச் செலுத்தினீர்கள் என்றால், அதுதான் தியானம்' என்று எடுத்துக் கூறினோம். அதன்படி கலைஞர் இப்போது தினமும் தியானம் செய்து வருகிறார்" என்று விளக்கமளித்தார் ஸ்ரீதரன்.

எது எப்படியோ, கண்ணுக்கெட்டும் தூரத்தில் தேர்தல் கண்ணடித்துக் கொண்டிருக்க, யோகாவின் துணையோடு கலைஞர் களத்தில் இறங்கிக் கலக்க ரெடியாகி விட்டதாகவே தெரிகிறது.

**- எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**








''சர்தார்ஜி நர்ஸைக் காதலிக்கிறாராம்.''

''அப்புறம் ஏன் நர்ஸ் கோபமா இருக்காங்க?''

''ஐ லவ் யூ சிஸ்டர்னு சொல்லிட்டாராம்!''

- ஆர்.தங்கராஜ்





''உடம்பு சரியில்ல. இந்த கண்டத்திலிருந்து எப்படித் தப்பிக்கப் போறேனோ தெரியல!''


''ரொம்ப ஈசி... எந்த ஆஸ்பத்திரிலயும் சேராதே!''

- பம்மல் நாகராஜன்

''உங்க சொத்து விவரத்தைக் கேட்டா, ஏன் உங்க குடும்ப டாக்டரைக் கேட்கச் சொல்றீங்க?''

''மிச்சம் எவ்வளவு இருக்குன்னு அவருக்குத்தானே தெரியும்!''

- கிரிஜா மணாளன்





''என் கண்ல எமன் நிக்கறது தெரியுது டாக்டர்!''

''பேஷண்டை சுயநினைவோட ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு வந்தது யாருய்யா..!''


- அம்பை தேவா

"என் பையன் காய்னை முழுங்கிட்டான்..."

"டாக்டர்கிட்டே கூட்டிட்டு போறது தானே...?"

"வேண்டாம்! டாக்டர் நோட்டை முழுங்கிடுவாரு."

- வி. சாரதி டேச்சு





"சாப்பிட்ட உடனே ஓடவே முடியலை டாக்டர்..."

"சாப்பிட்ட உடனே எதுக்கு ஓடறீங்க?"

"ஓட்டல் முதலாளி துரத்திட்டு வர்றாரே..."

- வி. சாரதி டேச்சு

# சிரி சிரி டாக்டர்!



"டாக்டர்! நான் எது பண்ணாலும் மறந்து போய் ரெண்டாவது தடவை பண்றேன்."

"இப்பத்தானே இந்த வியாதிக்கு மருந்து வாங்கிட்டுப் போனீங்க..."

- வி. சாரதிடேச்சு

# ஆயிரம் பிரசவம் பார்த்த


சிறிது பயத்துடன் தான் காங்கேயத்திற்குள் நுழைந்தோம். ஏன்? காங்கேயம் காளைகளின் கொம்புகள் பளபளவென சீவப்பட்டிருக்குமாம். முனைகள் நல்ல கூர்மையாம். அழகாக வளைந்திருக்குமாம். (இதில் அழகு வேறு!) அதற்குக் கோபம் வந்தால் அவ்வளவுதானாம். மற்றபடி பயப்படுவதற்கு ஒன்றுமில்லையாம். நாம் போகும் நேரமாகப் பார்த்து, ஏதாவது ஒரு காளை 'ஹவ் ஆர் யு?' என்று சீவிவிட்ட கொம்பை முன்னால் வந்து நீட்டினால் என்ன செய்வது? இப்படி நினைத்துக் கொண்டிருந்தபொழுதே ஒரு குரல். 'ஹவ் ஆர் யு?' மிரண்டபடி திரும்பினால், புன்னகை செய்தபடி நின்றிருந்தார் டாக்டர் ஏ.ஆர். சீனிவாசன். சற்று நிம்மதி பிறந்தது. பேசிக்கொண்டே அவர் வீட்டை அடைந்தோம்.

டாக்டர் சீனிவாசன் நாற்பதாண்டுகால காங்கேயவாசி. அது மட்டுமா? "நான் அறுபது வருஷ கல்கி வாசகர், தெரியுமா?" என்றார் தமது முத்துப்பல் மின்ன. "நான் மட்டும் என்னவாம்? ஐம்பது வருஷமா கல்கியைப் படிச்சிட்டு வரேனே" என்றபடி அவரை ஒரு முறை இடித்துவிட்டு, முன்னால் வந்து நின்றார் அவரது மனைவி, சசிரேகா சீனிவாசன்.

"உங்களைப் பத்தி கொஞ்சம் சொல்லுங்களேன்" என்று சொன்னதுதான் தாமதம். இருவரும் ஆளுக்கொரு உலகத்திற்குச் சென்றுவிட்டார்கள். சிரமப்பட்டுத்தான் மறுபடியும் காங்கேயத்திற்குள் அவர்களை இழுத்து வர முடிந்தது. முதலில் அறுபது வருட வாசகர். "சிதம்பரம் பக்கத்தில இருக்கிற பரங்கிப்பேட்டைதான் எங்க கிராமம். அண்ணாமலை யுனிவர்சிட்டில மெடிசன் படிச்சேன். படிக்கும்போதே கல்யாணம் செஞ்சி வச்சுட்டாங்க."

நம் முதுகுக்குப் பின்னால் சசிரேகா இந்நேரம் புன்னகை செய்து கொண்டிருப்பார் என்று நினைத்தபடி திரும்பினால் - அட! நினைத்தபடியே தப்பாமல் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார். "படிச்சு முடிச்சி ஒரு டாக்டரா வரணும்னு எனக்குச் சின்ன வயசுல ரொம்ப ஆசை. ஆனா அது நடக்கலை. அதனால என்ன? ஒரு நல்ல டாக்டர்தான் எனக்குக் கிடைச்சுட்டாரே" என்றார் சசிரேகா.

அது சரி, சசிரேகாவுக்கு கல்கி பிடித்துப் போனதற்கு என்ன காரணம்? அதில் வரும் சங்கீதக் கட்டுரைகள்தான் என்கிறார். இவருக்கு இசை பிடிக்குமா? "என்னது பிடிக்குமாவா?" எம்.எஸ்.ஸின் உறவினரான மதுரை காமு என்பவரிடம் ஒன்பது வருடங்கள் வீணை கற்றிருக்கிறாராம். ஒரு சமயம் இவர் தம் அறையில் அமர்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்த சமயம், அவர் தந்தையைக் காண வந்த அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இவரது வாசிப்பை ரசித்து, ஆச்சரியத்துடன் ஒரு 'ஓ' போட்டுச் சென்றாராம். "வீணை வாசிக்கறதும், கல்கியில



• சீனிவாசன்



• சசிரேகா

# அபூர்வ டாக்டர்!

வர்ற சங்கீதக் கட்டுரைகளை வாசிக்கறதும் எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயங்கள் தெரியுமா?'' என்றார். இது தவிர கல்கியில் வரும் சிறுகதைகளும் இவருக்கு மிகவும் பிடிக்குமாம்.

''எனக்குப் பிடிச்சது குறையொன்றுமில்லை'' என்ற சீனிவாசன், காங்கேயத்தில் லயன்ஸ் கிளப் தொடங்கப்பட்ட பொழுது, அதன் தலைவராக இருந்திருக்கிறார். பெண்களுக்குத் தனியாகப் பள்ளி எதுவும் இல்லை என்பதால், ஒரு குழுவாகச் செயல்பட்டு, கார்மெல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை ஆரம்பித்திருக்கிறார் (இன்று சுமார் இரண்டாயிரம் மாணவிகள் இதில் படித்து வருகிறார்கள்).

அப்ப மருத்துவம்? அதுதான் முழு நேர ஜாப். இவர் மருத்துவராக இருந்த பொழுது, காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு நேரம் காலம் பார்க்காமல், முகம் சுளிக்காமல் வைத்தியம் செய்திருக்கிறார். இவர் இருக்கும் சமயங்களில் மருத்துவமனை எப்பொழுதும் நிறைந்திருக்குமாம். ஒருவர் விடாமல் எல்லோரையும் பார்த்து முடித்த பிறகே வீட்டுக்குச் செல்வாராம். இதுவரை ஆயிரம் பிரசவங்களுக்கு மேல் பார்த்திருக்கிறாராம் இந்த அபூர்வ டாக்டர்.

பேச்சு சுவாரஸ்யத்தில் காங்கேயம் கொம்புகளை மறந்திருந்த சமயம், திடீரென்று ஒரு சத்தம்! இன்றோடு தீர்ந்தோம் என்று கலவரத்துடன் முகத்தைத் திருப்பினால், பரதநாட்டிய அபிநயத்துடன் நம் முன்னால் தோன்றினார் ரேணுகா. சீனிவாசன்-சசிரேகாவின் மகள். இவரும் தீவிர கல்கி வாசகர். இவருக்கு கல்கியில் பிடித்த பகுதி எது? 'பாலி கிளினிக்'. சரிதான். டாக்டரின் டாட்டருக்கு ஏற்ற பகுதிதான்.

**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# "பால் வாங்கக்கூட காசில்லை!"

## –தொழிற்கல்வி ஆசிரியர்கள் கண்ணீர்

• மஞ்சுளா



படிப்பை முடித்து வெளிவருகிற அனைவருக்கும், அரசே பணி வழங்க இயலாது. அதுவும் ஏழை, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகள்... குடும்பச் சூழ்நிலை காரணமாக மேல்நிலைப் பள்ளியோடு படிப்பை நிறுத்தக் கூடியவர்களின் எதிர்காலம் பெரிய கேள்விக் குறியாகி விடுகிறது. இவர்களின் எதிர்காலத்தை உத்தேசித்து, கைத்தொழில் மூலம் சொந்தக்காலில் நிற்கக்கூடிய கல்வித்திட்டம் ஒன்றை, மத்திய அரசு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கியது.


மேல்நிலைக் கல்வி (பன்னிரண்டாம் வகுப்பு வரை) ஆரம்பிக்கிற ஒவ்வொரு பள்ளியிலும் ஏதாவதொரு தொழிற்கல்வி வகுப்பு கட்டாயம் நடத்தப்படவேண்டும் என்கிற கொள்கை முடிவை மத்திய அரசு கொண்டு வந்தது. மாநில அரசுகளுக்கு இதற்கான மானியத்தையும் வழங்கி வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்பான எதிர்காலம் காத்திருக்க, பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் வாழ்வோ இருளடைந்து கிடக்கிறது.


அரசு, தொழிற்கல்வி ஆசிரியர்கள் நியமனத்தில் அக்கறை செலுத்தாததே இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் தொழிற்கல்வி ஆசிரியர்கள், அரசால் இதுவரை பணி நிரந்தரம் செய்யப்படாமலிருக்கின்றனர். தமிழகம் முழுவதும் உள்ள ஏராளமான பள்ளிகளில், தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு, அந்தந்தப் பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் கழகம் மூலம் வெறும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் மட்டுமே சம்பளமாக வழங்கப்படுகிறது!

இப்பிரச்னை தொடர்பாக நம்மிடம் பேசிய தமிழக மேல்நிலைப் பள்ளித் தொழிற்கல்வி ஆசிரியர் கழகத் தலைவர் ராஜமாணிக்கம், "ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களை மூப்பு அடிப்

படையில் பணி நியமனம் செய்து வரும் அரசு, தொழிற் கல்வி ஆசிரியர்கள் என்றால் மௌனமாகி விடுகிறது. எப்படியும் அரசு நம்மைக் கைவிடாது என்ற நம்பிக்கை



• ராம்மோகன்


• ராஜமாணிக்கம்

**இது குறித்து தமிழகக் கல்வி அமைச்சர் சி.வி. சண்முகத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,**

**"தொழிற்கல்வியை மேம்படுத்துவதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. பாடத்திட்டங்கள் கூட புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவிருக்கின்றன. ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன" என்றார்.**

• சி.வி. சண்முகம்



யில், நாற்பது வயதைக் கடந்த நிலையிலும் பலர் குறைந்த ஊதியத்தில் சிரம வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இதில் பெண் ஆசிரியைகள்தான் ஏராளம். கடந்த வாரத்தில் முதல்வர் 11,788 ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப உத்தரவிட்டுள்ளார். ஆனால், அதில் ஒரு இடம் கூட தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு இல்லை என்பதுதான் வேதனை" என்றார்.

"குறைந்த ஊதியத்தில் குடும்பம் நடத்துவது, அன்றாடம் பெரிய மனப்போராட்டமாக உள்ளது. மாதத்தில் பல நாட்கள் குழந்தைகளுக்குப் பால் வாங்கக்கூட காசில்லாமல் போராட வேண்டியிருக்கு" என்று வருத்தத்துடன் கூறினார், தொழிற்கல்வி ஆசிரியர் பார்த்தசாரதி.

மற்றொரு ஆசிரியரான செ.ராம்மோகன் நம்மிடம் பேசும்போது, "நான் திருமணமானவன். குழந்தை இருக்கு. வயசான அம்மா அப்பாவுக்கு, பெற்ற பிள்ளை உதவி செய்ய வேண்டும். வறுமையினால், எங்கப்பா அவரது பென்ஷனில் இருந்து என் குடும்பத்துக்கு செலவு செய்யறார். அரசாங்கம்தான் மனசு வச்சு, எங்களைக் காப்பாத்தணும்" என்றார்.

"ஏழு வருஷமா இந்த வேலையில் இருக்கேன். என் கணவருக்கும் இதே வேலைதான். எனக்கு உடன்பிறந்த சகோதரர்கள் கிடையாது. தங்கை மட்டும்தான். எங்கம்மா கடந்த மூணு வருஷமா பக்கவாதத்துல படுத்திருக்காங்க. நான் டீச்சர் வேலையில இருக்கேன்னுதான் பேரு. என்னால அவங்களுக்கு ஒரு ரூபாய் கூட உதவ முடியல. என் தங்கைதான் அம்மாவைப் பாத்துக்கிறா. நினைச்சா அழுகையா வருதுங்க" - இது ஆசிரியை மஞ்சுளாவின் விசும்பல்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழிற்கல்வி முக்கியம் என்று தாம் செல்லும் பள்ளிகள் தோறும் பேசுகிறார் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். ஆனால் நிஜத்தில்?

**- யாணன்**

படங்கள்: ராஜன்



# பாதி ஏஞ்சல் மீதி ரெ

மீண்டும் மீரா ஜாஸ்மின். கைவசம் கஸ்தூரிமான், சண்டைக்கோழி என இரண்டு படங்கள். இரண்டுமே பெரிய இயக்குனர்களின் (லோகிதாதாஸ், லிங்கு சாமி) படங்கள். "இடைவெளி என்னை எதுவும் செய்துவிட முடியாது. திறமை இருந்தால் தேடி வருவார்கள்" அதே துடுக்குத்தனத்துடன் பேசும் மீரா ஜாஸ்மினிடம், "இயக்குனர் லோகிதாதாஸ் படத்தில் நடிப்பதற்காகத்தானே வேறு தமிழ்ப் படங்களை ஒப்புக் கொள்ளாமல் இருந்தீர்கள்?" என்று செல்லமாகச் சீண்டினோம். துணிச்சலாகவே பதில் வருகிறது.

"கரெக்டா சொன்னீங்க! எங்க டைரக்டர் படத்துல நடிக்கிறதுக்கு எந்த வாய்ப்பையும் உதறித் தள்ளலாம். அவர் அவ்ளோ பெரிய கலைஞர். என்னை மட்டுமில்ல, நிறைய புதுப்புது ஆட்களை மலையாள சினிமாவுக்குக் கொடுத்திருக்கார். அவர் என்னை உருவாக்கலேன்னா, எனக்கு ஏது நேஷனல் அவார்டு!" என்றவரிடம் "உங்க இயக்குனரின் ப்ளஸ் பாயின்ட்ஸ் சொல்ல முடியுமா?" என்றோம்.

"ஓ... ஷ்யூர்!" என்று ஆர்வமானார். "ஹ்யூமன் ரிலேஷன்ஷிப், அதுல இருக்கிற புனிதமான எமோஷன்ஸ்... இதைத் தன்னோட கேரக்டர்ஸ் மூலமா அற்புதமா வெளிக்கொண்டு வர்றதுல... அவரை அடிச்சுக்க ஆள் இல்லேன்னு நினைக்கிறேன். அவரோட ஒவ்வொரு படமும் லைஃபை பார்க்கிற மாதிரிதான் இருக்கும். இப்போ தமிழுக்கு வந்துட்டாருல்ல... இங்கே பாருங்க நிச்சயம் ஒரு டிரண்ட் செட்டரா இருப்பார்" என்று அடித்துச் சொன்ன மீரா ஜாஸ்மின், 'கஸ்தூரிமான்' படத்தில் உமா சங்கரி என்ற தமது கேரக்டர் பற்றிச் சொன்னார்.

"காதலி என்பவள், காதலை மகிழ்விக்கிறவள் மட்டுமில்ல, காதலனோட துயரங்கள்ல துணையா நின்னு, அவன் வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கறவ. உமாசங்கரி காதலையும் தியாகத்தையும் பிரிக்கப் பார்க்கத் தெரியாதவள். தமிழ் சினிமா மறக்க முடியாத கேரக்டரா உமா சங்கரி இருக்கப்போறா" என்ற மீரா, "இந்த கேரக்டருக்கு அப்படியே

ஆப்போசிட்டா, சண்டைக்கோழி படத்துல ராஜுங்கிற கேரக்டர்ல நடிக்கிறேன். செம வாலு. பாதி ஏஞ்சல் மீதி ரவுடின்னு வெச்சுக்கோங்க. எங்க வீட்டுல சாமிக்குன்னு உண்டியல் வெச்சுருப்பாங்க. அதை உடைச்சு காசையெல்லாம் எடுத்துடுவேன். எங்கப்பா ஓடி வந்து கோபத்தோட் அடிக்க வருவார். தப்பிக்க என்ன பண்ணுவேன் தெரியுமா? 'டேய்! ராமானுஜம்! நான் கங்கம்மா வந்திருக்கேன்டா! என் காசை எடுக்க யாருகிட்டடா கேட்கணும். பெல்டைக் கீழே போடுடா'ன்னு எங்க வீட்டுக் குலதெய்வம் என் மேலே வந்துட்ட மாதிரி நடிப்பேன். என் தம்பி ஓடி வந்து நம்பாமல் பார்ப்பான். "டேய் சந்தேகப் பார்வையோடு பார்க்கிறான் பார்!'' என்று பல்லைக் கடிப்பேன். குடும்பமே காலில் விழும்...'' என்று சந்திரமுகி ஜோதிகா மாதிரி லகலக வெனச் சிரிக்க... நாம் சீரியஸாக இருந்தோம். சிரிக்கவில்லை என்று தெரிந்ததும் தனது சிரிப்பை நிறுத்திவிட்டு கங்கம்மா மாதிரி மீரா முறைக்க.. வேறு வழி.... ஹா... ஹா... ஹா...!

- ஸ்ரீசக்கரத்தாழ்வார்

படங்கள் உதவி : மௌனம் ரவி





# அனுமதி!

## இலவை ஜோகா

தாத்தா ஓரேயடியாக மறுத்துப் பேசியதால் திவ்யாவுக்கும், ரேணுகாவுக்கும் துக்கம் தாங்க முடியவில்லை. திவ்யாவைப் போல் ரேணுகா சட்டென்று அடங்கிப் போகிறவள் இல்லையென்பதால், விடாப்பிடியாய் கேட்டு நச்சரித்தாள்.

"தாத்தா... ப்ளீஸ் தாத்தா... விஜய் பட ஷூட்டிங் நடக்குது தாத்தா... விஜய்னா எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். கொஞ்ச நேரம் பாத்துட்டு வந்துடலாம். ப்ளீஸ் தாத்தா."

ரேணுகாவின் கெஞ்சலுக்குக் கொஞ்சம் கூட அசரவில்லை. மாறாக முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு சீறினார்.

"அப்படியெல்லாம் போகக் கூடாது. உங்க அம்மாகிட்டயாவது சமாளிச்சிடலாம், உங்கப்பன்ட்ட பேச முடியாது. எங்கிட்ட சண்டைக்கு வருவான், பேசாம இருங்க."

கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார். சோர்ந்து போன இருவரும் டீவி முன் சோகமாய் அமர்ந்து கொண்டார்கள். வேண்டாவெறுப்பாய் திவ்யா ரிமோட்டைத் தட்ட, அங்கே விஜய்யும் த்ரிஷாவும் குத்தாட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். வெறுப்பான ரேணுகா, ரிமோட்டைப் பிடுங்கி டீவியை அணைத்தாள். அதே சமயம் தோழிகளோடு உள்ளே வந்த நிலா,

"என்னடி, நீங்க வரலியா?" என்றாள்.

"எங்க தாத்தா விடமாட்டேன்னு சொல்றாங்கடி." - திவ்யா நடந்ததையெல்லாம் சொன்னாள்.

"நான் தாத்தாகிட்ட பேசறேண்டி" சொன்ன நிலா பதிலை எதிர்பாராமல் தாத்தாவின் அறைக்குள் நுழைந்தாள். மறுநிமிடமே வெளியே வந்தவள் முகத்தில் புன்னகை இருந்தது.

"சீக்கிரம் கிளம்பி வாங்கடி... உங்க தாத்தாவும் புறப்படறார்."


நிலா சொல்ல, நம்ப முடியாமல் பார்த்தாள் திவ்யா.

"நிஜமாவா சொல்றே?" சந்தேகமாய் கேட்டாள் ரேணுகா.

"நிஜம்தாண்டி... சொல்ல வேண்டியதைச் சொல்லியிருந்தா இந்தப் பிரச்னையே யில்ல.."

"என்னடி சொல்றே?"

"வேற ஒண்ணுமில்லடி... அந்தக்கால கே.ஆர்.விஜயா, பானுமதியெல்லாம் வர்றாங்கன்னு சொன்னேன். தாத்தா நானும் வர்றேன்னு தடபுடலா புறப்படறார்." ○





# திவ்யாக்குட்டியும் குருவித் தங்கச்சியும்

- பரிசுக் கதை

# ஓடாமலே கால்பந்து!

- சுவாரசியமான விளையாட்டு







# எழில் கொஞ்சும் இலங்கை!

- போவோமா புது உலகம்!

# 1000/- ரூபாய் பரிசுப் போட்டி



# ராகுல் திராவிட்

- போஸ்டர்


குழந்தைகளின் குதூகலம்!

# கோகுலம்


47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-600 032

செப்டெம்பர் 2005

ரூ.6/- மட்டுமே




பரபரப்பு குறைந்து விட்ட நள்ளிரவுச் சென்னை. சீரியல் விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஒரு திருமண மண்டபம். அதை நோக்கி மூன்று இளைஞர்கள் நடக்





கிறார்கள். ஒருவர் கௌதம். இவருக்குக் காதலே பிடிக்காது. பெண்ணுக்காக உருகுவதும், சண்டை போடுவதும் ஒரு ஆணுக்கு அழகல்ல என நினைக்கும் கெத்தான இளைஞன். தனது பைக்கில் எந்தப் பெண்ணும் லிஃப்ட் கேட்டுவிடக் கூடாது என்பதற்காக பின்சீட்டையே எடுத்துவிட்ட, மாடர்ன் துறவி. இரண்டாவது ஆள் கண்ணன். 'முகமூடி' என்ற ஹாலிவுட் படத்தில் கேர்ள் ஃப்ரெண்டைப் பார்த்த அடுத்த கணம், தமது நாவை ஐந்தடி நீளத்துக்கு 3D கிராபிக்ஸ் உதவியோடு தொங்கவிட்டு ஜொள் வடிக்கும் நடிகர் ஜிம்கேரியைப் போல பெண்களுக்காக ஏங்கும் பிறவி. மூன்றாவது ஆள் சுதாகர். இவர், கண்ணனின் அலுவலகத்தில் வேலை செய்யும் சக ஊழியர். இவரது காதலிக்கு வேறொருவனோடு திருமணம். அந்த மண்டபத்தை நோக்கித்தான் நடக்கிறார்கள்!

இப்போது மண்டபம் வந்துவிட்டது. கண்ணன் வாசலிலேயே நின்றுகொள்ள, கௌதமும் சுதாகரும் உள்ளே போகிறார்கள். எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்க, சுதாகர் தயங்கி நிற்கிறார். கௌதம் மட்டும் மணமகள் அறைக்குள் நுழைகிறார். அங்கே கல்யாணப் பெண்ணும், அவரது பாட்டியும் மட்டும் இருக்கிறார்கள். கௌதமைப் பார்க்கும் பாட்டி, "மாப்பிள்ளை ரூம் அந்தப் பக்கம் இருக்குப்பா" என்கிறார். கௌதமோ மணப்பெண்ணைப் பார்த்து "சுதாகர் வந்திருக்கார்" என்றதும், முகத்தில் பளிச்சென்று வெளிச்சம் பரவுகிறது. குரலெடுத்துக் கத்த முயற்சிக்கும் பாட்டியை கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டு, பெண்ணை அழைத்துக் கொண்டு மைய மண்டபத்துக்கு வருகிறார். சுதாகர் அவர்களோடு வந்து சேர்ந்து கொள்கிறார். அங்கே சமையல்காரரிடம் "காலையில் அஞ்சரை மணிக்கெல்லாம் சம்பந்தி வீட்டுக்காரங்க வந்துடுவாங்க. காபி, டிபன் ரெடியா இருக்கணும்" என்று உத்தரவு

# ஜீன்ஸ்

போட்டுக் கொண்டிருக்கிறார் ஐம்பதைக் கடந்த ஒருவர். அவரை நெருங்கி "நீங்கதான் பெண்ணோட அப்பாவா?" என்கிறார் கௌதம். அந்த நேரத்தில் தனக்கு அறிமுகமில்லாத இரண்டு ஆண்களோடு மகள் நிற்பதைப் பார்த்து, ஆச்சர்யத்தோடு "ஆமா" என்கிறார். உரையாடல் தொடங்குகிறது.

கௌதம்: உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்!

அப்பா: ................?!

கௌதம்: புரியலையா? உங்க பொண்ணு லவ் பண்றா! பேரு சுதாகர். சேல்ஸ் எக்ஸிக்யூட்டிவ். (தூரத்தில் நிற்கும் சுதாகரைப் பார்த்து) "ஆளு நல்லா இருக்காருல்ல! அட! பக்கத்துல வாங்க சார்!" ரொம்பத்தான் வெட்கப் படுறார்! (சுதாகரும், மணப்பெண்ணும் 'என்ன இவன்!' என்பதுபோல் ஆச்சர்யமாக கௌதமைப் பார்க்கிறார்கள். அப்பாவின் முகத்திலோ அதிர்ச்சியும், கோபமும் கொப்பளிக்கிறது)

கௌதம்: போறதுதான் போறோம். பெத்தவங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போலாமேன்னு வந்திருக்கோம்.

அப்பா: இங்கேயிருந்து ஒரு அடி எடுத்து வெச்சுடுவீங்களா? (கொதித்தெழும் கௌதம்... மணப்பெண்ணின் அப்பாவை ஒரு தூணுக்குத் தள்ளிப் போய், கழுத்தில் கை வைத்து அழுத்துகிறார்)

கௌதம்: பெரிய மனுஷனாச்சேன்னு பார்க்கிறேன்... இல்லேன்னா சங்கை அறுத்துடுவேன்... (அப்பா பயந்து ஒடுங்க.. கௌதம் பின் வாங்கி...) மணப்பெண்ணையும், சுதாகரையும் பார்த்து...

"ம்... போலாம்..."என்கிறார்

அப்பா: தம்பி! நில்லுங்க தம்பி!

கௌதம்: யோவ்! எது பேசறதா இருந்தாலும் அவங்ககிட்ட பேசிக்க!

அப்பா: (மகளைப் பார்த்து) அடிப்பாவி! எல்லாத்தையும் பண்ணிட்டு இப்ப ஒண்ணுமே தெரியாதது மாதிரி நிக்குறியே! (திடீரென்று சுதாகர் பக்கம் திரும்பி) இந்தா பாருப்பா! உன்னை யாருன்னே எனக்குத் தெரியாது. இப்போ நீ அவளைக் கூட்டிக்கிட்டு நிம்மதியா போயிடுவே! நாங்கள்லாம் என்ன பண்றது? எதையாவது தின்னுட்டு சாகுறதா?

சுதாகர்: அதெல்லாம் தெரியாது. எனக்கு லட்சுமி வேணும். நான் அவளை சின்சியரா லவ் பண்றேன்.

அப்பா: யோவ்! என்ன மனுஷன்யா நீ! லவ் பண்றேன்னு சொல்றியே! அந்தக் கருமத்தை முன்னாடியே சொல்லித் தொலைச்சிருக்கக் கூடாதா? அப்பல்லாம் சும்மா இருந்துட்டு... இப்போ வந்துட்டே! நாங்க ஊரெல்லாம் கடன் வாங்கி, கல்யாணம் ஏற்பாடு பண்ணுவோம். நீங்க தொக்குனாப்புலே நாலஞ்சு பேர் வந்து பொண்ணைத் தூக்கிக்கிட்டு ஓடிடுவீங்க! பெத்தவங்க நாங்க அவமானப்பட்டு நிக்கணுமா? (திடீரென்று சுதாகர் காலில் விழுகிறார்) அப்பா – அம்மாவைத் தவிர நான் யார் காலிலேயும் விழுந்ததில்லே! அய்யா! உங்க காலைப் பிடிச்சு கேட்டுக்



# போட்ட சகுனி!

கிறேன்யா... எம்பொண்ணை விட்டுடுங் கய்யா... (கெஞ்சுகிறார்)

சுதாகர்: லட்சுமி, நீ எங்கூட வர்றியா இல்லையா? (அதட்டிய காதலனோடு காதலி கிளம்ப)

அப்பா: (இப்போது மகளிடம்) அம்மா... அம்மா... போயிடாதேம்மா... (மகளிடம் கெஞ்சுகிறார். ஆனால் அவர்கள் கிளம்பி, இரண்டு அடி எடுத்து வைக்கும் போது ஒரு குரல்!)

கௌதம்: ஒரு நிமிஷம்! (போனவர்கள் நின்று, ஆச்சர்யமாகப் பார்க்கிறார்கள்.)

ஒரு பெரிய மனுஷன் கால்ல விழுந்து கெஞ்சறாரு, உனக்குக் கொஞ்சம் கூட இரக்கம் வரலையா? இப்படியொரு குடும்பத்துலேர்ந்து அவங்க பெண்ணை மட்டும் உருவிக்கிட்டு போறியே தப்பில்லே?

(அடுத்து காதலியைப் பார்க்கிறார்) நான் யாருன்னே உனக்குத் தெரியாது. உன் அப்பாவை அடிக்கப் போனேன். உனக்குத் தடுக்கணும்னு தோணலை? இருபது வருஷம் வளர்த்து ஆளாக்குன மனுஷன்... ரெண்டு வருஷமா உன் கிட்ட பழகின ஆள்கிட்ட கெஞ்சிக்கிட்டு இருக்கார்... நீ பார்த்துக்கிட்டு இருக்கே! யாரப் பத்தியும் கவலை இல்ல உனக்கு! உனக்கு உன் காதல் தான் பெரிசு!

காதலிச்சாப் போதுமா? அன்பு, பாசம், பொறுமை, விட்டுக் கொடுக்கிறது இதெல்லாம்தான் காதலுக்கு அஸ்திவாரம்... இதுலே எதுவுமே உங்கிட்ட இல்ல! நீங்கள்லாம் என்ன லவ் பண்ணி, கல்யாணத்தப் பண்ணி கிழிக்கப் போறீங்க... அப்படியே கல்யாணம் பண்ணி நாளைக்கு ஒண்ணு பெத்துப் போடுவீங்கள்லே! அந்தப் புள்ளையாலே, நாளைக்கு இதே நிலைமைதான் உங்களுக்கும். காதலுக்காக பெத்தவங்களைத் தூக்கி எறிஞ்சுட்டுப் போறீங்களே, ஒரே ஒரு தடவை பெத்தவங்களுக்காக உங்க காதலைத் தூக்கி எறிஞ்சுதான் பாருங்களேன். அவரை வேதனைப்பட வெச்சுட்டு நீ மட்டும் சந்தோஷமா வாழ முடியும்னு நினைக்கிறே..? (திடீரென்று மணப்பெண் ஓடிப்போய் அப்பாவின் தோளில் சாய்ந்து கொண்டு கதறி அழுகிறாள்.)

மணப்பெண்: அப்பா என்னை மன்னிச்சுடுங்கப்பா... உங்களை விட்டு நான் எங்கயும் போக மாட்டேன்பா! (அப்பா மகளை அணைத்துக் கொண்டே கௌதமைக் கையெடுத்துக் கும்பிடுகிறார். காதலன் சுதாகரோ... மிரண்டு போய் கௌதமை விளங்காமல் பார்க்க...)

கௌதம்: அட விடுங்க சார்! உலகத்துல இவ ஒருத்திதான் பொண்ணா... உங்க அழகுக்கு ஆயிரம் பேர்..! இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான் சார். அப்பங்காரன் அழுத உடனே ஓடிப் போயிட்டா பார்த்தீங்களா? (பேசிக் கொண்டே மண்டபத்தை விட்டு சுதாகரை வெளியே அழைத்து வருகிறார். வெளியே காத்திருந்த கண்ணன் இவர்கள் தனியாக வருவதைப் பார்த்து...)



* அந்தக் காட்சியில் கௌதமாக நான்...

கண்ணன்: டேய் என்ன ஆச்சு?

சுதாகர்: என்ன ஆச்சா? நாசமாப் போச்சு! நானே தனியாப் போயி, அந்தப் பொண்ணோட அப்பன் கால்லே விழுந்திருந்தாக் கூட எனக்குக் கட்டி வெச்சிருப்பார்... நீ ஒரு நண்பன்னு உங்கிட்டே வந்தேன்... இவன உன் நண்பன்னு அனுப்பி வெச்ச... என்ன பண்ணினான்

தெரியுமா? என் கையைப் பிடிச்சுக்கிட்டு கூட வந்தவளை... அபேஸ் பண்ணி, அப்பங்கூட அனுப்பி வெச்சுட்டான்டா! இவன் சாதாரண ஆள் இல்லே, ஜீன்ஸ் போட்ட சகுனி... (கௌதமைப் பார்த்து) டேய்... நான் வயிறெரிஞ்சு சொல்றேன்... நீயும் என்னை மாதிரி ஒரு நாள் வேதனைப்படுவேடா... (சொல்லிவிட்டு கௌதமை நோக்கி மண்ணை வாரித் தூற்றுகிறார்.)

திரையரங்குகளில் பின்டிராப் சைலன்சோடு ரசிக்கப்பட்ட இந்தக் காட்சி, நான் நடித்த 'மௌனம் பேசியதே'



... சுதாகராக செந்தில்!

படத்தில் வருகிறது. இதற்கு முன் இப்படியொரு காட்சியை தமிழ் ரசிகர்கள் பார்த்திருக்கவில்லை. கௌதமாக நான் நடித்தேன். காதலன் சுதாகராக என் நண்பன் செந்தில் நடித்தான். என்னுடன் செந்திலை அடிக்கடி பார்த்த இயக்குனர் அமீர், எதிர்பாராமல் செட்டுக்கு வந்த செந்திலை நடிக்க வைத்துவிட்டார். முழுக்காட்சியை விளக்கியதும் கொதித்துப் போனான் செந்தில். "சார்... நீங்க புதுமையான டைரக்டர்னு ஒத்துக்கறேன்... ஆனால் நான் என் ஃப்ரெண்ட் மேலே மண்ணை வாரித் தூத்த முடியாது. வேற யாரையாவது நடிக்க வைங்க! சாரி" என்று கட்-அண்ட் ரைட்டாக மறுத்துவிட்டான். 'இது சினிமாடா' என்று நான் வற்புறுத்தியபோது... "டேய்... அடங்குடா!" என்று போட்டானே ஒரு அதட்டல்! அதில் நட்பைப் பாதுகாக்கும் தீவிரம். ஒரு வழியாக வெவ்வேறு கோணங்களில் மண் வாரித் தூற்றும் ஷாட்டை எடுத்து முடித்தோம்.

செந்திலும் சரி, ராஜாவும் சரி, நட்பை பொத்திப் பொத்திப் பாதுகாப்பவர்கள். எனது முதல் ரசிகர்கள் மட்டுமல்ல, விமர்சகர்களும் இவர்கள் தான். நடிப்புத் திறனை வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கும் எனது பாத்திரங்களை செந்தில் ரசிப்பான். "டேய்! இன்னைக்கு நீ கமர்ஷியல் வேல்யூ உள்ள பெரிய ஹீரோ! ஆனால் இமேஜ் பற்றி கவலைப்படாமல்... உன்னை நீயே அசிங்கப்படுத்திக்கிட்டு, பேரழகன்லேயும், மாயாவிலேயும் நடிச்சிருக்கே! அந்த துணிச்சலை நினைச்சு பெருமைப்படுறேன்டா!" என்று பாராட்டுவான். ராஜாவுக்கு கலாட்டா, சாங்ஸ், ஜோக்ஸ் என்டர்டெயினர்தான் பிடிக்கும். எனது படங்களை நார் நாராகக் கிழிக்கும் அவர்களது நண்பர்களிடம் எனக்காகச் சண்டை போடுவார்கள். என்னை நானே முகம் பார்த்துக் கொள்ளும் கண்ணாடி என் நண்பர்கள்... ஆனால் கல்லூரியில் சேர்ந்தபோது ராஜா, செந்தில் இரண்டு பேரையுமே பிரிய வேண்டி வந்தது. முதல் நாளே ராகிங். முன்பின் பார்த்திராத பத்து சீனியர் மாணவர்கள்... கல்லூரியில் கார் பார்க்கில் வழிமறித்து நிறுத்தினார்கள்... "ஹலோ ஃப்ரெண்ட்... உங்க பேரென்ன...?"

"சரவணன்" என்றேன்.

'அடடே முதல்நாளே இவ்வளவு மரியாதையா?' ஆச்சரியம் அடங்குவதற்குள், "சரவணன்னு பேர் இருந்தா ஆளையே கடத்திடுவோம்" என்று சொல்லிக்கொண்டே... என்னை குண்டுக்கட்டாகத் தூக்கி அவர்கள் காரில் போட்டுக் கதவை மூடினார்கள்... கண்ணாடியை ஏற்றிவிட்டார்கள். உள்ளே என்னைப் போலவே பயந்து நடுங்கியபடி இரண்டு முதல் நாள் ஜூனியர்ஸ். கார் அண்ணா சாலையில் பறந்தது...

(டைரியைத் தொடர்வேன்)

# ரத்தம் விரல்கள் 3

ஊர்மொழி

அவளது எல்லா வலிகளுக்கும்
இதமாய்த் தடவி நீவத் தைலங்கள்
வைத்திருந்தான்
அம்மாவின் சொல்லடிகளுக்கு
அவனிடம்தான் புகலிடம் தேடினாள்
முதன்முறை திரை அரங்கிற்கு
அழைத்துச் சென்றது அவன்தான்.
மறைந்த நாகரிகங்கள் பற்றி
புத்தகங்கள் பற்றி
இசையைப் பற்றி சொல்லித் தந்தவன்
அவன்தான்.
ஜன்னலின் வழியே
சாரலை வேடிக்கை பார்த்துக்
கொண்டிருந்தவளின்
கதவுகளைத் திறந்துவிட்டவன்
அவன்தான்.

பருவம் தொடும்முன் அவளது
வாழ்க்கையை வியாபித்திருந்தவன்
மெல்லக் கரைந்து போனான்

காய்தலின் புகை நெடி அறியாது
வளைய வந்த
தாயை வெறுத்தாள்
கனத்து அசைந்து கடந்தது காலம்.
சமூகத் தடங்களில்
நடக்கத் துவங்கினாள்
பூக்கள் மொட்டவிழ்ந்தன.


காதலின் முதல் ஸ்பரிசத்தில்
தன் பாதை எங்கும்
பயத்தை இறைத்தபடி
ஊர்ந்த அந்த விரல்களை மீண்டும்
உணர்ந்தாள்.
நடுங்கிய உடலில்
கழுத்தோரம் முகம் புதைக்கும்
கணவனின் வெப்பக் காற்றில்
கலந்திருந்தது படபடக்கும் அவனது
சுவாசம்.

பிறந்தது பெண் என்றறிந்தபோது
உற்றமும் சுற்றமும் விக்கித்து நிற்க
வெடித்து அழுதாள்.
அன்றுதான் அவளை மெல்லச்
சூழ்ந்தன
அவனது விரல்கள்.
குழைந்து தயங்கிய விரல்கள்
தடமும் நோக்கமும் புரியாத
காமமும் கழிவிரக்கமும்
அருவருப்பும் விதைத்த விரல்கள்.

அவளைச் சுற்றி சுவர் எழுப்பி
தினமும் போராடுகிறாள்.
குழகுழத்த அந்த விரல்களின்
பாசி தன் மகள் மீது
படியாதிருக்க

அவ்விரல்களை ஒவ்வொன்றாய்
அறுத்து வீசுகிறாள்
தன்னுள் எரியும்
பசியடங்கா தீயை
தணித்துவிட வேண்டி...

ஓவியம்: மருது



# வெற்றிலை தாசரும்




ரயில்வே ஸ்டேஷன் சுவர்கள், தூண்கள் இவற்றைப் பார்க்கும்போதெல்லாம், நம் இனத்தாருடைய தாராள குணம் எனக்கு ஞாபகம் வருவதுண்டு. 'அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு கொடாத பாவிகள்' நமக்குள் இல்லவே இல்லை என்று சொல்லலாம்.

காலணாவுக்கு வெற்றிலையும் பாக்கும் வாங்குகிறோம். எல்லா வெற்றிலையும் போட்டுக் கொண்டாகி விட்டது. விரலில் சுண்ணாம்பு பாக்கியிருக்கிறது. அதை என்ன செய்கிறோம்? காசு கொடுத்து வாங்கிய தாயிற்றே என்று வாயில் போட்டு விழுங்கி விடுகிறோமா? ஒரு நாளுமில்லை. அவ்வளவு தரித்திர புத்தி நம்மிடம் கிடையவே கிடையாது. விரலில் உள்ள சுண்ணாம்பை அப்படியே சுவரில் தீற்றுகிறோம்; அல்லது தூணில் துடைக்கிறோம்.

இவ்வாறு ரயில்வே ஸ்டேஷன், ஸப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், தாலூகாக் கச்சேரி முதலிய பொது ஸ்தலங்களில், கைக்கெட்டுகிற தூரம் வரையில் உள்ள இடங்களில் கொஞ்சங் கூடப் பாக்கியில்லாமல் சுண்ணாம்பு தீற்றப்பட்டு விடுகிறது. அதற்குப் பிறகு வெற்றிலை போடுகிறவர்கள் என்ன செய்வார்கள்? அப்புறமாவது சுண்ணாம்புக் கையை அலம்பி விடுவார்களென்றோ, காகிதத்தில் துடைத்துக் குப்பைக் கூடையில் போடுவார்கள் என்றோ நினைக்கிறீர்களா? ஒருநாளுமில்லை. தீற்றின இடத்திலேயே மேலும் மேலும் தீற்றுவார்கள். இவ்வாறு இன்னும் கொஞ்ச நாளைக் கெல்லாம் தூண்களிலும் சுவர்களிலும், சில இடங்களில் சுண்ணாம்பு பத்தை பத்தையாகச் சேர்ந்திருக்கும்.

இனிமேல்தான் ஸ்வாரஸ்யம். ஒரு நாள் ஸ்ரீமான் வெற்றிலை தாசர் சாப்பிட்டு விட்டு அவசரமாய் வெற்றிலைப் பாக்கைக் கையில் எடுத்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறார். அங்கே போனதும் பாக்கை வாயில் போட்டுக்கொண்டு பார்த்தால், சுண்ணாம்பு எடுத்துவரவில்லையென்பது ஞாபகம் வருகிறது. அதனால் பாதகம் இல்லை. ஸ்டேஷன் தூண்களில் சுண்ணாம்பு தீற்றித் தீற்றிச் சில இடங்களில் கட்டிதட்டிப் போயிருக்கிறதல்லவா? அங்கே போய் விரல் நகத்தால் கொஞ்சம் சுரண்டி எடுத்துக் கொண்டால் போகிறது! தூணுக்கு அதனால் கஷ்டம் கொஞ்சங்கூட இல்லையன்றோ?

முன்னே, மகாத்மாஜி நமது தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது, ஆற்றங்கரைகளில் காலை மாலைக் கடன்களைக் கழித்து அசுத்தப்படுத்தும் வழக்கத்தைப் பற்றி அவர் பிரமாதமாகக் கண்டித்தார் என்று சகோதரப் பத்திரிகை ஒன்று ஞாபகப்படுத்தியிருக்கிறது. "மகாத்மாஜிக்குக் கூடத்தெரிந்த லட்சணம் அவ்வளவுதான்" என்றே நாம் முடிவு செய்ய வேண்டும்.

நமது புண்ய நதிகளின் மகிமை எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியும். மகா மகா பாபங்களையெல்லாம் போக்கடிக்கக்கூடிய புனிதத் தன்மை வாய்ந்தவை. அவற்றைக் கேவலம் மனிதர்கள் காலை மாலைக் கடன்களைக் கழிப்பதால் அசுத்தப்படுத்த முடியுமா? ஹ ஹ ஹ!


வடக்கேயிருந்து வந்த மற்றொரு பெரிய மனிதரும் இதே மாதிரியான அறியாமையினால் அவஸ்தைப்பட்டிருக்கிறார். அந்த விவரத்தைக் கேட்க விரும்பினீர்களானால் சொல்கிறேன். மகாகவி டாக்டர் ரவீந்திர நாத்தாகூர், சுமார் இருபது வருஷங்களுக்கு முன் ஒருமுறை தமிழ்நாட்டுக்கு வந்தார்.



# துர்வாச தாகூரும்!

அச்சமயம் அவர் திருச்சினாப்பள்ளிக்கு விஜயம் செய்தார். திருச்சினாப்பள்ளியில் அவருடைய வரவேற்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதாய் ஒப்புக் கொண்டிருந்த கனவான், ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர். இங்கிலீஷ் படிப்பு, நல்ல சம்பளம், உயர்ந்த பதவி இவற்றுடன் பட்டை விபூதி, பகவத் கீதைப் பிரசங்கம் ஆகிய இந்த ரகத்தைச் சேர்ந்தவர். "தாகூர் மகாகவியாயிற்றே" என்பதாக எண்ணி, அவரை ஸ்ரீரங்கத்துக் கோயிலுக்கு எதிரேயுள்ள திறந்த மண்டபம் ஒன்றில் இறக்கினார்!

• தாகூர்



முதலில், அங்கே ஏதோ வரவேற்பு வைபவத்துக்காக இறக்குகிறார்களென்று எண்ணிய தாகூர், சற்று நேரத்திற்கெல்லாம் "ஜாகைக்குப் போகலாமே?" என்று சொன்னார். "இதுதான் ஜாகை!" என்றார் வரவேற்புத் தலைவர். தாகூர் திகைத்துப் போனார். பிறகு சமாளித்துக் கொண்டு "காலைக்கடன்" முடிக்க வேண்டியதைப் பற்றி ஜாடைமாடையாய்த் தெரிவித்தார். இவருக்குப் புரியவில்லை. கடைசியில் கவி பட்டவர்த்தனமாய்த் தெரிவித்த பிறகு, "அதற்கென்ன? காவேரிக்கரை இருக்கிறது. போகலாம்" என்றார் நமது இங்கிலீஷ் ஸநாதனி. தாகூரின் முகத்தில் பயங்கரமும் பீதியும் குடி கொண்டன.

நல்ல வேளையாக, அவருடன் அது சமயம் வந்திருந்த ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் தலையிட்டு, கவி தாகூர் இந்த மாதிரி விஷயங்களில் இங்கிலீஷ் நாகரிகத்தைப் பின்பற்றுகிறவரென்றும், அவருக்குத் தனிப்பட்ட இடமும், 'கமோடு'ம் வேண்டுமென்றும் தெரிவிக்கவே, அதன்மேல் ஊரெல்லாம் தேடித் திரிந்து 'கமோடு' கண்டு பிடித்துக் கொண்டு வருவதற்குள், தாகூர் ஏறக்குறைய துர்வாசராகி விட்டார். நமது வர்ணாசிரம உத்தியோகஸ்தருக்கும் தாகூரிடமிருந்த மதிப்பில் முக்கால்வாசி போய் விட்டது!

- அமரர் கல்கியின் 'அதிர்ஷ்ட கவசம்' என்ற நூலிலிருந்து -
வானதி பதிப்பகம்

# உள்ளங்கையில் உலகம்

## இரண்டாம் பாகம்



# காணாமல் போன பணம்!

ஹீராலால் ஜெயினின் மகன் சாகேத், எம்.பி.ஏ. முடித்துவிட்டு, இரண்டு வருடங்களாக அமெரிக்காவில் வேலை பார்த்ததாக அறிந்து கொண்டேன். திறமைசாலி என்று கேள்விப்பட்டேன். 'தகப்பனாரின் இடத்தை எளிதில் நிரப்பி விடுவார்' என்றார்கள்.

நாட்கள் நகர நகர, ஹீராலால் ஜெயினைப் பற்றி மறந்தே போயிற்று. ஆனால் வழக்கம் போல, மாத முதல் வாரத்தில் கரீம் மருந்துகளைக் கொண்டு வந்து கொடுத்தார். நான் சாகேத்தைச் சந்தித்து, அப்பாவின் தொண்டு தொடர்வதற்கு நன்றி தெரிவிக்க விரும்பினேன். ஆனால் பணிச் சுமையால் முடியவே இல்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, மருந்துகள் வந்து சேரவில்லை. அவர்கள் ஒரு வேளை மறந்திருக்கலாம். இரண்டு நாட்கள் பொறுத்திருந்து பார்க்கலாம் என்றிருந்தேன். ஒரு வாரம் ஆகியும் மருந்துகள் வரவில்லை; டாக்டர்கள் மருந்து வரவில்லையே என்று காத்திருந்தார்கள். சாகேத்தைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். போனில் தொடர்பு கொண்டபோது, கரீமுக்குப் பதில் ஓர் இளம் பெண்ணின் குரல்தான் கேட்டது.

''சாகேத் சாப் உங்களை நாளைக் காலை ஒன்பது மணிக்கு அலுவலகத்துக்கு வரச் சொன்னார்!'' என்றாள் அந்தப் பெண்.

நன்கொடையாளரை மதிக்க வேண்டும். அதுதான் முறை. எனவே நான் மறுநாள் எட்டே முக்கால் மணிக்கே அங்கே போய்விட்டேன். மூன்று மாதங்களுக்கு முன் பார்த்த அலுவலகம் போலவே இல்லை. பெரிய மாற்றம்! அழகான ரிசப்ஷனிஸ்ட் பெண். மலர்க் கொத்துகள். பெரிய பெயின்டிங்குகள். கிரானைட் தரை. பட்டுத் திரைச் சீலைகள். நவீன விளக்கொளி அமைப்புகள். லெதர் சோபா செட்டுகள். 'அலுவலகம் மாறி வந்துவிட்டேனோ' என்று தோன்றியது. பழைய முதியவர் கரீமை அங்கே காணவே இல்லை. அந்த இளம் பெண் என்னை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அமரச் சொன்னாள். மணி 9.45 ஆகியும் என்னை அழைக்காததால், அந்தப் பெண்மணியிடம், ''எனக்கு வேலை இருக்கிறது. இனியும் காத்திருக்க முடியாது'' என்று சொன்னேன். அவள்

டானிக் தொடர்

சுதா மூர்த்தி

3



உடனே சாகேத்திடம் பேசினாள். என்னை அவர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

என்னிடம் பேச ஆரம்பித்தார் சாகேத் :

"நான் பழைய குறிப்புகளை எல்லாம் பார்த்தேன். என் தகப்பனார் உங்களுக்கு நன்கொடையாக ஏராளமான ரூபாய் தந்திருக்கிறார், எந்த விளம்பரமும் பெற்றுக் கொள்ளாமல். அத்தனையும் பாழ்! இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இனி நீங்கள் சிகிச்சை முகாம் நடத்தும்போது மட்டும், மருந்துகள் தருகிறேன். ஆனால் அங்கே என் பெயரும், என் நிறுவனத்தின் பெயரும் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட வேண்டும். பேனர்கள், விளம்பரப் பலகைகள் எல்லாம் அங்கே தொங்கவிட வேண்டும். நீங்கள் யாரையாவது அனுப்பி மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம். எங்களிடம் சில தேவைக்கு அதிகமான மருந்துகள் இருக்கின்றன. அவற்றைக் கொடுக்க விரும்புகிறோம். உங்கள் தேவைக்கு வேண்டிய மருந்துகளை நான் கொடுக்க இயலாது. நாங்கள் எதைத் தருகிறோமோ, அதைத்தான் நீங்கள் பயன்



"கடவுள்கிட்ட சாப்பாடு கேட்டேன். ஒரு ஓட்டலே கொடுத்தார்."

"அப்புறம்?"

"கடவுள்கிட்ட டிரஸ் வேணும்னு கேட்டேன். ஒரு துணிக்கடையே கொடுத்தார்."

"அடடா..."

"செலவுக்கு ஒரு பத்தாயிரம் கேட்டேன், உங்க செல் நம்பர் கொடுத்தார். எப்ப வரட்டும்?"

- தேவா

படுத்த வேண்டும். மகளிர் தினத்தன்று நீங்கள் எங்கள் அலுவலகத்துக்கு வந்து, எங்கள் ஊழியர்களிடம் என் நன்கொடை பற்றி சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும். உங்களுக்கு இத்தனை உதவி செய்கிறோம் நாங்கள்.... நன்கொடைகள் வெறும் தயாள சிந்தனையை மட்டும் காட்டக் கூடாது. அது பிஸினசுக்குத் தேவையான முக்கியக் கருவியும்கூட!".

இதற்குள் ஐந்து நிமிடம் ஆகிவிடவே, நான் எழுந்து கொண்டேன்.

அமைதியான குரலில், "மிஸ்டர் சாகேத், உங்கள் நன்கொடைக்கு நன்றி. ஆனால் நான் அதை ஏற்பதற்கில்லை. உங்கள் தேவைக்கு அதிகமான மருந்துகளை, நீங்கள் கொடுப்பதை நான் வாங்கிக்கொண்டு, அவற்றுக்கு ஏற்ற நோயாளிகளை நான் போய்த் தேட முடியாது. உங்கள் தகப்பனார் கொடுத்த நன்கொடைகளுக்கு எங்கள் நன்றி. உங்கள் தகப்பனார் சில நிபந்தனைகள் வைத்திருந்தார்; அவை அவருடைய முடிவுகள். எங்கள் முடிவுகள் அல்ல. நன்கொடையையும் வியாபாரத்தையும் இணைக்காதீர்கள். அப்படிச் செய்தால் இரண்டும் பாழாகிப் போய்விடும். உங்கள் தகப்பனார் இதை நன்றாக அறிந்திருந்தார்!" என்றேன் அழுத்தமாக.

நான் வெளியே வரும்போது, ஹீராலால் ஜெயினின் படத்தை மறுபடி மரியாதையோடு நின்று பார்த்தேன்.

சுனாமி தாக்கியவுடன், அது வரை பெயர் கூடக் கேட்டிராத நகரங்களை நோக்கி, லாரிகள் பண்டங்களைச் சுமந்து கொண்டு சென்றன. எல்லோரும் நிதி திரட்டத் தொடங்கினார்கள், பாதிக்கப் பட்டவர்களுக்காக. நாட்டின் சில பகுதிகளே பாதிக்கப்பட்டாலும், அதன் தாக்கம் பிரும்மாண்டமாக இருந்ததால், வெளியுலகிலும் பலர் அதன் பரிமாணத்தை உணர்ந்து கொண்டார்கள்.

ரேகா என்னுடைய சிநேகிதி. நல்ல பெண்தான் என்றாலும் சொன்னதையே சொல்லிச் சொல்லி, தலைவலி உண்டாக்கி விடுவாள்.

ஒரு நாள் ரேகா திடீரென்று என் அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தாள். ஆரம்பித்தாள் சுனாமியைப் பற்றி!

"முன் காலத்தில் ஜலப் பிரளயம் என்பார்களே, அது மாதிரிதான் சுனாமியும். அதன் அலைகள், அப்பப்பா... பயங்கரம்..."

தொடர்ந்தது சுனாமி பிரசங்கம். என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"ரேகா, அப்போது நீ அந்தப் பகுதியில் இருந்தாயா?" என்று கேட்டான்.

"இல்லை. டி.வி.யில் பார்த்தேன்."

"நானும் டி.வி.யில்தான் பார்த்தேன். பிறகு அங்கே எல்லாம் போய் வேலைகளும் செய்தேன். எதற்கு வந்தாய், சொல்லு. நாங்கள் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதில் மும்முரமாக இருக்கிறோம்" என்றேன் பட்டென்று.

"நான் கேசவபுர விரிவாக்கத்தில் இருக்கிறேன். அங்கே இளைஞர் மன்றம் ஒன்று இருக்கிறது. எல்லோரும் சைக்கிளில் வீடு வீடாகச் சென்று சுனாமிக்காகப் பணம் சேகரித்தார்கள். அவர்கள் அதை எல்லாம் ஒன்று திரட்டி உன்னிடம் கொடுக்க விரும்புகிறார்கள். நீ நேரே வந்து அதைப் பெற்றுக்கொள்ள

வேண்டும். அவர்களுக்கு ஒரு பாராட்டாகவும், பெரிய சாதனையாகவும் இருக்கும்" என்றாள்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சரி என்று ஒப்புக் கொண்டேன்.

இளைய தலைமுறையை இப்படிப் பாராட்டுவது சாதாரணமாக அவர்களை ஊக்குவிக்கும். அவர்கள் முதுகில் தட்டிப் பாராட்டினால், அவர்கள் தனியே இல்லை, கூட இன்னும் சிலரும் இருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தோன்றும்.

ரேகா மகிழ்ச்சியுடன் என் அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டாள்.

விழாவுக்குத் தேதி குறிக்கப்பட்டு, அன்று நான் அங்கே போனேன். மேடையை நன்றாக அலங்கரித்திருந்தார்கள். ஸ்பீக்கர் எல்லாம் கட்டியிருந்தார்கள். டி.வி., பத்திரிகை நிருபர்கள் வந்திருந்தார்கள். ஒரு மூலையில் காபியும், பிஸ்கட்டுகளும் தயாராக இருந்தன. சுனாமி பாதித்த பகுதிக்கே போகாதவர்கள்கூட, பாதிப்புகளையும் நிவாரண உதவிகளையும் பற்றிப் பேசினார்கள். மற்றவர்களைவிட, ரேகா பேசியது நன்றாக இருந்தது.

ரேகா பிறகு ஒரு வெல்வெட் பர்ஸை கையில் கொடுத்தாள். மாணவர்களும் மாணவிகளும் என் முன் வந்து நிற்க, அவர்களுக்கெல்லாம் மாலை போடச் சொன்னாள் ரேகா. புகைப்படக்காரர்கள் படம் பிடித்துக் கொண்டே இருந்தார்கள். எல்லோருக்கும் கைதட்டினார்கள். நானும் எல்லோரையும் மனதாரப் பாராட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

வீட்டுக்குப் போகிற வழியில், சுனாமி பாதித்தவர்களுக்கு என்ன வாங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பால் பவுடர், தார்ப்பாலின், மீன்பிடி வலை... அந்த மாணவ-மாணவிகளுடைய கருணை, உழைப்பு, என் மீது நம்பிக்கை வைத்துத் தந்த பண முடிப்பு எல்லாம் என் நினைவில் வந்துகொண்டே இருந்தன.

இதை எல்லாம் எண்ணிக் கொண்டு, பர்ஸைத் திறந்து பார்த்தேன். பணத்தைக் காணவில்லை. எங்கே போயிருக்கும் என்று தேடினேன். உள்ளே இரண்டு பக்கங்கள் முழுக்க எழுதிய தாள்களும், ஒரு பத்து ரூபாய் நோட்டு மட்டும் இருந்தது!

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்தத் தாள்களில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். அது செலவுக் கணக்கு. மொத்தம் திரட்டிய நிதி ரூ.10,295; செலவு ரூ.10,285. மேடை அலங்காரம், மைக், போட்டோ, வீடியோ, டாக்சி சார்ஜ், பூங்கொத்து எல்லாம்தான் செலவு.

அடுத்த நாளே செய்தித்தாளில் புகைப்படம் வெளியாகி இருந்தது. ரேகா சிரித்தபடி என்னிடம் 'பண முடிப்பு' கொடுக்கிறாள். கீழே, 'கேசவபுர விரிவாக்க இளைஞர்கள் சங்கத்தின் தலைவி ஸ்ரீமதி ரேகா நஞ்சுண்டப்பா, சுனாமி நிவாரண நிதியாகத் திரட்டிய பணத்தை, இன்ஃபோஸிஸ் ஃபவுண்டேஷன் தலைவி ஸ்ரீமதி சுதா மூர்த்தியிடம் வழங்குகிறார்' என்று அச்சிட்டிருந்தது. எப்படி இருந்திருக்கும் எனக்கு!

(பேசுவோம்)

"நேத்து திருடன் வேடத்தில் நகர்வலம் போனது தப்பாப்போச்சு, அமைச்சரே...!"

"என்ன ஆச்சு மன்னா?"

"ஏகப்பட்ட காவலர்களுக்கு மாமூல் கொடுக்க வேண்டியதாயிடுச்சு...!"


**- புன்னகை மன்னன்**



## அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005ல் மூன்றாம் பரிசு ரூ. 5,000 பெற்ற கதை

ஐந்து வருடங்கள் கழித்து, இன்று கல்லூரிக்குப் போகிறோம் என்று நினைக்கும்போதே ரொம்பவும் குஷியாக இருந்தது. பச்சைப் புல்வெளிகள், சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள், வண்ணமயமாய் அவற்றை நிரப்பும் பூக்கள், சிறிய குரோட்டன்ஸ் மற்றும் வெட்டப்பட்ட குட்டைச் செடிகள் என்று, தோட்டப் பிரியர்களின் கனவுலகம் போலக் காட்சியளிக்கும் எங்கள் கல்லூரி. மஞ்சள் கம்பளம் விரித்தாற் போல, கீழே கொட்டிக் கிடக்கும் மலர்களைப் பொறுக்கி எடுத்து செய்த ரங்கோலி நினைவுக்கு வந்தது. இதைப் போலவே, சின்னச் சின்ன மலரும் நினைவுகள் எல்லாம் ஒரு ஐந்து நிமிட விளம்பரம் போல தொடர்ச்சியாய் வந்தது. பழைய நண்பர்கள் ஞாபகமும் கூடவே வந்தது. நெருங்கிய நண்பர்கள் எல்லாம், என்னைப் போலவே கல்லூரி வேலையை விட்டு விட்டு, வெவ்வேறு துறைகளில், வேறு இடங்களுக்குப் போய் விட்டதால், இன்று அவர்கள் யாரையும் பார்க்க முடியாது. ஒரு சில ஆசிரியர்களைப் பார்க்கலாம். எல்லாரையும் விட, ஆயாவைப் பார்க்கலாம் என்று நினைக்கும்போது, அந்த எதிர்பார்ப்பில் ஒரு சந்தோஷம் இருந்தது.

ஆயா... ஏனோ தெரியவில்லை, முதல் நாளிலிருந்தே அவரை எனக்கு ரொம்பப் பிடித்துப் போயிற்று. புது ஊர், புதுக் கல்லூரி. முன்னே பின்னே இந்த கல்லூரியைப் பற்றித் தெரியாது! அப்போதுதான் இரண்டு மாதங்களுக்கு முன்பு பொறியியலில் முதுகலை பட்டம் முடித்திருந்தேன்.



**ரமா**

# பெயரில்லா பந்தங்கள்!

யாராவது 'கல்லூரி விரிவுரையாளராகச் சேருகிறாயா?' என்று கேட்டிருந்தால், 'நிச்சயம் இல்லை' என்றுதான் சொல்லி யிருப்பேன். திடீரென்று அப்பாவுக்கு இந்த ஊருக்கு மாற்றல் ஆகும் என்றும், இந்தக் கல்லூரி வேலையை விட்டால் இந்த ஊரில், என் துறையில் வேறு வேலை கிடைக்காது என்றும் அப் போது தெரியுமா என்ன? அப்பா, அம்மாவை விட்டுவிட்டு, வேறு ஊரில் வேலை செய்யும் விருப்பம் இல்லை. எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி, அப்பாவிடம் ஒரு வருட 'கிரேஸ் டைம்' வாங்கியிருந்தேன். ஒரு வருடம் கழித்துத்தான் மாப்பிள்ளை பார்க்க வேண்டுமென்று அப்பாவிடம் சொல்லியிருந்தேன். கல்யாணம் ஆகிவிட்டால், எந்த ஊருக்குப் போவேனோ... அதுவும் முக்காலே மூன்று வீசம் பொருத்தமான மாப்பிள்ளைகள் எல்லாம், அமெரிக்காவுக்கு ஓடிவிட்டதில்! எல்லாவற்றையும் யோசித்து, இந்தக்



கல்லூரிக்கு விண்ணப்பித்து, நேர்காணல் எல்லாம் முடிந்து, ஒரு வாரத்திற்குள் வேலையில் சேர்ந்து விட்டேன். திடீரென்று ஒரு விரிவுரையாளர் மேற்படிப்புக்குச் சென்றுவிட, முன் அனுபவம் இல்லாத எனக்கு வேலை கிடைத்தது. படித்து முடித்த இரண்டாவது மாதத்தில், வகுப்பறையில், எதிர்ப்பக்கம் நிற்போம் என்று நான் கனவுகூடக் கண்டிருக்கவில்லை!

கல்லூரியில் முதல் நாள்... இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது. பற்பல சிந்தனைகளுடன், குழம்பிய மனத்துடன், ஏன் சிறிது பயத்துடனேயே சென்றேன். முதல் நாளே தாமதம் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடன், அரை மணி நேரம் முன்னதாகவே சென்று விட்டேன். அப்போது வகுப்பறைகளைப் பெருக்கிக் கொண்டிருந்த ஆயா, என்னைப் பார்த்துச் சிரித்து, "புதுசா வேலைக்குச் சேர்ந்திங்களா?" என்று கேட்டார். ஸ்டாஃப் ரூமைக் காட்டி, என் இருக்கையைத் துடைத்து, அதில் அமரும்படிச் சொன்னார். "இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்களேம்மா... காபி, டிபன் ஏதாச்சும் வாங்கியாரவா?" என்று கேட்டார். வயிறு பசியில் கிள்ளினாலும் "வேண்டாம்" என்றேன். "சாப்டீங்களா?" என்று திரும்பவும் கேட்டார். "இல்லை, ஆனாலும்..." என்று இழுத்தேன். "என்னம்மா ஆனாலும்? காசு கொடுங்க, நான் இப்பவே போய் ரெண்டு இட்லி வாங்கிட்டு வரேன்" என்று உரிமையாய் கடிந்து கொண்டு, கேண்டீனுக்குச் சென்று இட்லி வாங்கி வந்தார்.



**"பூவுக்குக் காசு கொடுத்து என்னை சிறுமைப் படுத்தாதே!"**

தினமும் காலையில் மற்றவர்களுக்கு முன்னால் வருவது எனக்கு வழக்கம் ஆயிற்று. அப்பா அலுவலகம் செல்லும்போது, பஸ் ஸ்டாப்பில் என்னை விட்டுச் சென்றால், நான் கும்பல் இல்லாத பஸ் பிடித்து, அரை மணி நேரம் முன்பாகவே கல்லூரிக்கு வந்துவிடுவேன். என் டேபிளை ஒழுங்கு செய்து, அன்றைய வகுப்புக்குத் தேவையான நோட்ஸை எடுத்து வைத்து, ஆயாவிடம் கொஞ்ச நேரம் பேசுவது தினசரி வழக்கமாயிற்று. எங்கோ போய்விட்ட தன் மகனைப் பற்றியும், பஸ் ஆக்ஸிடெண்டில் மகளும், மருமகனும் இறந்துவிட, தன்னிடம் வளரும் பேத்தியைப் பற்றியும்தான் பெரும்பாலும் ஆயா பேசுவார். படிப்பறிவு இல்லை என்றாலும், ஆயாவுடைய பேச்சும், புத்திகூர்மையும், உழைப்பும் என்னை நிறைய நேரங்களில் வியப்படையச் செய்யும். நேரம் போவதே தெரியாது, ஆயாவின் பேச்சு ஜாலத்தில்!

வீட்டிலிருந்து ஒரு சிறிய கண்ணாடிப் பூ ஜாடி எடுத்து வந்து, என் மேஜை மேலே வைத்திருந்தேன். முதல் நாள் எடுத்து வந்த ரோஜா, பயணத்திலேயே கசங்கி விட்டது! "நீ எடுத்துட்டு வராதேம்மா, நம்ப கேம்பஸில் இல்லாத பூவா" என்றார் ஆயா. தினமும் அழகான பூக்கள், அத்துடன் வைக்க இலை, கிளை என்று எடுத்து வருவார். நான் என்ன வண்ணப் புடைவை கட்டியிருக்கிறேனோ, முடிந்தவரை அதற்கு மேட்சிங்காக, அதே வண்ணப் பூக்களைக் கொண்டு வருவார். இதற்காக மாதக் கடைசியில் நான் பணம் கொடுக்க, "எனக்குச் சம்பளம் காலேஜிலேயே கொடுக்கறாங்கம்மா. நான்

பூவைக் கொண்டு வர்றது உனக்காகத் தான். அதுக்குக் காசு கொடுத்து, என்னைச் சிறுமைப்படுத்தாதே" என்று கோபித்துக் கொண்டார். எப்படியோ, நாட்கள் விரைவாக ஓடிவிட்டன. எப்படி இருக்கப் போகிறதோ என்று நான் நினைத்து பயந்த வேலை, என் மனதுக்குப் பிடித்ததாகவும், திருப்தியா கவும் இருந்தது. நான் படித்ததைவிட, நிறைய புது விஷயங் களைக் கற்றுக் கொண் டேன். அதையல்லாமல் சொல்லும் விஷயத்தை எப்படி அழுத்தமாக, மாணவர் மனதில் பதியும் படி, அதே சமயம் அவர் களுக்கு போரடிக்காதபடி சொல்வது என்று நிறைய திட்டமிட்டுச் செய்தேன். அதற்கு மாணவர் மத்தி யில் வரவேற்பு இருந்த போது, மனது குதூகலித் தது.

இடையில் ஆயா வுடன் என் ஒட்டுதல் வளர்ந்து கொண்டே இருந்தது. தீபாவளி, பொங்கலுக்கு ஆயாவை வீட்டுக்கு வரச் சொல்லி புடைவையும், பேத்திக்கு உடையும் வாங்கிக் கொடுத்தேன். சந்தோஷ மாக வாங்கிக் கொண் டார்.




"பெயரே தெரியாமல் ஒரு வருடம் பழகி விட்டேனே!"

அந்த வருடம் முடியும் நேரத்தில், சித்தி மதுரையிலிருந்து ஒரு நாள் போன் செய்தார். தன் பக்கத்து வீட்டில் வசிக்கும், நெடுநாள் பழக்கமான குடும்பத்துப் பையன், அமெரிக்காவில் எம்.எஸ். படித்துவிட்டு, அங்கேயே மோட்ட ரோலோ கம்பெனியில் நல்ல வேலையில் இருப்பதாகவும், 'ரொம்ப நல்ல குடும்பம், நல்ல பையன், உனக்கு ஏற்ற மாப்பிள்ளை' என்றும் சிபாரிசு செய் தார். ஜாதகம் பார்த்து, போட்டோ பார்த்துப் பிடித்து, பையன் இரண்டு வாரத்தில் வந்து பார்த்து, கல்யாணம் முடிந்தது. எல்லாமே ஒரே மாதத்தில் முடிந்து விட்டது. கல்யாணம் முடிந்த அடுத்த வாரத்திலேயே அமெரிக் காவுக்குப் புறப்பட்டுச் சென்றேன். பெண் பார்க்க வரும்போது, தன் சொந்த கிராமத்துக்கு ஒரு வாரம் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற ஆயா, நான் அமெரிக் காவுக்குக் கிளம்பும் வரை திரும்ப வரவேயில்லை. என் நண்பர்களும் இப் போது இங்கு இல்லாத தால், ஆயாவைப் பற்றி ஒரு தகவலும் இல்லை.

ஐந்து வருடம் கழித்து, என் குட்டிப் பெண் சஞ்சனாவுக்கு மொட்டை போடுவதற் காக, இப்போதுதான் இந்தியாவுக்கு வந்தேன். ஆயாவைப் பார்ப்பதற் காகத்தான் கல்லூரிக்கே வருகிறேன். ஐந்து வரு டங்களில் எத்தனை மாற்றங்கள்! முன்பு அங் கொன்றும், இங்கொன்று மாய் இருந்தன கட்ட டங்கள். இப்போதோ, எங்கு பார்த்தாலும் கட்டடங்கள், புதுப் புதுத் துறைகள்! நல்ல காலமாய் மரங்களும், புல்வெளிகளும் இன்னும் மிச்சமிருந்தன. ஐ.டி டிபார்ட்மெண்டைத் தேடிக் கண்டுபிடித்து, இன்னும் தெரிந்தவர்கள் சில பேர் இருப்பதைக் கண்டு நிம்மதி யடைந்தேன். பரஸ்பர விசாரிப்புகள், வேலை, கணவர், குழந்தை என்று ஒவ் வொருவராய்ப் பேசியதில், இரண்டு மணி நேரம் போனதே தெரியவில்லை.

"நான் இங்கு இருந்தபோது ஆயா வேலை செய்தாரே... அவர் இன்னும் இங்கே பணியில் இருக்கிறாரா?" என்று

# Mr.மெட்ராஸ்



ஆவலுடன் கேட்டேன்.

"எந்த ஆயா? இப்போது இருப்பவர் சேர்ந்து ஒரு மாதம்தான் ஆகிறது. இப்போது ஒவ்வொரு வருடமும் ரொட்டேஷனில் ஆயாக்களும், அட்டெண்டர்களும் மாறுவதால், ஐந்து வருடத்திற்கு முன்பு யார் வேலை செய்தார்கள் என்றே மறந்து விட்டது" என்று எல்லோரும் கூறியது ஏமாற்றமாய் இருந்தது.

"ஆமாம், நீ சொல்கிற ஆயாவின் பெயர் என்ன?" என்று ஒரு நண்பர் கேட்டபோதுதான், ஆயாவின் பெயரே தெரியாது என்பது உறைத்தது.

''அவர் பேத்தி பெயர் விஜயலட்சுமி'' என்றேன். ஆபீஸில் மேனேஜரிடம் கேட்டதில் "அட, என்னம்மா, இப்படி ஐந்து வருடத்துக்கு முன்பு ஐ.டி. டிபார்ட்மெண்டில் வேலை செய்த ஆயா என்றால் எப்படித் தேடுவது? பேர் சொன்னால், இப்போது ரோலில் பேர் இருக்குதான்னு பார்க்கலாம்'' என்றார்.

"தேங்க்ஸ், ஸார்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

'ஒருவர் பெயரே தெரியாமல், கிட்டத்தட்ட ஒரு வருடம் அவரை தினமும் பார்த்துப் பேசியிருக்கிறோம். அவரை வீட்டுக்குக் கூப்பிட்டிருக்கிறோம். அவர் பேத்தி பெயரைக் கூடக் கேட்டு ஞாபகம் வைத்திருக்கிறோம். ஆனால், ஆயாவின் பெயரைக் கேட்க வேண்டும் என்று ஒரு முறை கூடத் தோன்றவில்லை! எப்படி?' என்று என்னை நானே திட்டிக் கொண்டேன். கல்லூரியில் நுழையும்போது இருந்த குஷி, இப்போது காற்றிழந்த பலூன் போல புஸ்! ஆயாவுக்கும், பேத்திக்கும் கொண்டு வந்த சாமான்கள் கையில் கனத்தன. அதை என்ன செய்வது, யாருக்கு ஆயாவைப் பற்றித் தெரியும் என்று யோசித்துக்கொண்டே வெளி கேட்டை நோக்கி நடந்தேன். ஆயாக்கள், கும்பலாய் புல்லில் உட்கார்ந்து களை எடுத்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார்கள். 'நம் ஆயா இதில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று நினைத்துக்கொண்டே, தலையைத் தூக்கினால், 'அட! அந்த மரத்தடியில் நின்று கொண்டிருப்பது நம் ஆயாவா?' என்று நினைத்து, வேகமாய் ஓட்டமும் நடையுமாய் விரைந்தேன்.

'அட, மஞ்சம்மா!' என்று என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சியாய்க் கூவி, விரைந்து வந்தார் ஆயா.

நான் ஆயாவைக் கேட்ட முதல் கேள்வி,

'ஆயா, உங்க பெயர் என்ன?' ○

# கல்கி தந்த உற்சாகம்!

## அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2005ல் பரிசு பெற்றவர்கள் பற்றிய அறிமுகம் :

* பாரதிக்குமார்



**நெய்வேலி பாரதிக்குமார்**
**முதல் பரிசு : பிடிபட்டவன்**

நெய்வேலியைச் சேர்ந்த பாரதிக்குமாரின் இயற்பெயர் ச.செந்தில்குமார். வயது 39. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் கூடுதல் பொறியாளராகப் பணி. மனிதநேயமிக்க, சமூகத்தின் மீதான ஈரம் கசிந்த பார்வையை இயன்றளவு தம் எழுத்தில் தர முயன்று வருவதாகக் கூறும் பாரதிக்குமார், 'முற்றுப்பெறாத மனு' என்னும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

* சந்திரசேகரன்



**கே. சந்திரசேகரன்**
**இரண்டாம் பரிசு - பட்டிக்காரன்பட்டி ரயில்வே கேட்**

ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவில் சீஃப் மேனேஜராகப் பணி. பயணம் செய்வதில் ஆர்வம். 'கல்கி தந்த உற்சாகத்தினால் இனி கூடுதலாக எழுதத் தொடங்குவேன்' என்கிறார்.

* ரமா



**ரமா**
**மூன்றாம் பரிசு - பெயரில்லாத பந்தங்கள்**

கட்டடக் கலைஞரான இவர், தனியார் கல்லூரியில் விசிட்டிங் புரொபசராகவும் பணிபுரிந்து வருகிறார். கடந்த இரண்டு வருடங்களாகத்தான் கதைகள் எழுத ஆரம்பித்திருக்கிறார். "கட்டடக் கலை பற்றிய அவேர்னெஸ் நம் ஊரில் இன்னமும் தேவை. கட்டடக் கலைஞர் பற்றிக் கதை எழுதும் ஆவல் எனக்குள் அதிகரித்து வருகிறது" என்கிறார்.

* சூர்யா சுரேஷ்



**சத்திய ஜீவிதம்**
**ஆறுதல் பரிசு - சூர்யா சுரேஷ்**

இயற்பெயர் மு.சுரேஷ். புகைப்படக் கலைஞர். கவிதைகளும் சிறுகதைகளும் இரண்டு கண்கள். இளம் படைப்பாளிகள் எழுச்சியோடு எழுத வேண்டுமென்று விரும்புகிறார். கடந்த ஆண்டு தினமலர் - வாரமலர் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றிருக்கிறார் இந்த புதுக்கோட்டைக்காரர்.

* தேவவிரதன்



**வீடு**
**ஆறுதல் பரிசு - தேவவிரதன்**

இயற்பெயர் ஜி.சுவாமிநாதன். மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் விஞ்ஞானி. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் இசை விமர்சனமும் செய்து வருகிறார். India Nest என்ற இணையதளத்தில் இவருடைய புத்தக விமர்சனங்களும் கட்டுரைகளும் வெளியாகியுள்ளன.

- மதுமிதா




# பேய் கிராமம்!

இளம்பெண் மேரி, திருவாரூர் மாவட்டம் எடையூர் அருகே உள்ள அம்மளூர் கிராமத்தைச் சேர்ந்தவள். பட்டாம்பூச்சிபோல் ஊரைச் சுற்றி வந்தவர், திடீரென்று ஒரு நாள் பித்துப் பிடித்தவர் போல் ஆனாள். தனிமையில் இருக்கும்போது விநோத ஒலிகளை எழுப்பி, பார்ப்பவரை பயமுறுத்தினாள். நாட்கள் இப்படியே நகர, ஒரு நாள் மேரி தூக்கில் தொங்கிவிட்டாள். கிராமமே அதிர்ச்சியில் உறைந்து போனது. தற்கொலை செய்து கொண்டுவிட்டதாகவே அனைவரும் நம்பினர். அதன்பிறகுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அதுவரை நன்றாக இருந்த அம்மளூர் கிராம இளம் பெண்கள் பலர், இச்சம்பவத்துக்குப் பிறகு சித்தபிரமை பிடித்தவர்கள்போல் ஆகிவிட்டிருக்கின்றனர். தங்கள் குழந்தைகள் இப்படியாகிவிட்டார்களே என்கிற பதைபதைப்பில், கிராம மக்கள் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல, ம்ஹூம்.. வைத்தியத்தால் அவர்களிடத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.



* கோவிந்தராஜ்



* பாலா

அப்போதுதான் 'இது ஏதாவது பேய், பிசாசின் வேலையாயிருக்குமோ' என்ற அச்சம் அவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. உடனே மந்திரவாதி ஒருவரை வரவழைத்துக் கேட்க, அவரும் என்னென்னமோ செய்துவிட்டு, "ஆம். மேரியின் ஆவிதான் இந்த ஊர் இளம் பெண்களைப் பிடித்து ஆட்டுகிறது. நான் அவர்களை சரிப்படுத்து இறேன்" என்று கூறி, ஆவியைப் பிடித்து பக்கத்து கிராமமான சோத்தியத்தின் எல்லையில் நிறுத்தினாராம். அன்றிலிருந்து அம்மளூர் அமைதியாகிவிட, சோத்தியம் கிராமத்துக்குச் சனி பிடித்திருக்கிறது.

அவ்வூரிலுள்ள சிறு வயதுப் பெண்களிலிருந்து கல்யாணமானவர்கள், கர்ப்பிணிகள் என சகல தரப்பு பெண்களையும் ஆவி பிடித்து ஆட்டத் தொடங்கியிருக்கிறது. இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டு மீண்டிருக்கிறார்கள். சத்யா, லதா, சின்னாயி, வளர்மதி, பூங்கோதை, சந்திரமதி எனத் தொடரும் அந்த லிஸ்ட்டில், தற்போது லேட்டஸ்ட்டாய் சேர்ந்திருப்பது, தேனாம்பிகா என்ற இளம் பெண்.

"எம் பொண்ணை அந்த ஆவி படாத பாடு படுத்துதுங்க. எத்தனையோ ஆகபத்திரி போய்ட்டு வந்தும் அவ ஆட்டம்

* ஊர்ப் பெண்கள்





* பேய் கிராமம்

* தேனாம்பிகா

நிக்கலீங்க. அம்மனூர்ல இருந்த மேரியோட ஆவிய அந்த ஊருக்குள்ள நுழைய முடியாம பூசை பண்ணின மந்திரவாதி, தகடு வச்சு தடுப்புப் போட்டுட்டாரு. அதனாலதான் எங்க ஊர்ல புகுந்து அட்டகாசம் பண்ணுது'' என்று நம்மிடம் கண்கலங்கப் பேசினார் தேனாம்பிகாவின் தந்தை கோவிந்தராஜ்.

''பௌர்ணமி நாள் அன்னிக்குத்தான் மேரி தூக்குப் போட்டு செத்துப் போனா. அவள அடக்கம் பண்ணப்போ, வளையலு, துணி எதையும் மாத்தல. அப்ப கண்ணு திறந்து இருந்துச்சு. செத்துட்டாள்னு நினைச்சு உயிரோடேயே புதைச்சுட்டாங்க. அதனால தான் ஆவியா நின்னு ஆட்டம் போடுறா'' என்று புதுப் புரளியைக் கிளப்பினார், இதே ஊரைச் சேர்ந்த சாந்தி என்ற சுய உதவிக்குழு பெண்மணி.

சண்முகம் என்பவர் நம்மிடம் பேசும்போது, ''பேய் பிடிக்கும் பெண்கள் பௌர்ணமி நாட்களில்தான் அதிக பாதிப்புக்கு ஆளாகிறார்கள். இளைஞர்களைப் பார்த்தாலே ஆவேசமாகி விடுகிறார்கள். இதனால் இவ்வூர் இளைஞர்கள் அச்சத்தோடு தான் இருக்கிறார்கள்'' என்றார்.

பேய் பிடித்ததாகச் சொல்லப்படும் தேனாம்பிகாவிடம் பேச்சுக் கொடுத்தோம்.

''ஆவி உடம்புல ஏறும்பொழுது என்ன நடக்குதுன்னு சுத்தமா தெரியமாட்டேங்குது. உடம்பு எல்லாம் ஒரே விறைப்பா இருக்கும். நாலைஞ்சு மணி நேரத்துக்கு எதுவுமே புரியாது. உடம்புல வலி இருக்கும். அடுத்தவங்க, இப்படிப் பேசினேன்... அப்படிப் பேசினேன்னு சொல்லுவாங்க'' என்றார் பயம் விலகாத முகத்துடன். இந்தச் சரக காவல் துறையினர்கூட இந்த ஆவிக் கதைகளை ஆரம்பத்தில் நம்பவில்லையாம். ஒரு நாள் அவர்களே வந்து பார்த்துவிட்டு, வாயடைத்துப் போய்விட்டார்களாம். அதிலிருந்து அவர்கள் இரவு நேரங்களில் இந்தப் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லையாம்.

''ஆரம்பத்துல எல்லாரும் சொன்னப்போ, இந்த நவீன யுகத்துல பேயாவது, ஆவியாவதுன்னு நினைச்சேன். ஆன நேர்ல போயி அவுங்க பௌர்ணமி நேரத்துல ஆடுற ஆட்டத்தைப் பார்த்து குலை நடுங்கிட்டேன். எவ்வளவுதான் அறிவு இருந்தாலும், இந்த மூடநம்பிக்கையிலிருந்து மீள முடியலீங்க. நடக்குற கூத்தைப் பார்த்தா ஆவி, பேய் இன்னும் இருக்குன்னு தான் தோணுது'' என்றார் அவ்வூரில் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் பாலா.

இவர்களெல்லாம் சொல்வதை நம்புவதா, வேண்டாமா... ஓர் ஊருக்கே பேய் பிடிப்பதென்பது சாத்தியமா... ஏதாவது மன நோய் விவகாரமா... என்றெல்லாம் எண்ணி குழம்பிப் போய், பேய் பிடிக்காத குறையாக நாம் வீடு திரும்பினோம்.

**- மா.சிவகுமார்**

படங்கள் : **ஆர்.ஜே.வி.**




# லண்டக்க! லண்டக்க!

**லண்டன் :**

இப்போதைக்கு உலகத்துல பரபரப்பு... படபடப்பு மிகுந்த சிட்டின்னா அது லண்டன்தான். ஒரு மாறுதலுக்கு லண்டனோட கூலான முகத்தைத் தெரிஞ்சுக்கலாமா! (londontown.com, visitlondon.com) லண்டனை மியூசியங்கள் நிறைந்த நகரம்னு சொல்லலாம். இப்போ லண்டன்ல சுற்றுலாப் பயணிகள் விரும்புற செம ஸ்பாட் 'பிரிட்டிஷ் ஏர்வேஸ் லண்டன் ஐ வீல்'. இதை உலகத்தின் மிகப்பெரிய ராட்டினம்னு சொல்லலாம். இதுல ஏறி லண்டனோட 55 முக்கியமான இடங்களை 30 நிமிஷத்துல பார்க்கலாம். லண்டன்ல வேற என்னென்ன பார்க்கலாம். கட்டணம் எவ்வளவு, ரூட் என்ன, ஹோட்டல்ஸ், டைரக்டரி... எல்லாவற்றையும் மேப் போட்டுக் காட்டுது இந்தத் தளம். லண்டன்ல நடக்குற முக்கியமான திருவிழாக்கள், தியேட்டர்ஸ், டான்ஸ், க்ளப் நிகழ்ச்சிகள் எல்லாம் கிடைக்கிறது தேதி வாரியாக! என்னது? சுரங்க ரயில்களோட டைம் டேபிள் வேணுமா... ஸ்ஸாரி, ர்ராங் நம்பர்!

**டௌன்லோட் :**

அடிக்கடி copy & paste-ஐ உபயோகப் படுத்துற வகையா நீங்க! நாம copy பண்ணுற text 'க்ளிப் போர்டு மெமரி'ல இருக்கும். நீங்க வேர்டைப் பயன்படுத்துறப்ப, ஒன்றுக்கு மேற்பட்ட text-ஐ copy பண்ணி வைச்சுட்டு தேவையான இடத்துல paste பண்ணிக்கலாம். ஆனா, எல்லா அப்ளிகேஷன்லயும் இந்த வசதி கிடையாதே. அதனால luziusschneider.com/mcinstal.exe-ல இலவசமா, 'மல்டி க்ளிப் போர்டு' கருவியை டௌன்லோட் பண்ணிக்கோங்க! அப்புறமென்ன, விதவிதமான text-ஐ எவ்வளவு வேணும்னாலும் copy பண்ணி வைச்சுக்கிட்டு எங்கங்க தேவையோ அங்கங்க paste பண்ணி வேலையை சுலபமாக்கிக்கலாம்.


**வலைப்பதிவு :**

செங்கற்பட்டில் BMW கார் தொழிற்சாலையை நிறுவவுள்ளதாகச் செய்தி. புதிய மாற்றுக் கடைகளைத் தேடிப் போக வேண்டிய கட்டாயத்திலிருக்கும் பெருநிறுவனங்கள் ஒவ்வொன்றாக இந்தியாவிற்குள் அடியெடுத்து வைக்கின்றன. கேட்க நன்றாக இருந்தாலும், சாலை வசதி மேம்பாட்டிலும், சாலை விதிகளை மதித்துப் பின்பற்றுவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்படாத வரை, எந்த புது கார் வந்து என்னவாகிவிடப் போகிறது என்ற ஆதங்கமும் எழுகிறது. வரும் நாட்களில் "BMW இங்கு வர நான் / நாங்கள்தான் காரணம்" என்று சில குரல்களைக் கேட்கலாம்! எங்கோ அடுத்த சாலையில் வரும் மளிகைக் கடைக்கும் நான்தான் காரணம் என்று சொல்லாத வரைக்கும் சரி! (nradhak.blogspot.com - வலைப்பதிவிலிருந்து.)

- வலைஞன்

# அட!





# போட்டுத் தாக்கு!

**ஈ.வி.கே.எஸ். இளங்கோவனிடம் கேட்கக்கூடாத பத்துக் கேள்விகள் :**

1. உங்களுக்கு அடிக்கடி 'வாசனை'ப் பாக்குப் போடுற பழக்க முண்டாமே...?

2. 'காங்கிரஸ் ஒரு வெங்காயம். உரிக்க உரிக்க ஒண்ணுமே கிடையாது'ங்கற தத்துவத்தை, பெரியார் பேரனான நீங்க ஒப்புக்குறீங்களா?

3. வாசன் உருப்பட பத்து யோசனை சொல்ல முடியுமா?

4. தமிழகத்துல காமராஜர் ஆட்சி அமையறதும், காவிரியை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வர்றதும் ஒண்ணுதானாமே, உண்மையா?

5. சோனியா 'அம்மா'ன்னா ரொம்பப் பற்றாமே உங்களுக்கு?

6. யாரையோ வெறுப்பேத்தணும்னு 'இங்கிலீஷ்காரன்' படத்துக்குப் போனீங்களாமே...?

7. காட் 'விநாயகா'தான் உங்க புது ஃப்ரெண்டுன்னு பேசிக்குறாங்களே...?

8. உங்களுக்கும் தி.மு.க.வுக்குமான வர்த்தகம் எப்ப சரியாகும் அமைச்சரே..?

9. போஸ்டரே ஒட்டக்கூடாதுன்னு சத்தியமூர்த்தி பவனைச் சுத்தியிருக்கிற சுவரை இடிக்கச் சொல்லப் போறீங்களாமே?

10. 'காணவில்லை-உண்மையான பற்றுள்ள காங்கிரஸ்காரர்'னு பேப்பர்ல விளம்பரம் கொடுக்குற உத்தேசம் இருக்கா?

**- பத்துக் கேள்வி பரமு**




# "தரையில் பறந்தேன்!"

**ரோ**லர் ஸ்கேட்டிங் - காலில் சக்கரத்தை மாட்டிக் கொண்டு மின்னலென தரையில் செல்லக்கூடிய விளையாட்டு. பெரும்பாலும் இவ்விளையாட்டை நேரிலோ, ஏன் டி.வி.யிலோகூட யாரும் அவ்வளவாகப் பார்த்திருக்க வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட கண்காணாத விளையாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, இன்று சைனாவில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்ளும் அளவுக்குத் தகுதி பெற்றிருக்கிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த அமிர்தா ஜேதா.

'இந்த விளையாட்டு உங்களுக்குப் பழக்கமானது எப்படி?' என்று கேட்டோம்.

"நான் மூணாவது படிக்கும்போது அண்ணா நகர் ஸ்கேட்டிங் கிளப்புல என்னை 'சும்மா போய்ட்டு வா'ன்னு சேர்த்து விட்டாங்க. மத்த விளையாட்டைவிட எனக்கு இது ரொம்ப ஜாலியா இருந்துச்சு. அப்படியே நான் தரையில பறக்கற மாதிரி உணர்ந்தேன். இந்த ஆர்வத்துல அடுத்த வருஷமே ஸ்டேட் சாம்பியனானேன்" என்றவரிடம் "ஸ்கேட்டிங் போகும்போது விழ மாட்டீர்களா?" என்றால், "விழாம எப்படி! சரியா டெக்னிக்கலா பண்ணாட்டி கீழே விழத்தான் செய்வோம். அதெல்லாம் தமாஷா இருக்கும்" என்று சிரிக்கிறார்.

சூரத்தில் பிறந்த இவர், தவழும் வயதில் சென்னைக்கு வந்துவிட்டதால், தமிழும் தமிழ்நாடும் இவருக்கு நன்றாகவே பழகிவிட்டிருக்கிறது. "தமிழ்நாடு ரொம்ப பாதுகாப்பான இடம். அதான் நாங்க எங்க சொந்த ஊருக்குப் போகலை. ஸ்கேட்டிங்ல தமிழ்நாட்டுலேயே நம்பர் ஒன் நான்தான் தெரியுமா?" என்கிறார் கண் சிமிட்டியபடி.

"தமிழ்நாட்டுல இந்த விளையாட்டு அவ்வளவு ஃபேமஸா இல்லை. இங்கே பயிற்சிக்கான முழு வசதியும் கிடைக்கறதேயில்லை. டி.வி.யிலும் காண்பிக்கிறதில்லை. ஒலிம்பிக்கிலயும் இதைச் சேர்த்துக்கலை. அதோடு இது கொஞ்சம் செலவு வைக்கிற விளையாட்டு. சக்கரம் உள்ள ஷூ வாங்கவே பதினெட்டாயிரம் ஆகுது. மொத்தமா ஐம்பதாயிரம் இருந்தாத்தான் விளையாடவே முடியும்" என்று பரிதாபமாகப் பேசும் அமிர்தாவுக்கு, சைனா செல்ல நிதி உதவி செய்திருப்பது ஸ்ரீகிருஷ்ணா சில்க்ஸ்.

"நான் தினமும் காலையில மூன்றரை மணிக்கு எழுந்து பயிற்சிக்குப் போறேன். கஷ்டமாகத்தான் இருக்கு. இருந்தாலும் வாழ்க்கையில ஏதாவது சாதிக்கணுமே! 'ரோலர் ஸ்கேட்டிங்' மக்கள்கிட்ட சென்றடையாமப் போனாலும், என் சாதனைகள் அடுத்த தலைமுறையினருக்கு உதாரணமா இருக்கணும்ங்கிறதுதான் என் ஆதர்சக் கனவு" என்று தன்னம்பிக்கை தவழப் பேசுகிறார், பதினொன்றாவது படிக்கும் அமிர்தா.

- **செந்தில்**

படம் : **ஷிவ்**

ESTD : 1959 ஸ்ரீ குரு ராகவேந்த்ராய நமஹ Phone : 28444538

**புனித யாத்திரை** **47 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்** 28442850

ஸ்தாபகர் : **வி.சுப்பாராவ்** உரிமையாளர் : **எஸ்.பத்ரி.** செல் : 9444019151

| | |
|---|---|
| **11.08.05**<br>**14.10.05** | : 4 நாட்கள் கொண்ட ஆந்திரா டூர். நெல்லூர், ஸ்ரீசைலம், மந்த்ராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. புஷ் பாக் 2 x 2 சீட் பஸ் கட்டணம் ரூ.**1,650/-** |
| **05.09.05** | : 12 & 22 நாட்கள் கொண்ட பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம் (22 நாட்கள்) ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா ஆகியன. 12 நாட்கள் ரூ.**5,700/-** 22 நாட்கள் ரூ.**8,650/-** |
| **24.07.05**<br>**27.11.05** | : 13 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை. நாசிக், திரியம்பகேஸ்வர், சீரிடி, குஷ்னேஸ்வரம், எல்லோரா, சனிசிங்கணாப்பூர், நாகநாதம், பரலிவைத்தியநாதம், பண்டரிபுரி, பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர், உஜ்ஜயினி ஆகியவை கட்டணம் ரூ.**6,700/-** |
| **04.08.05**<br>**11.11.05** | : 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரை அகமதாபாத், டாக்கூர், பேட்டிதுவாரகா, புஷ்கர், நாகேஷ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், பாலக், வீர்பூர், சோம்நாத், மாத்ருகயா, அம்பாஜி, மவுண்ட்அபு, ஸ்ரீநாத்துவாரகா, காங்ரோலி, துவாரகா, கோமதிதுவாரகா ஆகியன கட்டணம் ரூ.**6,750/-** |
| **17.09.05** | : 15 நாட்கள் கொண்ட சுற்றுலா சிம்லா, குலு மணாலி, டெல்லி, ஆக்ரா, மதுரா, அமிர்சர், வைஷ்ணவதேவி ஆகியன ரூ.**8,000/-** |
| **18.09.05** | : 15 நாட்கள் கொண்ட முக்திநாத் யாத்திரை காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், சித்திரகூடம், பொக்ரா, முக்திநாத் ஆகியன. கட்டணம் ரூ.**8,000/-** (ஹெலிகாப்டர் கட்டணம் தனி ரூ.**10,500/-**) |
| **14.09.05** | : 14 நாட்கள் கொண்ட யாத்திரை ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா ஆகியன கட்டணம் ரூ.**5,700/-** |
| **22.10.05** | : தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல். 12 நாட்கள் கொண்ட பூரி புவனேஸ்வர் கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைம்மிசாரண்யம் ஆகியன. கட்டணம் ரூ.**5,700/-** |
| **29.10.05** | : 8 நாட்கள் கொண்ட காசி, கயா, அலகாபாத் ஆகியன கட்டணம் ரூ.**4,200/-** |

60 நாட்கள் முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய இருப்பதால் 2 மாதங்களுக்கு முன்பே பெயர், வயது, விவரங்களுடன் அட்வான்ஸ் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

*குறிப்பு : காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு அங்கு தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனியாருக்கு உட்பட்டது.*

*மேலும் விவரங்களுக்கு:* **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

**Old No.29, New No.18, ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151**

கிருஷ்ண ஜெயந்தியை

கோலாகலமாக கொண்டாடுங்கள்

எங்களின் சீடை, முறுக்குடன்



கைமுறுக்கு

சீடை

வெல்லச்சீடை

தட்டை

முள்ளுமுறுக்கு

தேன்குழல்



ஆர்டரின் பேரில் கிடைக்கும்

**சுபம் கணேசன்**

***(Marriage Catering Contractor)***

210, St.Mary's Road, Madaveli,
Chennai - 28 Ph. : 24616007 / 24933656

14, East Mada Street, Mylapore,
Chennai - 4 Ph : 24953709

பரபரப்பான விற்பனையில்

**மங்கையர் நாவல்**

அற்புத எழுத்தாளர்

**ரமணிசந்திரன்**

எழுதிய

**உன்னை நான் சந்தித்தேன்**

**புத்தம் புதிய மெகா நாவல்**
**+ சிறப்புச் சிறுகதை**

**8.ஆம் ஆண்டு மலர்**

**ரூ.34/- மதிப்புள்ள பொருட்கள் இலவசம்**

# எஜமானுக்கு நேர்ந்த சிக்கல்!

“அவார்டுக்கென்று படம் வந்துவிட்டால், நேஷனல் டெலிகாஸ்ட் தேசிய ஒளிபரப்பில் எட்டு லட்ச ரூபாய் தருகிறார்கள். அதைத் தவிர சர்வதேச அளவில் கொஞ்சம் விற்றால், படம் எடுத்த காஸ்ட் கவர் ஆகிவிடும்” என்று சாருஹாசன் என்னிடம் விவரம் சொன்னார்.

‘நல்ல ஐடியாவா இருக்கே... நாம்கூட ‘பர்ப்பஸ்ஃபுல் மூவி’ என்ற வகையில் ஒரு படம் எடுத்துப் பார்த்தால் என்ன’ என்ற சிந்தனை என்னுள் ஓடியது.

தொலைக்காட்சித் தொடராக நாங்கள் எடுத்திருந்த, சிவசங்கரியின் ‘ஒரு மனிதனின் கதை’யையே ‘தியாகு’ என்ற பெயரில், ரகுவரனை வைத்துத் திரைப் படமாக எடுத்தோம்.

இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அந்தப் படத்திற்காக பைசாகூட சம்பளம் வாங்கிக் கொள்ளவில்லை.

குறைந்தபட்ச செலவில் படத்தை எடுத்து முடித்தோம். அவார்டுக்குப் படத்தை அனுப்பினோம். துரதிர்ஷ்ட வசமாக டெல்லியில் அந்தப் படத்துக்கு எந்த விருதும் கிடைக்கவில்லை. அவார்டும் இல்லை. ரிவார்டும் இல்லை. எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

படச்சுருளை அப்படியே உள்ளே போட்டிருந்தோம்.

அப்போது ஒரு முறை சிவசங்கரி தற்செயலாக, முதல்வர் கலைஞரைப் பார்த்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது. கலைஞரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, தியாகு படத்தைப் பற்றிய விவரங்களை சிவசங்கரி சொல்லியிருக்கிறார்.

“ரொம்ப நல்லதாச்சே... நாங்க செலவு பண்ணி மது விலக்குப் பிரசாரப் படம் எடுப்பதைவிட, நீங்கள் எடுத்திருப்பதை அரசு வாங்கிக் கொள்ளலாமே” என்றார்.

அவருக்காக தியாகு படத்தை போட்டுக் காட்டினோம்.

முதல்வர் கலைஞர், அரசு உயர் அதிகாரிகளுடன் வந்திருந்து படம் பார்த்தார். எல்லோருக்கும் படம் மிகவும் பிடித்து விட்டது.

அந்தப் படத்தில் ஒரு முன்னுரை போல கலைஞரையே பேச வைத்து, அதையும் ஷூட் பண்ணி ஆரம்பத்தில் அந்தக் காட்சியைச் சேர்த்தோம்.

‘மொத்தம் எவ்வளவு செலவாயிற்று என்று சொல்லுங்கள். அரசு, பணத்தைக் கொடுத்துவிட்டுப் படத்தை வாங்கிக் கொள்ளும்” என்றார் கலைஞர்.

‘கவர்ன்மென்ட்டிடமிருந்து காசு வாங்குவதைவிட, இந்த நல்ல படத்தை மக்கள் பார்க்க வழி கிடைத்தால் அதுவே போதும்’ என்று நானும் தம்பி பாலுவும்



முடிவெடுத்து, "எங்களுக்குப் பணமே வேண்டாம். அரசு இதை உரிய வகையில் ரிலீஸ் செய்தால் போதும்" என்று கலைஞரிடம் சொன்னோம். எங்கள் நல்லெண்ணத்தை கலைஞர் வெகுவாகப் பாராட்டினார். அரசுக்கு அப்படத்தை நாங்கள் வழங்குவதை ஒரு விழாபோல ஏற்பாடு செய்தோம். அதில் கலந்து கொண்டு, படச் சுருளைப் பெற்றுக் கொண்டு உரையாற்றியபோது, "தன்னிடமிருந்த மகாகவி பாரதியாரின் பாடல்கள் உரிமையை அரசுக்கு ஏவி.மெய்யப்ப செட்டியார் அவர்கள் இலவசமாக வழங்கியதை, இப்போது தம் செயல் மூலம் நினைவுபடுத்துகிறார் சரவணன்" என்று புகழ்ந்துரைத்தார் கலைஞர்.

அந்தப் படத்தை தியேட்டர்களில் 'இலவசமாக வந்து பார்க்கலாம்' என்ற விளம்பரத்தோடு அரசு வெளியிட்டது. ஆனால் பார்க்க மக்கள் வரவில்லை.

"தூர்தர்ஷனில் ஒளிபரப்ப முடியுமா?" என்று கேட்டதற்கு, படத்தில் 'என்டர்டெயின்மெண்ட் வேல்யூ' இல்லை என்று பதில் கிடைத்தது.

சன் டீவியில் ரைட்ஸ் வாங்கியபோது, இந்தப் படத்தின் உரிமையையும் வாங்கினார்கள். அக்டோபர் 2ம் தேதி மகாத்மா காந்தி பிறந்த நாளன்று 'தியாகு' படத்தை சன் டீவி. ஒளிபரப்பும் என்று நான் எதிர்பார்த்தேன். ஒளிபரப்பவில்லை.


• 'எஜமான்' படத்தில்...

அந்தப் படத்தை எந்த நோக்கத்தோடு எடுத்தோமோ, அந்த நோக்கம் கொஞ்சமும் நிறைவேறவில்லை. படம் அப்படியே தூங்கிக் கொண்டிருக்கிறது. எங்களின் உண்மையான உழைப்பு வீணாகிப் போனது.

'தியாகு' என்ற நல்ல படத்தை - மதுவிலக்குப் பிரசாரத்தை அருமையான கதை வடிவில் கொண்ட ஒரு விழிப்புணர்வுத் திரைப்படத்தைத் தயாரித்தோம் என்கிற மகிழ்ச்சி ஒருபுறம். தயாரித்து என்ன பயன். கடை விரித்தோம்... கொள்வாரில்லையே என்ற ஏமாற்றம் இன்னொரு புறம்.

இப்படியொரு அனுபவத்தை வேறு எந்தப் படமும் எனக்குத் தந்ததில்லை.

அதேபோல் 'எஜமான்' படம் பற்றிச் சொன்னேன் இல்லையா? அந்தப் படம்

## புள்ளி விவரப் புலி!

தீபாவளியன்று தி.நகரில் ஒரேயொரு நகைக்கடை முன் குவியும் கும்பலைவிட குறைவான மக்களைக் கொண்டிருக்கும் அதிசய நாடு வாடிகன் சிட்டி. மக்கள் தொகை எண்ணிக்கை போன மாதம் வரையில் வெறும் 921தான். வருடத்திற்கு 0.01 சதவிகிதத்தில் இந்த எண்ணிக்கை 'அதிகரித்துக் கொண்டிருக்கிறது'. பிப்ரவரி 11, 1929ல் இத்தாலியிடமிருந்து சுதந்திரம் அடைந்தது வாடிகன். இந்த குட்டி நாட்டில் 1 ரயில்வே நிலையமும் 93 இன்டர்நெட் சென்டர்களும் உள்ளன. வாடிகன் நகர போப்பை கிட்டத்தட்ட 1 பில்லியனுக்கு அதிகமான கத்தோலிக்கர்கள் வழிபட்டு வருகிறார்கள்.



தந்த அனுபவமும் மிக சுவாரஸ்யமானது. இப்படத்தின் படப்பிடிப்பை நாங்கள் ஆந்திராவில் நடத்தினோம். அவுட்டோர் ஷூட்டிங்குக்கு இருபத்தெட்டு லட்ச ரூபாய் என்று போட்ட பட்ஜெட், சில இடங்களில் பிளானிங் சரியாக அமையாததால், ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேலே போகத் தொடங்கி சிக்கலாகியது. நாங்கள் விநியோகஸ்தர்களிடம் எவ்வளவு பேசுகிறோமோ, அதற்கு மேல் வாங்குவதில்லை என்பதில் உறுதியாக இருப்போம். எனவே அதிகச் செலவை ஈடுகட்ட, நான் எங்கள் டிஸ்ட்ரிப்யூட்டர்களை நாடவில்லை.

இந்தியன் வங்கியின் சேர்மனாக அப்போது இருந்த எம்.கோபாலகிருஷ்ணன் அவர்களைத் தொடர்பு கொண்டோம். எங்கள் நிலைமையை விளக்கி, எங்கள் பணத்தேவையின் அவசரத்தை அவருக்குப் புரிய வைத்தோம்.

"இருபத்திரண்டு லட்ச ரூபாய் கடன் தருகிறேன். நாளைக் காலை மதியத்திற்கு மேல் ஆபீஸுக்கு வரச் சொல்லுங்கள்" என்றார் கோபாலகிருஷ்ணன்.

அவர் எங்களுக்குக் காலத்தினால் செய்த மாபெரும் உதவி அது.

'எஜமான்' கதை மிகவும் அன்னியோன்னியமான கணவன்-மனைவி கதை. ஆனால் அதில் ஒரு பெரிய தவறு நடந்து விட்டது.

அவ்வளவு அன்பான மனைவி, தன் வயிற்றில் தலையணையைக் கட்டிக்கொண்டு புருஷனை ஏமாற்றுவதுபோலவும், வாணவராயர் காலடி பட்ட இடத்தில் வேறு யாரும் நடக்க மாட்டார்கள் என்பது போலவும் கதை போனது. ஆனால் கிளைமாக்ஸ் காட்சியில் அந்தக் காலடி விஷயத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை. இப்படிச் சில தவறுகள் அந்தப் படத்தில் இருந்தன. படம் வெளியானதும் முதலில் வந்த ரிப்போர்ட்டுகள் சாதகமாக இல்லை. சில ஏரியாக்களில் படம் சரியாகப் போகவில்லை.

ஆனால் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, திலகவதி என்ற பெண் எழுதிய கடிதம் வித்தியாசமாக

இருந்தது.

திலகவதி தபால் இலாகாவில் வேலை பார்த்து வந்தார்.

"எஜமான் படம் பார்த்தேன். ரொம்ப அருமை. வாணவராயர் மாதிரி ஒரு மாப் பிள்ளை கிடைத்தால், நான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்று அவர் தம் கடிதத்தில் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தை படத்துக்கான விளம்பரத்தில் பயன்படுத்திக் கொள்ள விரும்பினோம்.

ஆனால், அதை அவரது அனுமதி யோடு செய்ய வேண்டும் என்று விரும்பி, எங்கள் விளம்பர மேலாளர் அர்ஜுனன், ஷண்முகம் ஆகியோரிடம் 'நீங்கள் போய் திலகவதியைக் கண்டு பேசி, அவர் கடி தத்தில் எழுதியிருந்த வார்த்தைகளை விளம்பரத்தில் பயன் படுத்திக் கொள்ள எழுத்துபூர்வமாக அனுமதி வாங்கி வந்து விடுங்கள். புகைப்படமும் எடுத்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினோம்.

இவர்கள் அவரது வீட்டுக்குப் போய் காத்திருந்தார்கள். அந்தப் பெண் வரு வதற்குத் தாமதமாகி யது. அவரது அப்பா ஒரு போஸ்ட் மாஸ்டர். அவரும் அப் போது வீட்டில் இல்லை. அந்தப் பெண் வந்தவுடன் விஷயத்தைக் கேட்டதும், 'இப்படி விளம்பரத்திலெல்லாம் நான் வந் தால் அப்பா கோபப்படுவார்' என்று தயக் கம் காட்டினார். ஆனால் உள்ளுக்குள் விருப்பம் இருந்தது. இரவு பதினொரு மணிக்கு திலகவதியின் அப்பா வந்தார். பேசினார்கள். 'தாராளமாப் போடுங்க' என்று அனுமதி வழங்கியதுடன், அவரும் தன் மகளின் ஒரு புகைப்படத்தைக் கொடுத்தார்.

எஜமான் விளம்பரத்தில் அந்தக் கடிதம் பெரிதாகப் பேசப்பட்டது. படம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

இன்னொருவர் வைத்தீஸ்வரி போன்ற பெண்ணை தாம் மணக்க விரும்புவதாக எழுதியிருந்தார்.

அந்த இரண்டு கடிதங்களையும் மாற்றி மாற்றி விளம்பரங்களில் பயன்படுத்தி னோம். பெண்கள் மத்தியிலும் இந்த விளம்பரம் பாப்புலரானது. ரஜினிகாந்த் ரசிகர்களுக்கு எஜமான் படம் அவ்வள வாகப் பிடிக்கவில்லை என்றாலும், பொது வான ரசிகர்களின் ஆதரவினால் படம் 'பிக்-அப்' ஆனது.

இந்த விளம்பரங்களால் ஒரு கல்யா ணம் கூட முடிந்தது. மணமக்களுக்கு அன் பளிப்பாக ஒரு தொகையை மகிழ்ச்சி யுடன் அனுப்பி வைத்தோம். முதலில் கடிதம் எழுதிய பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாயிற்று. 'எஜமான்' பட விளம்பரம் ஏதோ 'மேரேஜ் ப்யூரோ' போல ஆகிவிட் டது.

• 'தியாகு' படச் சுருள் வெளியீட்டு விழாவில்...



'எப்படியோ படத்தைத் தேத்திட்டீங்க' என்று என்னிடம் ரஜினி சொன்னார். "இல்லையில்லை. படம் நல்லாத்தான் போச்சு" என்றேன். 'எஜமான்' வெள்ளி விழா கண்டது.

வெள்ளி விழா நிகழ்ச்சியின் போது, நான் எழுதிய 'முயற்சி திருவினையாக்கும்' புத்தகத்தைப் பாராட்டி ரஜினி, என் சகோதரர் பாலு, இயக்குனர் எஸ்.பி.முத்து ராமன் ஆகியோர் சேர்ந்து, எனக்கு ஒரு வெள்ளிக் கலசம் நினைவுப் பரிசளித்து என்னை கௌரவப்படுத்தினார்கள். எனக்கு ஒரு சர்ப்ரைஸ் ஆக இருக்க வேண்டும் என்று அவர்கள் அப்படிச் செய்ததாக பிறகு தெரிந்து கொண்டேன்.

(தொடரும்)

# நடக்குமென்பார்;

## மேஷம்

நினைத்தது நடக்கும் வாரம். புத்திர வழியில் சந்தோஷமான காரியம் கைகூடும். குழந்தைகள் பற்றிய மனக் கவலை தீரும். புதுத் தொழில் துவங்க அருமையான நேரம். மாணவ - மாணவிகளுக்குப் படிப்பில் மேன்மை கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். பூர்வீகச் சொத்து விஷயத்தில் இதுநாள்வரை இருந்து வந்த சிக்கல் விலகும். வண்டி வாகனம் வாங்க சிறந்த காலம். மனநிறைவான வாரம். குரு வழிபாடு செய்து வரவும்.

## ரிஷபம்

தொட்டது எல்லாம் வெற்றி தரும் வாரம். திருமணக் காரியம் நடக்கும். புத்திரப்பேறு ஏற்படும். நண்பர், உறவினர் வழியில் நற்பலன் கிடைக்கும். வீடு வாசல் வாங்க ஏற்ற நேரம். குழந்தைகள் வழியில் நற்பலன் கிட்டும். கலைஞர்களுக்கு நன்மைகள் சேரும். ராகு / கேது வழிபாடு செய்யவும்.

## மிதுனம்

ஆஸ்திகள் வாங்க முயற்சிக்கலாம். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். புத்திர பாக்கியம் ஏற்படும். வீடு, தொழில் வழியில் இடமாற்றம் வரலாம். வியாபாரிகள் தொழிலை அபிவிருத்தி செய்ய நல்ல நேரம். திருமணக் காரியம் நடக்கும். வாக்கு, தனம் மேன்மை ஏற்படும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். குரு / ராகு / கேது வழிபாடு சிறந்தது

## கடகம்

இந்த வாரம் பொன்னான வாரம். வாக்கு, தனம் மேன்மை, படிப்பில் நற்பலன் ஏற்படும். தெய்வ தரிசனம் கிட்டும். வியாபாரிகளுக்குத் தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மாறும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். வீடு வாசல் வாங்க நல்ல நேரம். திருமணம் தடைப் பட்டு வந்தவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலருக்கு அயல் தேசம் போகும் வாய்ப்பு ஏற்படும். குரு / சனி / ராகு / கேது வழிபாடு சிறந்தது.

## சிம்மம்

ரொம்பவும் நல்ல காலம். நல்ல மதிப்பும் மேன்மையும் கிட்டும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. திருமணக் காரியம் நடக்கும். ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். கைப்பொருள் மீது கவனம் தேவை. ஜாமீன் போடக்கூடாது. உத்தியோகஸ்தர்களுக்கு இட மாறுதல் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. ராகு / கேது / சனி / வழிபாடு உத்தமம்.

## கன்னி

அனைத்திலும் வெற்றி கிட்டும். வருமானப் பெருக்கமும், வேறு வேலைக்கு இடம் மாறி செல்லும் வாய்ப்பும் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும். சிலர் வெளிநாடு செல்வார்கள். வியாபாரிகளுக்குப் பொருளாதாரம் மேன்மை அடையும். புதிய தொழில் துவங்கலாம். குழந்தை பாக்கியம் ஏற்படும். மனக்குழப்பம் நீங்கி நற்பலன் கிடைக்கும். வீடு வாசல் வாங்க ஏற்ற காலம். ராகு / கேது / குரு வழிபாடு செய்யவும்.

## துலாம்

சுமாரான வாரம். உத்தியோகத்தில் இட மாறுதல் கிடைக்கும். சிலருக்குப் பணிமாற்றம் ஏற்படலாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். சிலர்

தஞ்சை பரத்வாஜ்

# நடக்கும்!




புண்ணிய ஸ்தலம் செல்வார்கள். சுபச் செலவு ஏற்படும். நீண்ட நாள் முடிவு பெறாமல் இருந்த வழக்கு முடிவுக்கு வரும். சிலருக்கு அயல்நாட்டு அழைப்பு கிட்டும். குரு / சனி வழிபடுதல் நலம்.

## விருச்சிகம்

சிறப்பான வாரம். புதிய ஆடை ஆபரணங்கள் சேரும். திருமணக் காரியம் கைகூடும். புதிய வீடு வாசல் வாங்க ஏற்ற காலம். தொழில் ரீதியில் நல்ல முன்னேற்றம் கிட்டும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு மனஸ்தாபம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கலாம். குழந்தைப் பேறு உண்டாகும். ராகு / கேது வழிபடுதல் நலம்.

## தனுசு

வேலையில் மாற்றம் வரும். வேலைப் பளு அதிகமாக இருக்கும். வியாபாரிகளுக்குத் தொழிலில் இருந்த மந்த நிலை விலகும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. திருமணக் காரியம் கைகூடும். வெளியூர் மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். தொழில் செய்பவர்கள் நிதானமாகச் செயல்படவும். செலவுகள் மிகுந்த வாரம். குரு / சனி / ராகு / கேது வழிபடுதல் நலம்.

## மகரம்

நினைத்தது நடக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள், வீடு, வாசல் வாங்கும் யோகம், புதிய தொழில் அனைத்தும் கை கூடும். தெய்வ அனுகூலம் ஏற்படும். சிலருக்குத் தொழில் ரீதியில் நல்ல மாறுதல் கிடைத்து நல்ல வருமானம் கிட்டும். வியாபாரிகள் நற்பலன் அடைவார்கள். கலைஞர்களுக்கு நற்பலனை அளிக்கும். மாணவ - மாணவிகள் மேல் படிப்பு படிக்க ஏற்ற காலம்.

## கும்பம்

திடீர் பதவி, பட்டம், புகழ் தேடி வரும். கடன், வழக்கு தீரும். ஆரோக்கியத்தில் மேன்மை கிட்டும். கொடுக்கல்-வாங்கலில் சிக்கல் தீரும். திருமணம் கைகூடும். கைப்பொருள் மீது கவனம் தேவை. கணவன்-மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு இட மாறுதல் ஏற்படும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். குரு / ராகு / கேது வழிபடுவது நலம்.

## மீனம்

உத்தியோகத்தில் இட மாறுதல்

# பரத்வாஜ் பதில்கள்

**● ஸ்ரீ அனந்தகிருஷ்ணன், அகமதாபாத்**

**என் இரண்டாவது மகனுக்கு 35 வயதாகிறது. இன்னும் திருமணம் கைகூடவில்லை. எப்போது திருமணம் நடக்கும்? பரிகாரம் தேவையா?**

உங்கள் மகனுக்கு இன்னும் ஓராண்டுக்குள் திருமணம் கைகூடும். தெற்கு / மேற்கு திசையிலிருந்து, பெண் அமையும். உறவில் அமையாது. பரிகாரமேதும் தேவையில்லை.

**● எஸ்.சேகர், சென்னை-26**

**நான் சொந்தத் தொழில் செய்வது நல்லதா? திருமணம் எப்போது?**

உங்களுக்கு சொந்தத் தொழில் செய்யும் யோகம் குறைவாகவே உள்ளது. ஆதாயம் தருவதாக இல்லை. 39வது வயதில் உங்களுக்குத் திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்கு அருகில், ஒரே உடன்பிறந்தவர் உள்ள, பெண் அமையும்.

**● இந்திரா, சென்னை**

**என் மகளுக்கு இசையில் நல்ல தேர்ச்சி இருக்கிறது. இசைத் துறையில் இறங்கினால் அவள் சிறந்த நிலைக்கு வர முடியுமா? படிப்பைத் தொடர்வதே நல்லதா? திருமணம் எப்போது?**

உங்கள் மகளுக்கு இசைத் துறையில் இன்னும் ஓராண்டுக்குப் பின் பெயரும், புகழும் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. மேற்படிப்புக்கான யோகமும் உள்ளது. 23 வயதில் திருமணம் அமையும்.

**● எஸ்.எஸ். சென்னை-4**

**வெளிநாட்டிலிருக்கும் என் மகனுக்கு 37 வயதாகிறது. இது வரை திருமணமும், நல்ல வேலையும் கை கூடவில்லை. சொந்தமாகத் தொழில் செய்யலாமா? திருமணம் எப்போது?**

உங்கள் மகனுக்கு இன்னும் ஓராண்டுக்குள் திருமணம் கூடும். ஜாதகரைவிட அதிகம் படித்த பெண்ணாக, இரு உடன்பிறந்தவர் உள்ள, பெண்ணாக அமையும். உறவில் அமையாது. இவருக்கு அயல்தேசத்தில் வாழும் யோகம் அதிகமிருப்பதால், அங்கேயே நல்ல வேலை கிடைத்து, திருமண வாழ்வையும் தொடருவார். நிர்வாகத் துறையில் நல்ல பணி கிடைக்கும். திருமணமான பிறகே மதிப்பு, புகழ், செல்வாக்கு ஆகியன உயரும். சொந்தத் தொழிலில் யோகம் அத்தனை உயர்வைத் தரும் ஜாதக அமைப்பு இல்லை.

**● பெயர் வெளியிட விரும்பாத வாசகி, கோவை - 35**

**என் தம்பி மகளுக்கு 10 வருடங்களாக முயன்றும் திருமணம் கூடி வரவில்லை. உறவில் அமையக் கூடிய வாய்ப்பு உண்டா? திருமணம் எப்போது?**

உங்கள் தம்பி மகளுக்கு இன்னும் 6 – 8 மாத காலத்துக்குள் திருமணம் கைகூடும். வெளிநாட்டு வரன் அமையும் வாய்ப்பிருக்கிறது. தெற்கு / மேற்கு திசையிலிருந்து, வரன் அமையும்.

கிடைக்கும். வாக்கு வன்மை மேல் ஓங்கும். வீடு வாங்க ஏற்ற நேரம். திருமணம் கைகூடும். வழக்கு வெற்றி பெறும். புதிய தொழில் துவங்கலாம். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷமான காரியம் நடக்கும். நண்பர்கள், உறவினர்கள் வழியில் நற்பலன் கிடைக்கும். எதிர்பாராத தனவரவு காத்திருக்கிறது. ராகு / கேது வழிபடுவது நலம். ○

# இமேஜ்

ஆனந்த்

பெரிய டைரக்டரும், தயாரிப்பாளருமான சிவசங்கர் முன்பு, நடிகர் ஸ்ரீராஜ் அமர்ந்திருந்தார். ஸ்ரீராஜை அறிமுகப்படுத்தியதும், தற்போது ஸ்ரீராஜை வைத்து பெரிய பட்ஜெட்டில் படமெடுத்துக் கொண்டிருப்பதும் சிவசங்கர்தான்!

"என்ன ப்ராப்ளம் ராஜ்...?"

"சார்... எனக்கு நீங்கதான் குரு... அப்பா... கடவுள்... எல்லாம். முக்கியமான ஒரு விஷயத்துல உங்க அட்வைஸ் வேணும் சார்."

"சொல்லுப்பா..."

"எல்லாம் என் மனைவியைப் பத்தித்தான் சார்... சுத்தமா அவ சரியில்லை. என்னோட கேரக்டருக்கும், தொழிலுக்கும் அவ சரியா கோவாப்பரேட் பண்றதில்ல. வெளிலதான் சார் நான் பெரிய ஸ்டார். வீட்ல, சொல்லவே வெக்கமாயிருக்கு. ஒவ்வொரு நிமிஷமும் நரகமா போய்க்கிட்டிருக்கு! ஸோ, அவள டைவர்ஸ் பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். உங்க அபிப்ராயம் என்ன சார்?"

சிவசங்கர் கொஞ்ச நேரம் யோசித்தார்!

"எனக்கு உன்னோட நிலைமை புரியுது ராஜ். பட், இதுல சட்டுனு முடிவு எடுக்கக் கூடாது.. மனுஷங்க மனசு மாறுவது இயல்புதான். உன் மனைவியும், நல்ல விதமா மாறுவதும் நடக்கக் கூடியதுதானே...? உனக்கு மொதல்ல குழந்தை பொறக்கட்டும்... தள்ளிப் போடாத.. அப்புறம் பாரு... எதுக்கும் ஒரு வருஷம் பொறுத்துக்க.. அப்புறம் மறுபடியும் இதப் பத்திப் பேசலாம்... என்ன?"

சிவசங்கரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, ஸ்ரீராஜ் மௌனமாக எழுந்து சென்றார்.

அன்று இரவு... சிவசங்கரின் மனைவி கேட்டாள்....

"பரவாயில்லயே... நல்லாத்தான் அட்வைஸ் பண்ணியிருக்கிங்க!"

அதற்கு சிவசங்கர் சிரித்துவிட்டுச் சொன்னார்.

"அடிப்போடி பைத்தியம்... இப்ப நான் அது மாதிரி அட்வைஸ் பண்ணலேன்னா, அப்புறம் பேப்பர்ல 'ஸ்ரீராஜ் டைவர்ஸ்'னு நியூஸ் வரும். அதனால இப்ப நான் ராஜை வைச்சு எடுக்கற படத்துக்கு பெரிய பாதிப்பு வரும். படத்துல ராஜ் நல்ல புருஷனால்ல வர்றான்...!" ○



# நடிகைகள் வேண்டாம்!

இன்றைக்கும் ஹேமாவை சினிமாவில் நுழைக்க பாரதி ராஜா முயற்சித்துக் கொண்டுதானிருக்கிறார். ஆனால் 'ம்ஹூம்... ஆளை விடுங்க' என்று எவர் அழைப்புக்கும் இவர் மசிவதாக இல்லை.



இளமை கல்கி

ஹேமா தமிழ்நாட்டின் முன்னணி மாடல்களில் ஒருவர். "போன வருஷம் தீபாவளியின்போது எட்டு விளம்பரங்கள் பண்ணினது நான்தான்" என்று சாதனைப் பட்டியல் வாசிக்கிறார்.

சரி, ஏன் சினிமா வேண்டாமாம்? "நான் மாடலிங்குல நுழைஞ்சதே அப்பாவுக்குப் பிடிக்கலை. அப்படியிருக்கும்போது, சினிமான்னா கேட்கவே வேண்டாம். அதோடு பெரிய பேர், புகழ், பணம் எதுவும் எனக்குத் தேவையில்லை. இப்படியே அமைதியா வாழறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு" என்பவருக்கு, சமீபகாலமாக சினிமா நடிகைகள் விளம்பரங்களில் நடிக்க வருவது பிடிக்கவேயில்லை.

"ஒரு நடிகையைக் கூப்பிட்டு வந்து 'ஜங் ஜங்'னு குதிக்க விடறதுதான் இன்னைக்கு விளம்பரம்னு ஆயிடுச்சு. டாப் மாடல்களை நடிகைக்கு அடுத்த படியாத்தான் உபயோகப்படுத்துறாங்க. நாங்க இந்தத் துறைக்குன்னு ஸ்பெஷலா இருக்கும்போது நடிகைகள் ஏன் வரணும்? பெரும்பாலான மாடல்ஸுக்கு இந்தப் போக்கு பிடிக்கலை" என்று முகம் சிவந்தவரிடம், 'கார்த்திக் பற்றிச் சொல்லுங்களேன்' என்றதுதான் தாமதம்... மேலும் முகம் சிவந்தார், நாணத்தால்.

"ஃப்ரெண்ட்ஸா இருந்த நாங்க நாளடைவுல காதலர்களாயிட்டோம். மாடலிங் துறையிலிருக்கிறவரைக் காதலிச்சதும் அப்பா ஷாக்காயிட்டார். ஆனாலும் இரு வீட்டார் சம்மதத்தோட எங்க கல்யாணம் இனிதே நடந்தது" என்று சந்தோஷம் பொங்குகிறார் ஹேமா.

- ச.ந.கண்ணன்



* இதுவரை மூன்று வேடங்களில் தான் நடிக்கிறார் என்று கூறப்பட்ட 'காட்ஃபாதரில்' அஜீத்துக்கு உண்மையில் நான்கு வேடங்கள்.

* 'ஆதி' படத்தில் மூன்று பாடல்களைப் பாடுகிறார் விஜய்... அவற்றில் இரண்டு குத்து பாடல்கள்.

* நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமது குருநாதர் வஸந்தின் இயக்கத்தில் நடிக்க உள்ளார் சூர்யா.

* பிரசாந்த் நடிக்கும் 'காட்டான்' படத்துக்குப் பிறகு, அவரை 'சின்னமம்பட்டியான்' என்றே அழைப்பார்களாம். அந்த அளவுக்கு வித்தியாசமான கேரக்டராம்.

# சந்தியாவுடன் காதலா?



* எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் மணிரத்னத்தின் அடுத்த படத்துக்கு வசனம் எழுத உள்ளார்.

* தமிழ் ரசிகர்கள் தன்னை மறந்து விடாமலிருக்க, மீண்டும் தமது தந்தையுடன் இணைந்து நடிக்கிறார் சிபிராஜ். படம்: வேல் வேல்.

* சமீபகாலமாக அடங்கிப் போயிருந்த சந்தியா - பரத் காதல் கிசுகிசு, மீண்டும் துளிர்விட்டுள்ளது. உபயம்: 'காதல்' பட திரைக்கதை நூல் வெளியீட்டு விழாவில் இருவரும் ஒன்றாகக் கலந்து கொண்டது.

* 'பாசக்கிளிகள்' படத்தில் வைரமுத்து, வாலி, பா.விஜய் ஆகியோருடன் கலைஞரும் பாடல் எழுதுகிறார்.

\- கலை



# துட்டு தருவாரா பில்கேட்ஸ்?!

**நா**ம பாட்டுக்கு 'yahoo'வேன்னு மெயிலை மேய்ஞ்சிக்கிட்டு இருப்போம். எவனாவது எதையாவது அனுப்பிட்டு, ஆர்வத்தையோ / பயத்தையோ கிளப்பி, அதே மெயிலை பல பேருக்கு அனுப்பச் சொல்லி, நுரை தள்ள வைச்சிருவான். இப்ப அப்படி கத்திக்கிட்டு இருக்கிற மெயிலோட ஹீரோ பில்கேட்ஸ்...! மேட்டர் என்னன்னா...

'அன்பு நண்பர்களே... இதை வெட்டி மெயில்னு நினைக்காதீங்க. இது பில்கேட்ஸ் உங்களுக்கு தன் சொத்தில் கொஞ்சம் அனுப்பியுள்ள மெயில். ஆம். AOL, மைக்ரோசாஃப்ட்தான் உலகின் பெரிய இணைய கம்பெனிகள். Internet Explorerதான் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ப்ரௌஸர். இப்போது AOL, மைக்ரோசாப்ட் ஒரு பீட்டா சோதனையை நடத்துகிறார்கள். நீங்கள் இந்த மெயிலை மற்றவர்களுக்கு ஃபார்வர்டு பண்ணுவதின் மூலம், உங்களை இருவார காலத்திற்கு, 'நீங்கள் மைக்ரோசாஃப்ட்டைத்தான் உபயோகிக்கிறீர்களா' என மைக்ராசாஃப்ட் கண்காணிக்கும்.

நீங்கள் இந்த மெயிலை ஒருவருக்கு ஃபார்வர்டு பண்ணினால் 245 அமெரிக்க டாலர்கள் உங்களுக்கே! அதை அந்த இரண்டாம் நபர் மற்றவருக்கு ஃபார்வர்டு பண்ணினால், உங்களுக்கு $243.00 அந்த மூன்றாம் நபர், மற்றொருவருக்கு அனுப்பினால் உங்களுக்கு $241.00 கிடைக்கும். இருவார காலம் முடிந்தபின் மைக்ரோசாஃப்ட், செக் அனுப்ப வேண்டிய முகவரியை அறிய உங்களை அணுகும்.

வாழ்த்துகளுடன்
சார்லஸ் எஸ்.பெய்லி'

இதாங்க அந்த மெயில். 'ஆமா, மெய்யாலுமே எனக்கு பில்கேட்ஸ் $4324.44 செக் அனுப்பினாரு'ன்னு சிலர் மெயிலோட தொடர்ச்சியா குரல் கொடுத்திருக்காங்க! அவனவன் 'துட்டு' வருதுன்னு, தன்னோட எதிரிக்கெல்லாம் கூட இப்ப இந்த மெயிலைத்தான் தட்டி விட்டுக்கிட்டுக் கெடக்கான்.

'ஆமா, AOL-ம், மைக்ரோ சாஃப்ட்டும் சேரப்போகுதாம். இது மார்க்கெட்டிங் டெக்னிக். மெய்யாலுமே டாலர் வரும்வே'ன்னு இன்னொரு அங்கிள் சொல்லுறாரு.

அதான், போனவாரம் ஓப்பன் பண்ணுன Internet Explorer-ஐ நாம இன்னும் மூடவே இல்ல. அனுப்பித் தள்ளிக்கிட்டு இருக்கோம். 'இந்தக் கட்டுரையை நாங்களும் படிச்சிட்டோம்'னு பில்கேட்ஸ் அனுப்பப்போற டாலர்ல பங்கு கேட்டு யாரும் வந்து டாதீங்க, ப்ளீஸ்!

\- முகில்

இளைய கல்கி

சென்னை மயிலாப்பூரிலுள்ள லக்‌ஷணா காலரி. கிறிஸ்டபர் ஷர்ஸ்ட்டின் புகைப்படக் கண்காட்சி. அவரின் எல்லா புகைப்படங்களிலும் பிரதான அம்சமாக இருந்தது சுவர்தான். தன் கேமராவுடன் ஜோடி போட்டுக்கொண்டு. வாஷிங்டன், பாரீஸ், கௌதி



# இடைவெளி!

மாலா, ஸ்பெயின், சென்னை என்று உற்சாகமாக பல இடங்களில் சுற்றிவிட்டு. நமக்கு மிகவும் பிடித்த சுவர்களை மட்டும் கேமராவில் விழுங்கியிருக்கிறார்.

கேட்டால் "கட்டடங்களிலும், சுவர்களிலும் மனிதர்கள் தங்கள் அடையாளங்களை விட்டு வைக்கிறார்கள். அந்த அடையாளங்களைத்தான் என் கேமராவில் பதிவு செய்கிறேன்" என்கிறார்.

அட! ஒன்றிரண்டு புகைப்படங்களில் கடுகு சைஸ் மனிதர்கள்கூட இருக்கிறார்களே! மகிழ்ச்சியுடன், "என்ன கிறிஸ்டபர், போனால் போகட்டும்னு இவங்களையும் எடுத்திருக்கீங்களா?" என்றால் புன்னகை செய்கிறார். "நன்றாகப் பாருங்கள்." அட, ஆமாம், அந்த மனிதர்களுக்குப் பின்னால் நீளமாக, சற்று மங்கலாக... அது என்ன? ஓஹோ, குட்டிச்சுவரா? சரிதான் சரிதான்.

— மருதன்




**பூ**ப் போட்ட பாவாடை, தாவணி கட்டிய அந்த இளம்பெண், அழகாய் சம்மணமிட்டுப் பாடிக் கொண்டிருக்கிறாள்... எதிரே அவளுடைய குரு.

"க...ம...தா..." அவர் பாட, அந்த சிஷ்யையும் அப்படியே பாடுகிறாள். ஆனால் மறுவரியைப் பாட முடியாமல் அந்தப் பெண்ணுக்கு ஏதோ உறுத்தல். பாடுவதை நிறுத்தி விடுகிறாள்.

"என்ன ஆச்சு?" என்பது போல அவளைப் பார்க்கிறார் குரு.

"சார், நீங்க பாடறதைப் போலத்தான் நானும் பாடறேன். ஆனால் என்னால உங்களை மாதிரி அழகா பாட முடிய லையே!" கரிய விழிகளில் ஏக்கம் கவிகிறது.

"ஏன் முடியாது? எல்லாம் நன்னா முடியும். சங்கீதத்தை பொறந்தியாரா நினைச்சுக்காதே, உன்னோட குழந்தை மாதிரி நினைச்சுக்கோ... அதை ஆசையாக் கூப்பிடு... ஓடிவரும்... அப்படியே தூக்கி அணைச்சு, உனக்குள்ள வைச்சுக்கோ... பிரியத்தோட கொஞ்சு."

"க...ம...தா..." செல்லக் குழந்தையை உச்சி முகர்ந்து, சீராட்டுகிறாள். குரு சொன்னது உண்மைதான். இசை, இசைந்து வருகிறது. அந்தப் பெண் இன்று பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத் ஆகி, கிருஷ்ணகான சபாவின் 'சங்கீத சூடாமணி' விருதைப் பெறுமளவுக்கு, சங்கீத வானில் சாதனை புரிந்திருக்கிறார்.

**வீ**டெல்லாம் பூங்கொத்துகள்... வாழ்த்து அட்டைகள்...

"இது எனக்கு மட்டுமே கிடைச்ச விருதா நான் நினைக்கலை. என்னைப் பாடகியாக்கணும்ங்கிறதைத் தவிர வேறு எதையுமே நினைக்காத அம்மா சீதா, அதுக்காக ஒத்துழைச்ச அண்ணன்கள், தாய்ப்பறவை, தன்னோட குஞ்சுகளுக்கு ஊட்டுமே, அது மாதிரி பிரியமா சங்கீதம் சொல்லிக் கொடுத்த பாலாமணி டீச்சர், என்னோட குரு லால்குடி ஜெயராமன், என்னுடைய ரசிகர்கள், ஆதரவாளர்கள், என் கணவர், இப்படி நான் நன்றி சொல்ல வேண்டிய அந்தப் பட்டியல் நீண்டுக்கிட்டே போகும்" என்று ஆரம்பித்தார் பாம்பே ஜெயஸ்ரீ.

"மும்பையில இருந்தவரை நிறையப் பேர்கிட்டே கத்துக்கிட்டேன். பரிசெல்லாம் வாங்கினேன். 'பொண்ணு நல்லா பாடறாளே!'ம்பாங்க! ரொம்ப சந்தோஷமா இருக்கும். அப்புறம் சென்னைக்கு வந்து, லால்குடி சார்கிட்டே சங்கீதம் கத்துக்கிட்டபோதுதான், நான் எவ்வளவு சின்னவள்னு உணர்ந்தேன்.

'சும்மா டிராயிங் நோட்டுல, கப்பல் வரைஞ்சு பார்த்துக்கிட்டிருந்த ஒரு சிறுமியை, திடீர்னு டைட்டானிக் மாதிரியான பிரம்மாண்டமான கப்பல்ல ஏற்றி அனுப்பிச்சா, அந்தக் குழந்தைக்கு எப்பேர்ப்பட்ட பிரமிப்பு ஏற்பட்டிருக்கும்? அந்தக் குழந்தையின் நிலைமையில்தான் இப்பவும் இருக்கேன். ஆனால் என் குருவுக்கு என் மீது அசாத்திய நம்பிக்கை. "நீதான் பண்ணணும்... இதுதான் நீ பண்ணணும். இது மாதிரிதான் பண்ணணும்'னு திரும்பத் திரும்பச் சொல்லி, என் வாழ்வின் ஃபுல் ஃபோகஸையும் மியூசிக்கலா மாற்றியவர் லால்குடி சார்தான்." தாம் இன்றைக்கு பெற்றிருக்கும் எல்லாப் புகழையும் குருவுக்கே சமர்ப்பணம் செய்கிறார்.

"சங்கீதம்ங்கிற இனிப்பு எனக்குள்ள கொட்டிக் கிடக்குது. அதை அப்படியே உருட்டிக் கொடுக்க முடிஞ்சா, லட்டு லட்டா உனக்குக் கொடுத்துக்கிட்டே இருப்பேன்" என்பார் அவர்.

அவர் அப்படி உருட்டிக் கொடுத்தது சங்கீதத்தை மட்டுமல்ல; இன்னொரு சந்தோஷத்தையும், என் கணவர் ராம்நாத்!

'எனக்கு சங்கீதத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது' இதுதான் நான் ராம்நாத்திடம் பேசிய முதல் வார்த்தை.

'அது தவிர வேறு எதுவும் எனக்கு வேண்டாம்.' இது அவர் தந்த பதில்!

என் கணவரும், புகுந்த வீட்டு உறவும் பக்கபலமாக நின்று உதவா விட்டால், என்னால் இவ்வளவு தூரம் வந்திருக்க முடியுமா?

"**அ**டாணா ராகத்துல அமைஞ்ச,





• லால்குடி

'மும்மூர்த்தலு' என்கிற கீர்த்தனையை, மூணு நாளா பாடிக்கிட்டிருக்கேன். தலை துவட்டும்போது, சாப்பிடும்போது, காரில் போகும்போதுகூட பாடிக்கிட்டேயிருக்கேன். ஒவ்வொரு முறை பாடும் போதும், ஒரு அழகு, நுணுக்கம், ஒரு கற்பனை புதுசு புதுசா தெரிஞ்சு என்னை அதிசயப்படுத்துது. 'நீ ரொம்ப நினைச்சுண்டியா? என்னை மிஸ் பண்ணிட்டியே?'ன்னு கேலியா கேட்குது. இந்த மாதிரியான சமயங்களில் பாராட்டு, விருது எல்லாம் கிடைக்கும்போது, மனசுக்கு சந்தோஷமா இருந்தாலும், பொறுப்பும் கூடுதலாயிடுது இல்லையா...?'' என்று நெஞ்சில் கை பதித்துச் சிரிக்கிறார்.

# முதல் கனவே... முதல் கனவே!


“என் வாழ்க்கையின் முதல் கனவும் ஒரே கனவும் இசைதான். அந்தக் கனவையும் கொடுத்து, அதை நனவாக்கும் பலத்தையும் கொடுத்த இறைவனுக்கு என் நாத உபாசனையைத் தவிர வேறென்ன தர முடியும்?'' என்று பேசிக் கொண்டிருந்த போது, வாசல் மணி அடித்தது.

கதவைத் திறந்தால்... கையில் சின்ன பன்னீர்ப் பூவுடன் ஒரு குட்டி ரசிகர். ஜெயஸ்ரீயின் ஏழு வயது மகன் அம்ருத்.

"அம்மாதான் என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்'' என்று கட்டிக் கொள்கிறான். பூரித்து நிற்கிறார் ஜெயஸ்ரீ.

— அனு





இன்னாடா இது, ஒற்றன் கைல கட்டோட கிளம்பிட்டானேன்னு பாக்கறியா கண்ணு... ஏற்கெனவே நா ஒருதபா விசிட்டு அடிச்ச அதே ஜி.ஹெச்சை, இன்னொரு தபா விசிட்டு அடிக்கச் சொல்லிப்புட்டாங்க. அதுக்காக போன தபா மாதிரி சொம்மா போனா நமக்கு ஆப்புதான் விழும். அதான் கொஞ்சம் கில்பான்ஸியா இருக்கட்டுமேன்னு, கைல பேன்டேஜ்லாம் போட்டுக்கிட்டு உள்ளே போனேன். ஆமா, எதுக்கு இன்னொரு தபா விசிட்டுன்னு சொல்லவே இல்லியே. அம்புட்டு துட்டு போட்டுக் கட்டுன பில்டிங்குல அங்கங்க விரிசலாயி, அது வழியா தண்ணி கசியுதாமே. அதான் இன்னா மேட்டர்னு வெலாவாரியாத் தெரிஞ்சிக்கினு, அப்பாடியே இந்த 'அஞ்சக் குடு-பத்தக்குடு' இப்போ எப்டிக் கீதுன்னு பார்த்துடுவோம்னுதான் வந்தேன்பா!

புது பவுக இன்னும் அப்படியேதான் கீதுப்பா ஜி.ஹெச்சுல. இந்த விரிசல் மேட்டரு பத்தி அங்க நின்னுக்கினு இருந்த வார்டு பாய் தம்பியாண்ட நைஸா போட்டு வாங்கினேன்... "மொத்தமா நாலு இடத்துல ஒழுவுதுப்பா. ஆனா இதனால நோயாளிங்க யாருக்கும் இப்போ எந்தப் பிரச்னையும் இல்ல. ஒருவேளை இதே மாதிரி நிறைய இடத்துல விரிசல் விட்டா, நிலைமை பேஜாராயிடும். ஆனா இதை அப்படியே சிமெண்ட் வச்சி பூசி மொழுகிட்டாங்க. எல்லாத்துக்கும் காரணம், இந்த காண்ட்ராக்ட்காரங்கதான். இதெல்லாம் பெரிய எடத்து சமாச்சாரம். நீ போயி அந்த ஓ.பி. கியூல நில்லு. அப்பத்தான் காலாகாலத்துல டாக்டர் கிட்ட காட்டிட்டு ஊரு போய்ச் சேர முடியும். தேவையில்லாம மூக்கை நீட்டாதே"ன்னு தகவல சொல்லிப்போட்டு அந்த தொப்பித் தம்பி ஜூட் வுட்டுடிச்சி...

அப்படியே நைஸா இந்தக் கட்டோடயே தோல் சிகிச்சை பிரிவாண்ட போனேன். ரொம்ப பாவம்பா, அங்க இருக்குற பேஷண்ட்டுங்க. அவங்களுக்கு செய்ய வேண்டியதை இந்த நர்சுங்களும், வார்டு பாய்களும் சொம்மா இட்டுக்கினே செய்றாங்களாம். "ஏதோ கவனிக்கணும்னு எதிர்பாக்கறாங்கபோல. அந்த அளவுக்கு நம்ம கைல காசு இருந்தா நாங்க எதுக்கு இங்க வந்து வாங்கிக் கட்டிக்கறோம். ஆனது ஆச்சு. இன்னும் பத்து நாள் பொழுது, ஓடியே போயிடலாம்" என்று ஒரு பெருசு, சின்னப் பையனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, "தம்பி.. நீ சோத்தாங்கை பக்கமா திரும்பி, அங்கபோய்க் கேளு, எலும்பு சிகிச்சை பிரிவு எங்க இருக்குன்னு சொல்வாங்க. இங்க ரொம்ப நாழி நிக்காத. ஏன்னா நீ ஓ.பி. பேஷண்ட்"ன்னார். இன்னாது... நான் ஓ.பி. பேஷண்டா? ஹி... ஹி! அங்கிருந்து மெல்ல ஜகா வாங்கினேன்.

"இன்னா சாரே... இங்க எலும்புக்




# "சுயநலத்தோடுதான் டிப்ஸ் தர்றோம்!"

கின்னே பேங்கு கீதாமே. அத்தைப் பத்தி உனக்கு எதுனா தெரியுமா?"ன்னு ஒரு ஜிப்பா ஆசாமிகிட்ட கேட்டதுக்கு அவரு இன்னா சொல்றாரு தெரியுமா? "ஆமாமா... அப்படி ஒண்ணு இருக்கு துன்னு மட்டுந்தான் எனக்குத் தெரியும். ஆனா அதை எப்படி அப்ரோச் பண்ற துன்னு சரியா தெரியல. ரொம்ப சிக்க லான கேஸா இருந்தா மட்டும் அதுக்கு ஏற்பாடு பண்ணுவாங்களாம். அதுக்கே ஏதாவது கவர்மெண்ட்டு டாக்டரு சிபா ரிசு தரணும். நாமளே நேரடியா வந்து பார்க்கறது ரொம்ப சிரமம். இப்பத்தான் எல்லாத்துக்கும் ரெகமண்டேஷன் தேவையாயிருக்கே". அவருகிட்டருந்து நகர்ந்தா, ஒரு நாலஞ்சு பேரு ரொம்பக் குஷியா வந்துக்கினு இருந்தாங்க. என்னான்னு விசாரிச்சா, அப்பண்டிஸ் ஆபரேஷன்னு ஒண்ணு கீதாமே... அதை செய்துக்கறதுக்காக வந்தாங்களாம். அட்மிட் ஆகறதுக்கு ரொம்பப் படாத பாடு பட்டுட்டாங்களாம். அவங்க ஏரியா கவுன்சிலர், யார் யாரையோ பார்த்து, அட்மிஷனுக்கு ஏற்பாடு பண்ணினாராம். "அவரு எப்படியோ அட்மிட் பண்ணிப் புட்டாரு. ஆனா அன்னிலருந்து இன் னிக்கு டிஸ்சார்ஜ் ஆவுற வரைக்கும், ஏகப் பட்ட ரூபா டிப்ஸ் கொடுத்தே கரைஞ் சிடுச்சி. என்னைக் கேட்டா இதுல ஒண் ணும் தப்பு இல்ல. நாமளும் ஒரு சுயநலத் தோட நம்மளை நல்லபடியா கவனிக்கணு மேன்னுதானே தர்றோம்? அதனாலதான் கிளம்பறப்போகூட ஆளுக்கு பத்து ரூபான்னு பதினைஞ்சு பேருக்கு கொடுத் துப்புட்டு கௌம்புறோம். நீ கூட கொஞ்சம் துட்டு தள்ளினா, கட்டை சீக்கிரமா பிரிச் சனுப்பிடுவாங்க"ன்னு நமக்கும் அட் வைஸ் கொடுத்தபடி கிளம்பினாங்க!

- ஒற்றன்

# நீங்கள் கேட்டவை

● ஏ.எம். பழனிச்சாமி, சிங்காநல்லூர்

*? எந்த வங்கியின் செயல்பாடு மகிழ்ச்சியைத் தருகிறது?*

! நமது ரிசர்வ் வங்கிபோல பிரேஸில் நாட்டிலும் உண்டு. அங்கு, ஆளுயரமும் பல நூறடி நீளமும் கொண்ட அதி நவீன சுரங்கப்பாதை அமைத்து, கோடிக்கணக்கான டாலர்களை மர்ம மனிதர்கள் சமீபத்தில் அபேஸ் பண்ணிட்டுப் போய்ட்டாங்க. இதே அளவுக்கு இதுவரை மௌனியாக இல்லாததால், நமது ரிசர்வ் வங்கி மகிழ்ச்சி அளிக்கிறது!



• ஆயிரம் வேண்டும்!

● இரா.சக்கரபாணி, மதுரை - 7

*? 'சொத்துக் குவிப்பு வழக்கில் சட்டப்படி குற்றமற்றவர்கள் என்று நிரூபித்து வெளியே வருவோம்' என்று சூளுரைத்தவர்கள், இப்போது வழக்கிலிருந்தே தங்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்டது ஏன்...?*

! சட்டத்தின் ஓட்டைகளில் புகுந்து புறப்பட்டு வெளியே வந்தாலும், குற்றமற்றவர் என்று தீர்ப்புக் கிடைத்துவிட்டதாகத்தான் பிரசாரம் நடக்கும்.

தந்திரம் 1: முதலில் இரண்டு வழக்குகளையும் சொத்துக் குவிப்பு + லண்டன் ஹோட்டல்கள் - சேர்த்து விசாரிக்க வேண்டும் என்றார்கள். இதற்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஒப்புதல் அளிக்க, தந்திரம் 2 அமலாயிற்று: சபாநாயகர் அனுமதி பெறப்படவில்லை என்று காரணம் காட்டி, வழக்கிலிருந்தே விடுவிக்கக் கோருகிறார்கள். விளைவு: மறுபடி உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் மேல் முறையீடு!

● பி.கே.வரதராஜன், ஹைதராபாத்

*? ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், சுவாமி ஜக்கி வாசுதேவ், சுகபோதானந்தா போன்றவர்கள் மதபோதகர்களா...? இவர்களால் அதிக நன்மையடைந்தவர்கள் கார்பரேட்டுகளா? எம்.என்.ஸிக்களா? பொது மக்களா?*

! இவர்கள் யாருமே தங்களை மதபோதகர்கள் என்று கூறிக்கொள்வதில்லை. மூவருமே, மன

• மீட்புப்......

## 'நியூ' தடைசெய்யப்பட்டது ஆச்சர்யம்தானே?



# - தராசு



• இதற்குத்....



• ...தந்திரம்

அமைதி இழந்த இன்றைய அழுத்தம் நிறைந்த உலகில், மக்களுக்கு அதைச் சுட்டிக்காட்டி மீட்டுத்தர, உதவப் புறப்பட்டவர்கள். பல லட்சம் பொது மக்கள், சில ஆயிரம் கார்ப்பரேட்கள், சில நூறு எம்.என்.ஸிக்கள் பயனடைந்துள்ளன.

• **க.நா.இராஜேஸ்வரன்,**
**மொரட்டுப்பாளையம்**

**? அயோத்தி, மதுரா, காசி, தாஜ் மஹாலை தீவிரவாதிகளின் தாக்குதலி லிருந்து பாதுகாக்க ரூ.56 கோடியில் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது பற்றி...?**

! இன்னும் மதுரை மீனாட்சி கோயில், சார்மினார், திருவண்ணாமலை, ராமேஸ்வரம், அமிர்தசரஸ் என்று கணக்கிலடங்காத புனித ஸ்தலங்களைப் பாதுகாக்க பணத்துக்கு எங்கே போவதாம்...? 56 கோடி பாதுகாப்பையும் தாண்டி அபாயம் வராதிருக்க வேண்டுமானால், அமைதி / நல்லுறவு / மதநல்லிணக்கத்துக்குத்தான் முயற்சி செய்ய வேண்டும்.

• **ஜானகி சுப்ரமணியம், திருப்பூர்**

**? 'ஆன்லைன்' செய்த மாயத்தால் இன்றைய வீட்டுப்பெண்கள் பங்கு முதலீட்டிலும் கலக்கி வருவது பற்றி...?**

! பங்கு முதலீட்டில் கலக்கி வருவது குறித்து மகிழ்ச்சி; பங்குச் சந்தை ஆளைக் கவிழ்த்து விட்டால், மனம் கலங்காமல் இருக்கும் பக்குவம் பெற்றால் அதை விட மகிழ்ச்சி!

• **லெ.நா.சிவகுமார்,**
**சென்னை-33**

**? தமிழ்நாடு முழுவதும் முன்னணி தியேட்டர்கள் டிஜிட்டல் மயமாக்கப் படுவதன் மூலம் திருட்டு வி.ஸி.டி ஒழிந்து விடுமல்லவா...?**

! அந்தப் பிரச்னை இல்லாட்டா வேறு புதிய பிரச்னை உருவாகும். விஞ்ஞான முன்னேற்றங்கள் எப்போதும் 'வாலு போச்சு - கத்தி வந்தது டும் டும்' கதை தான்.


• **அ.சுகுமார், காட்டுக்கானூர்**

**? 'நியூ' படம் தடை செய்யப்பட்டதில் ஆச்சர்யம் உண்டா...?**


! படம் ஓடி முடித்த பின்னும் 'நியூ'வை விடாது துரத்தி, அதற்குச் சங்கிலியிட்ட வழக்கறிஞர் அருள்மொழியின் சமூக அக்கறைதான் பலரையும் ஆச்சர்யப்பட வைத்திருக்கிறது. நம் நாட்டுக்குக் குறைந்தது ஆயிரம் அருள்மொழிகளாவது தேவை.

• **அ.சுஹைல் ரஹ்மான்,**
**திருச்சி - 21**

**? தமிழக காங்கிரஸின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தினால், யாராக இருந்**



• ...மூவர்!




• ...படையில்...

தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறாரே வாசன்...?

! எது களங்கம் என்று நிர்ணயிக்கிற அளவுகோல், தமிழக காங்கிரஸிலேயே ஆளுக்கு ஆள் மாறுபடுவதுதான் சிக்கலே!

● ஆர்.கே.ராமு, குடியாத்தம்

? சமீப காலமாக தமிழ் சினிமாவில் திறமையான நடிகர்களுக்குத் தட்டுப்பாடு



• தொலைந்த பண்பாடு...



• பொறுத்துப் பார்ப்போம்!

ஏற்பட்டிருப்பதாக பாக்யராஜ் கூறியிருப்பது எதைக் காட்டுகிறது?

! 'அசோகமித்ரனி'ல் அவர் திரும்பவும் நடிக்க வந்துட்டாரில்ல... இனி நிலைமை மாறிடும்! "திறமையான நடிகர்களுக்குப் பஞ்சமே இல்லை" என்று சொன்னாலும் சொல்லுவார், பார்த்துக்கிட்டே இருங்க!

● எல்லார், புதூர்

? உள்ளாடை சமாசாரங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஃபேஷன் ஷோக்கள் பற்றி...?

! உலகமயமாக்கலுக்குக் கொடுக்கப்படும் விலை இது. கலாசார அதிர்ச்சிகள் தொடரும். எனினும் பாரதப் பண்பாட்டை விடாமல் காப்போம் என்ற மன உறுதியை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும். ஜப்பான், இந்த விஷயத்திலும் ஒரு நல்ல முன்னுதாரணம்.

● மதுரை முருகேசன், திருச்சி - 18

? ஜெயா டி.வி நிருபராக, துக்ளக் படிப்பவராக இருந்தால் ராமதாஸிடம் கேள்வியே கேட்கக் கூடாதா? ராமதாஸின் அதீத கோபம் எதைக் காட்டுகிறது?

! ராஜாஜியை முரசொலி கடுமையாக விமர்சித்து வந்த காலகட்டத்தில், "முரசொலி நிருபர் இருக்கிறாரா?" என்று கேட்டு, அவருக்கு முதல் வாய்ப்பைத் தந்த மூதறிஞரின் பண்பாடும், சகிப்புத் தன்மையும் இன்றைய அரசியலில் மறைந்து விடுவதை உணர்த்துகிறது.

● எஸ்.சரவணன், வேலூர் - 1 *

? 'குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் (விஞ்ஞானம்) என்பது உண்மை எனில், இன்னமும் குரங்குகள் குரங்குகளாகவே இருப்பது ஏன்...?

! பரிணாம வளர்ச்சி என்பது, எல்லாக் குரங்குகளும் மனிதனாக மாறுகிற நிகழ்வு அல்ல. அவசியத்துக்கும் தேவைக்கும் ஏற்ப, உடற்கூறுகளும் மூளையும் வளர்ந்து மாற்றம் பெறுவதாகும். டார்வினும் எல்லா வகைக் குரங்குகளும் மனிதனாக மாறிவிட்டதாகக் கூறவில்லை. குறிப்பிட்ட ஒரு வகைக் குரங்கு பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்பதே டார்வினின் தத்துவம்.

● என்.கந்தசாமி, மதுரை - 17

? பெருமாளுக்கு சுப்ரபாதம் பாடி மகிழ்வித்த எம்.எஸ்ஸுக்கு, திருப்பதியிலே சிலை நிறுவி பெருமை சேர்க்கப் போகிறார்களாமே?

! எம்.எஸ். இதை ஒப்புக் கொண்டிருக்கவே மாட்டார். தமக்கு நினைவிடமோ, சிலையோ, நினைவுச் சின்னமோ அமைக்க வேண்டாம் என்று தமது கடைசி விருப்பங்களை உயிலில் எழுதி வைத்துள்ளார் எம்.எஸ். ○

**ரூ.100/- பரிசு பெறுபவர்:**

இரா. சக்கரபாணி
12, இ.எம்.ஜி.ஆர்.நகர்,
இரண்டாம் தெரு,
கோ.புதூர் - 625 007

*** ரூ.50/- பரிசு பெறுபவர்:**

எஸ்.சரவணன்,
C/o ஆர்.சம்பத்,
78 / 35, பெருமாள் கோயில் தெரு,
வேலப்பாடி (அஞ்சல்)
வேலூர்- 632 001

# சின்னான் செய்திகள்

'**மு**தல் கோணல் முற்றிலும் கோணல்'னு சொல்லுவாங்க. நம்ம சாரு நிவேதிதா விஷயத்துல அது அப்படியே தலைகீழ். ஆமா, சமீபத்துல அவரோட 'கோணல் பக்கங்கள்' மூன்றாவது தொகுதி வெளியீட்டு விழா நடந்துச்சு. அதுல இருந்து கொஞ்சம் கரம் மசாலா...

"சாரு எனக்கு 25 வருட நண்பன். இன்றைய நெருக்கடியில், 25 வருடங்களாக ஒரு எழுத்தாளனை நண்பனாக வைத்துக்கொள்வது சாத்தியமல்ல - ஒரே மனைவியை வைத்திருப்பது போல!" - இது நாஞ்சில் நாடன்.





* 'கோணல் பக்கங்கள்' வெளியீட்டு விழாவில்...

"சாரு, ஜோசியம் பத்தி இந்தப் புத்தகத்துல எழுதியிருக்காரு. என் தாத்தா ஜோசியர். நான் பொறந்த உடனே ஜாதகக் குறிப்பெல்லாம் எழுதி வைச்சாரு. அதன் படி, நான் 23 வயசுல அரசாங்க உத்தியோகத்துக்குப் போவேனாம். 26 வயசுல அமெரிக்காவுக்குப் போவேனாம். 58 வயசுல உயர் அரசுப் பதவியில இருப்பேனாம். இதுல எதுவுமே நடக்கல." - இது பிரபஞ்சன். "கலகங்கள் தேவை என்பதால் சாரு தேவை. இந்தப் புத்தகம் சகல வன்முறைகளுக்கும் எதிரான (!) ஓர் ஆவணம்!" - இதுவும் அவரேதான்.

"சுமார் 5000 பிரதிகள் விக்குற 'உயிர்மை'ல, கோணல் பக்கங்கள் மூன்றாவது தொகுதிக்காக ஒரு விளம்பரம் கொடுத்தேன். வந்தது ஒரே ஒரு மணியார்டர். 'காலச்சுவடு' 10 - 15 ஆயிரம் விக்கும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா சமீபத்துல அதுல 'கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு எங்களின் ஆயிரமாவது சந்தாதாரராகச் சேர்ந்துள்ளார்'னு வந்திருந்த ஒரு விளம்பரத்தைப் பார்த்து நொந்துட்டேன். கேரளாவிலதான் இலக்கியப் பத்திரிகைகள் இப்பவும் ஒரு லட்சம் பிரதிகள் விக்குது. இங்க ஹாரி பாட்டர்ங்கிற இலக்கியத்தை மட்டும் தான் காலைல நாலு மணிக்கே போய் வாங்குறாங்க!" - இது சாருவோட பெருமூச்சு! அப்புறம் 'டீக்கடை'யைப் பத்தி அதிகமா பேசிக்கிட்டாங்க. டீக்கடைன்னா என்னன்னு சாருதாசர்களுக்குப் புரியும். நாம அடுத்த மேட்டருக்குத் தாவலாம்.

**நா**காலாந்து மாநிலத்துல, ஒரு இடத்துல பி.எஸ்.என்.எல். செல் சேவையை 2003, அக்.27ல தொடங்கி வைச்ச அவரு, 9436010000ன்னு ஒரு 'சிம்'மை வாங்கி பயன்படுத்த ஆரம்பிச்சாராம். ஆச்சு கிட்டத்தட்ட ரெண்டு வருஷம். பில் 18000 சொச்ச ரூவான்னு எகிறிக் கெடக்குதாம். ஆனா இன்னும் கட்டலியாம். பார்ட்டி யாருன்னு கேக்கறீங்களா? முன்னாள் பிரதமர் வாஜ்பாய்தான். 'பி.எஸ்.என்.எல். என்ன, பி.ஜே.பி. சொத்தா?'ன்னு கேட்டு யாராவது கௌம்புங்கப்பா! ●



# தாஸ்


புச்சா வந்த படம்னாலும் தியேட்டர்ல கூட்டம் ஒண்ணும் பெருசா இல்ல. அம்பது ரூபா டிக்கெட் பின்னாடி எழுதற அளவுக்குச் சின்ன காதல் கதைதான். ஆனா, பாபு யோகேஸ்வரன் அண்ணாத்த அத்த கொஞ்சம் ஃப்ரெஷ்ஷா சொல்லியிருக்காரு. சூப்பரா ஒரு ஜாதி மேட்டரக் கோத்து வுட்டு, ஜினா வேலை செஞ்சு படத்தத் தூக்கி நிறுத்திப்புடுறாரு. ஆனா, லாஜிக்தான் ஏகத்துக்கும் உதைக்குது. ஹீரோ 'ஜெயம்' ரவி, ஆக்ஷன் ரூட்டுக்கு இந்தப் படம் மூலமா அடி போட்டிருக்காரு. ஃபுட்பால் ப்ளேயர். அதுக்காக காசு கொடுத்துப் படம் பாக்குற நம்மளையா பந்தாடணும்! 'ரொனால்டோ'வே படத்துல வர்ற ஒரு மேட்ச் மாதிரி விளையாடி இருப்பாரான்னு சந்தேகம்தான். ரேணுகா மேனன் புஷ்டியா, ஷோக்காக் கிறாங்க. நல்லா நடிக்கிறாங்க. ஆனா யக்கா, நீ ஏன் மனசுல ஒட்ட மாட்ற? உன்னைச் சொல்லிக் குத்தமில்ல... கதைல உனக்கு எதுனா ஷேர் இருந்தாத்தானே நடிப்பு எடுபடும்! வடிவேலு வழக்கம் போல கலாய்க்கிறாரு. போறாரு. கேமரா படு ஸ்பீடு. வுட்டா ஸ்க்ரீனக் கிழிச்சுட்டு வந்து படம் பார்க்கறவங்கள ஷூட் பண்ணும் போலிருக்கு. யுவன்ஷங்கர் 'கிங்' பின்னணி மியூசிக்ல ஸ்கோர் பண்ணலை (அப்பா டியூஷன் சொல்லித் தர்றதில்லையா?). பட், பாட்டுகள்ல மனுஷன் 'மன்மதன்'தான்! 'சாமிகிட்ட' நெஞ்சை அள்ளுறது அவரு மட்டும் இல்லீங்கோ... தேசிய விருது விஜய் அண்ணாச்சியும் தான்!

'சாதி'ல கிளம்பின தாஸு, மதத்துக்குத் தாவி, கடேசியா சம்பந்தமே இல்லாம தீவிரவாதத்துக்குத் தீர்வு சொல்றேன்னுட்டு, பொறுமைய சோதிக்குது. க்ளைமேக்ஸ்ல நான் சிரிச்ச சிரிப்புல பல்லே களுக் கிக்கிச்சு... 'டிக்கெட் துட்டு வேஸ்ட்'னு நினைச்சேன்... பரவால்ல, ஒரு தபா விசிட் வுடலாம்!

- லஜ்ஜாவதி



மகிழ்ச்சியின் சின்னம் மணவிழாவின் அங்கம்
ராஜ்மஹாலின் திருமணபட்டுச் சேலைகள்
சுப முகூர்த்தம் கலெக்ஷன்ஸ்
கலாச்சாரத்தின் தூண்களாய் பட்டணிந்த சிற்பங்கள்
காஞ்சிபுரம்
ஆரணி
தர்மாவரம்
பனாரஸ்
திருபுவனம் பட்டுச் சேலைகள்
மில்
பேன்சி சேலைகள்
சுடிதார்-மெட்டீரியல்கள் மற்றும்
சூட்டிங் சர்ட்டிங்குகள்
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.
போன்-2622647
AMC/MDU/05
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்.




Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka